# தீரதம்



ஆர்.எம். நௌஸாத்.

# தீரதம்

- சிறுகதைகள் -

## ஆர்.எம். நௌஸாத்

ஜீவநதி வெளியீடு

2017

| | |
|---|---|
| Theeratham | - (short stories) |
| R.M.Nawshad | -185/2 Old market road, Sainthamaruthu-01, Srilanka |
| Phone | - 071 4457593 |
| Email | - rmnawshad@gmail.com |
| blog | - theeran1959blogspot/தீராவெளி |
| Facebook | - தீரன். ஆர்எம்.நெளஷாத் |
| Copyright | - author |
| Language | - Tamil |
| First edition | - 2017 March |
| Pages | - 100 |
| Copies | - 300 |
| Price | - 300.00/- |
| ISBN | - 978-955-4676-57-2 |
| Pubished | - Jeevanathy, Kalaiaham, Alvai |
| Printed | - Baranee Printers, Nelliady |
| Cover design | - R.M.Nawshad |



## தீரன். ஆர்.எம். நௌஸாத்

தமிழ்நாடு "காலச்சுவடு" இதழ் நிறுவுனர் சுந்தர ராமசாமி 75 பவளவிழா இலக்கியப்போட்டியில் இவரது "நட்டுமை" நாவல் முதற் பரிசு பெற்றது.

இவரது "வெள்ளிவிரல்" சிறுகதைத் தொகுதி 2011ல் தேசிய அரச சாகித்திய விருதும் கிழக்கு மாகாண சாகித்திய விருதும் ஒருங்கே பெற்றுக் கொண்டது.

அக்கினிக் குஞ்சு இணையம் நடத்திய எஸ்.பொ. நினைவு நாவல் போட்டியில் இவரின் "வக்காத்துக்குளம்" நாவல் மூன்றாம் பரிசு பெற்றது.

"அகால்வதெழுதுதல் - 90" என்னும் நாவல் தமிழ்நாடு அரசின் ஆயிரம் பிரதிகளுக்கான நூலக ஆணை பெற்றது.

"தினக்குரல்" நாளிதழும் பிரான்ஸ் தமிழ் வானொலியும் இணைந்து நடத்திய சில்லையூர் செல்வராசன் ஞாபகார்த்த உலக வானொலி நாடகப் போட்டியில் "காகித உறவுகள்" என்ற வானொலி நாடகம் 3ம் பரிசு பெற்றது. "நல்லதொரு துரோகம்" என்ற சிறுகதைக்கு பேராதனை பல்கலைக் கழக தமிழ்சங்கம் முதற்பரிசாக தங்கப் பதக்கம் அளித்தது..

அத்துடன், இவரது "சாகும்-தலம்" என்ற சிறுகதை தமிழ்நாடு எழுத்தாளர் சுஜாதா அறக்கட்டளை நிறுவனம் நடத்திய அறிவியல் புனைகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்றது.

"ஞானம்" சஞ்சிகை நடத்திய புலோலியூர் க. சதாசிவம் நினைவுச் சிறுகதைப் போட்டியில் இவரது "தாய்-மொழி" சிறுகதைக்கு முதற்பரிசு கிடைத்தது.

கிழக்கிலங்கையின் சாய்ந்த மருதுவில் 1960ல் பிறந்த இவர் இலங்கை அஞ்சல்துறையில் தபாலதிபராக 31 வருடங்கள் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். கிழக்கின் இலக்கிய வரலாற்றில் தவிர்க்கமுடியாத ஒரு அடையாளம் இவர்.

– தம்பிலுவில் ஜெகா

## இந்நூலாசிரியரின் ஏனைய பிரதிகள்

- வல்லமை தாராயோ... (சிறுகதைத் தொகுதி)-2000
- நட்டுமை (நாவல்)-2009
- வெள்ளி விரல் (சிறுகதைத் தொகுதி)-2011
- கொல்வதெழுதுதல்.90 (நாவல்)-2013
- அபாயா என் கறுப்பு வானம் (கவிதைகள்-மின்நூல்) 2015
- அழித்தாயே ஆழித்தாயே...(சுனாமி கடற்கோள் காவியம்)2017
- குறு-நெல் (குறும்பாக்கள்)2017
- தீரதம் (சிறுகதைத் தொகுதி)-2017

சமர்ப்பணம்

பாவலர் பஸீல் காரியப்பர்

அவர்களுக்கு.

## நன்றிகள்

ஞானம்.

வண்ண வானவில்

செங்கதிர்

தினக்குரல்.

யாத்ரா

சருகு.

தினகரன்.

மைநா

ஜீவநதி

அக்கினிக்குஞ்சு. இணையம்

தமிழ்விழி இணையம்

எதுவரை..? இணையம்

தடாகம் இணையம்

காற்றுவெளி– இணையம்

டொக்டர். தி. ஞானசேகரன்.

பேராசிரியர். றமீஸ் அப்துல்லாஹ்

க.பரணீதரன்.

தம்பிலுவில் ஜெகா.

அஸ்மி காரியப்பர்,

ஷிதான் அத்தாப்,

## உட்பொழிவுகள்

முன்மொழிவு

வழிமொழிவு

என்மொழிவு

01 ஒய்த்தா மாமா

02 கள்ளக்கோழி

03 மறிக்கிடா

04 பொன்னெழுத்துப் பீங்கான்

05 அணில்

06 தீரதம்

07 காக்காமாரும் தேரர்களும்

08 மும்மான்

09 கபடப் பறவைகள்

10 ஆத்துமீன் ஆசை

## முன்மொழிவு

படைப்பிலக்கியத் துறையில் எழுத்தாளர் ஆர். எம். நௌஸாத் வெளியிடும் ஏழாவது நூல் இது. ஏற்கனவே தமிழ் நாடு காலச்சுவடு இதழ் நடத்திய சுந்தரராமசாமி 75 இலக்கியப் போட்டியில் பரிசுபெற்ற "நட்டுமை" நாவல், கொல்வதெழுதல் 90 நாவல், அரச சாகித்தியப் பரிசு பெற்ற "வெள்ளிவிரல்" சிறுகதைத் தொகுதி, "வல்லமை தாராயோ" சிறுகதைத் தொகுதி ஆகியவை வாசகர்களின் பார்வைக்குக் கிடைத்துள்ளன.

தற்போது உங்கள் கைகளில் தவழும் "தீரதம்" என்ற இந்தச் சிறுகதைத் தொகுதிக்கான கதைகளை அனுப்பி, "எனது இலக்கிய முயற்சிகளில் "ஞானம்" ஒரு பலமான பாதையை அமைத்துத் தந்தது, ஒரு பெரிய உந்து சக்தியாக விளங்கியது. ஞானம் ஆசிரியர் என்ற முறையில் இந்தச் சிறுகதைத் தொகுதிக்கு ஒரு முன்னுரை எழுதித் தாருங்கள்" என எழுதி யிருந்தார் நௌஸாத்.

தன்னடக்கத்துடன் அவர் இவ்வாறு எழுதியிருப்பினும், அவரது திறமைகளே அவரை ஓர் சிறந்த எழுத்தாளனாக உயர்த்தியிருக்கிறது. ஞானம் சஞ்சிகை நடத்திய சிறுகதைப் போட்டியொன்றில் "மீள் தகவு" என்ற கதைக்கு மூன்றாம் பரிசினைப் பெற்றதன் மூலம் "ஞானம்" வாசகர்களுக்கு அறிமுக மான அவர் தொடர்ந்தும் ஞானம் சஞ்சிகை வருடாவருடம் நடத்திய போட்டிகளில் முதற்பரிசு உட்படப் பலபரிசுகளைப்

பெற்றுத் தனது திறமைகளை நிரூபித்ததன் மூலம் எழுத்துலகில் தனது பலமான பாதையை வகுத்துக்கொண்டார். அவர்பெற்ற பரிசுகளும் அங்கீகாரங்களுமே அவருக்கு உந்து சக்தியாக விளங்கின.

நௌஸாத் என்னிடம் முன்னுரை கேட்டது, என்மேல் அவர் கொண்டுள்ள அபிமானத்தால் என்னைக் கௌரவப் படுத்த வேண்டும் என்ற நோக்கமே தவிர வேறேதுமில்லை என்பதை நான் உணர்கிறேன்.

இத்தொகுதியில் உள்ள "ஒய்த்தா மாமா", "கள்ளக் கோழி", "இஷ்க்" (தீரதம்) ஆகிய கதைகள் ஞானத்தில் வெளி யான போது வாசகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றன.

தான் வாழும் சமூகத்தின் மீதான பண்பாட்டு அம்சங்களையும் விழுமியங்களையும் சமூகக் கட்டமைப்பின் பல்வேறு கூறுகளையும் அவதானித்து அவற்றை உணர்வு பூர்வமாகச் சித்திரிப்பதில் நௌஸாத் வல்லவராக இருக்கிறார்.

இத்தொகுதியில் உள்ள முதலாவது கதையான "ஒய்த்தா மாமா"வை அவர் ஆரம்பிக்கும் விதமே அலாதியானது. பாசாங்கற்ற, அர்த்தம் செறிந்த பழகு சொற்களை கலையழ கோடு ஒழுங்கமைத்து வாசகர் உள்ளங்களில் ஓர் ஒட்டிமுப்பை அவர் ஏற்படுத்திவிடுகிறார்:

"எனக்குப் பத்து வயதிருக்கும்போது அது நடந்தது.. ஒய்த்தா மாமாவைக் கண்டாலே எனக்குப்பயம். அவர் சிறுவர் களின் குஞ்சாமணியை தயைதாட்சண்யமின்றி அறுத் தெறிகிற வர் என்று கேள்விப்பட்டதிலிருந்து இந்தப்பயம். இது நிச்சய மாக நமக்கும் எப்போதோ நடக்கத்தான் போகிறதென்று உணர்ந்ததிலிருந்து அவரைக்கண்டாலே குலை நடுக்கம்தான். அப்படி இவர் குஞ்சாமணியை அறுத்தெறிகிறவர் என்றால், நம்மட வாப்பா, பெரியப்பா, பெரிய ஆம்பிளையள் எல்லாம் எப்படி ஒண்டுக்குப் போகிறார்கள் என்ற கேள்வி மண்டையைக் குடையும்..."

இப்படியாகத் தொடங்கி, தொடர்ந்து சுன்னத்துக் கலியாணம் எப்படி நடத்தப்படுகிறது என்ற செய்திகளையெல்லாம் விலாவாரியாகக் கதையில் ஆவணப்படுதியிருக்கிறார் ஆசிரியர். அவரது நுட்பமான பார்வையும், சொல்நேர்த்தியும் மிகவும் சுவாரஸ்யமாக இக்கதையை நகர்த்திச் செல்கின்றன. சமூகம் சார்ந்த யதார்த்தப் பார்வையுடன்கூடிய விபரணை ஆசிரியரின் சிறப்பான சமூக அவதானிப்பைப் புலப்படுத்துவதாய் அமைந்துள்ளது.

"கள்ளக் கோழி" என்ற சிறுகதையில், கல்யாணம் ஆகி மூன்றே மாதத்தில் கணவனும் மனைவியும பிரிய நேரிடுகிறது. கோபித்துக் கொண்டுபோன கணவனையும் மனைவியையும் சேர்த்துவைக்க ஆத்தப்பா கிழவன் முயற்சி எடுக்கிறான்.

"டே ஆத்தப்பாக் கௌவா... ஒண்ட பேத்தியைப் பண்ணின நாள்ள இரிந்து என்ட மகனுக்கு யாவாரத்தல நட்டம்டா... நக்கு வள்ளா... குறி கேட்டுப்பார்த்துட்டம் அவள வெலக்கினாத்தான் முசிவத்தும் வெலகுமாம். இனி இஞ்ச வராதடா கௌவா காதிக் கோட்டுலதான் வழக்கு விளக்கம் எல்லாம்..." என மாப்பிள்ளையின் அம்மாக்காரி கூறிவிடுகிறாள்.

வருடங்கள் இரண்டு ஓடிவிட்டன. வேறுவழியின்றி பேத்திக்கு கிழவன் வேறு மாப்பிள்ளை பார்க்கிறார். இந்த நிலையில் பேத்தி இரவில் மாட்டுத் தொழுவத்தில் இரகசியமாக ஓர் ஆடவனைச் சந்திப்பதை வழக்கமாக்கிக் கொள்கிறாள். இதனை ஆத்தப்பாக்கிழவன் அறிந்து கொள்கிறான். ஆனால் பேத்தியிடம் எதுவும் கேட்க வில்லை. இரவில் தனது பேத்தியைக் காணவரும் அந்த ஆடவனை ஒளிந்திருந்து வெட்டிச்சாய்க்க அரிவாளுடன் வீட்டின் பின்புறத்திலுள்ள பெரப்பம் பத்தைக்குள் காத்திருக்கிறான் கிழவன்.

கதை முடிவை நோக்கிப் பின்வருமாறு நகர்கிறது

"அருவாள ஓங்க.. டோர்ச்சி லைற்று வெளிச்சத்துல அவண்ட சொத்தையப் பாத்த ஆத்தப்பா கௌவன் வெறைச்சிப்

போய்ட்டான். ஒடன அருவாக்கத்திய கீள போட்டுட்டான், வெக்கத்துல மெலச்சிப்போய் அப்பிடியே செல மாய்ரி நிண்டுட்டான்... அப்பிடியே குந்திட்டான்..

அந்தக் கள்ளக்கோழி யார் என்பது "கிளைமாக்ஸ்".

வாழ்க்கையை யதார்த்தமாகப்படம் பிடித்துக்காட்டி நம் இதயங்களில் ஆழமாகப்பதிய வைக்கிறது இக்கதை. ஆசிரியரின் சமூக அனுபவம் இக்கதையைக் கட்டமைப்பதில் பெரிதும் உதவியிருக்கிறது. வாழ்வியலின் மெய்ம்மை இக்கதை யில் வலுப்படுத்தப்படுகிறது. மானிடத்தையும் மானிட நடத்தை வேறுபாடுகளையும் மானிட நேயத்தையும் இக்கதை பிரதிபலிக்கின்றது.

"பொன்னெழுத்துப் பீங்கான்" என்ற சிறுகதையில் ஆசிரியர் சொல்லவரும் செய்தி மிகவலுவானது. சவரியத்தும்மாவின் புருஷன் ஏகபத்தினி விரதன். பிற பெண்களை ஏறெடுத்தும் பார்க்காதவன். சவரியத்தும்மாவுக்கு 26 ஆவது வயதாக இருக்கும்போது வயல்காவலுக்குச் சென்ற கணவன் புலிப்படையினரால் கொல்லப்படுகிறான். கைம்பெண்ணான அவள் மறுமணம் செய்யாது தனது பத்து வயது மகளை வளர்த்து ஆளாக்குவதில் பெருமுயற்சி எடுக்கிறாள். மகளும் படித்து திறமையாகச் சோதனைகளில் சித்தியடைந்து அரசாங்கத்தினால் மேல்படிப்புக்கு லண்டனுக்கு அனுப்பப் படுகிறாள். அவ்வாறு சென்ற மகள் சிலகாலத்தின் பின் லண்டனில் இருந்து கடிதம் அனுப்புகிறாள். அத்துடன் தனது புகைப்படம் ஒன்றையும் சேர்த்து அனுப்புகிறாள். அந்தப் புகைப்படத்தில் ஒரு வெள்ளைக்காரனும் அவள் அருகிலே நிற்கிறான். அதனைக்கண்டு கலக்கமுற்ற சவரியத்தும்மாதனது மகளுக்கு அறிவுரை கூறுவதாக இச்சிறுகதை கட்டமைக்கப் பட்டுள்ளது. சவரியத்தும்மா, தான் கூறுவதை ஒரு "கெசட் பீஸில்" பதிவு செய்து மகளுக்கு அனுப்புகிறாள்.

சவரியத்தும்மா தனது கணவனுடன் வாழ்ந்த காலத்தில், அவனால் அவளுக்குக் கூறப்பட்டதாக வரும் பகுதி

இக்கதையின் ஆணிவேர்:

"டியே.. சவரியத்து.. இந்தப் பொன்னெழுத்துப் பிங்கானில் மட்டுந்தாங்கா நான் சாப்டுற.. பலபல பீங்கானு கள்ள சாப்பிடுற பளக்கம் எனக்கு ல்லடி.. நீ யான் எண்ட பொன்னெழுத்துப் பிங்கான். ண்டு சொல்லி என்னைப் பார்த்து கண்ணைச் சிமிட்டிச் சிரிச்சாரே, வெளங்கிச்சா புள்ள ஒனக்கு அது ஏணுண்டு.. அதனுட கருத்து என்னண்டு..? பெரிய இங்கிலிசி சிங்கில மெல்லாம் படிச்சிரிக்கிறியே.. இதர அர்த்தம் தெரியுமா நோக்கு...?

இதில் ஆசிரியர் சொல்லும் வாழ்க்கைக் கூறுகளை மிக உருக்கமாகவும் நேர்மையாகவும் சித்திரிக்கிறார். நமது பாரம் பரிய சமூகப் பெறுமானங்களின் சிறப்பை வெளிப்படுத்து கிறார். இச்சிறுகதையின் கதைப்பின்னலுக்கு அப்பால் ஓர் உன்னத வாழ்க்கையைத் தரிசிக்க முடிகிறது.

"குறியீட்டியம்" ஒரு நேர்த்தியான கலைவடிவமாகும். அது சுவைஞனை சிந்திக்கவும் தேடல்செய்யவும் வைக்கிறது. "மும்மான்" என்ற சிறுகதை எமது நாட்டின் இனப்பிரச்சினை தொடர்பான வரலாற்றை குறியீட்டுப்பாணியில் விபரிக்கிறது.

சிங்கள மக்களைச் சிங்கங்களாகவும், தமிழ்ப் போராளி களை புலிகளாகவும், முஸ்லிம்களை முயல்களாகவும் உரு வகித்துக் கதையை நகர்த்திச் செல்லும் ஆசிரியர், சிங்கங் களுக்கும் புலிகளுக்கும் நடுவே முயல்கள் அநியாயமாக அகப் பட்டுப் பேரழிவைச் சந்தித்த வரலாற்றைச் சித்திரிக்கின்றார். எதிர்காலத்தில் இந்தப் பேரழிவுகளிலிருந்து முஸ்லிம்கள் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள, செய்ய வேண்டியது என்ன? என்ற கேள்விக்கு விடையிறுப்பதாக அமைகிறது இச்சிறுகதை யின் முடிவு. ஆசிரியர் சமூகத்துக்குச் சொல்ல வந்த செய்தியைக் கூறுவதற்கு போரியல் வரலாற்று நிகழ்வுகளைத் துணையாகக் கொண்டிருக்கிறார். மிகவும் கண்ணியமாகவும் நேர்மையாக வும் அழகுறச் சொல்லிச் செல்லும் அவரது முயற்சி பராட்டப் படவேண்டியது.

"அணில்" என்ற சிறுகதை பேசும் அரசியல் வித்தியாசமானது. இலங்கை அரசியல் வாதிகள் இனவாதம் பேசி அரசியல் நடத்தினாலும் இந்த நாட்டின் சாதாரணப் பொது மக்கள் மத்தியில் உறவும் ஒற்றுமையும் நேயமும் இருக்கவே செய்கின்றன என்பதை இக்கதையிலே காண்கிறோம்.

நௌஸாத் தொழில் ரீதியாக ஒரு தபாலதிபராகக் கடமையாற்றியவர். அவர் தனது நேரடி அனுபவங்களையே கதையாக்கியிருக்கிறார் என்று எண்ணத் தோன்றும் அளவுக்கு "அணில்" என்ற கதையின் கதைக்களம், பாத்திரவார்ப்பு, கதைச் சம்பவங்கள், சூழல் யாவும் தத்ரூபமாகச் சித்திரிக்கப் பட்டுள்ளன.

பெரிய தபாலதிபர் விநாயகமூர்த்தி ஒரு யாழ்ப்பாணத் தமிழர். உதவித் தபாலதிபர் நஸீர் ஒரு முஸ்லிம். தபாற்சேவகன் இந்திக ஒரு சிங்களவர்.

பெரிய தபால் அதிபர் விநாயகமூர்த்தி யாழ்ப்பாணப் பேச்சு மொழியில் கறாராக அரசியல் பேசுவார்: "அடே நஸீர்... இந்திக்க கேளுங்கடா.. ஓமந்த கேம்ப எக்க அபே கொட்டி அற்றாக் கறன்ட வெலாவட்ட... (ஓமந்தைக் காம்பை எங்கள் புலிகள் தாக்கும்போது...) என்று புலிப்படைப் புகழ் பாடத்தொடங்கி ஸ்ரீ போராட்டம் தொடக்கம் தரப்படுத்தல் சட்டம்... சிங்களம் மட்டும் சட்டம்... அதன் விளைவாக தமிழர் பாதிப்புகள்... அதன் தொடர்ச்சியான போராட்டங்கள், அது ஆயுதப் போராட்டமாக உருவெடுத்த வரலாறு... என்றெல்லாம் தொடரவே நஸீரும் இந்திகவும் அணிலும் புன்னகைத்தபடி வேறுவழியின்றி வேண்டா வெறுப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

இப்படியாகப் பேசுகின்ற தபாலதிபர், ஒருநாள் இந்திகவை சாராயம் வாங்கக் கடைக்கு அனுப்பிவிட்டு அவன் அன்பாக வளர்க்கும் அணிலை வெட்டிக் கறியாக்கி விடுகிறார்.

இதனை அறிந்த நஸீர் அதிர்ந்து போய்விட்டான்.

"இப்ப இந்திக வந்தான் எண்டால் என்ன நடக்கும்..?

இங்க நடக்கப் போற கொலைக்கு நான் சாட்சியா இருக்க விரும்பேல்லை. திறப்பைப் புடிங்க ஐயா... நான் வீட்டை போறன்... என்ன மடத்தனம் இது... அவன்ட அணிலைப் புடிச்சி... பாவம் புண்ணியம் பாக்காம கொண்டு... சே... ஐயா கடைசியாச் சொல்லுறன் நீங்க இஞ்ச இருக்கிறது நல்லா யிருக்காது. டக்கெண்டு வெளிக்கிட்டு எங்கயாச்சும் போங்க... இல்ல என்னோட வாங்க.. அவன் இந்திகவிட அண்ணன்மார் ஆமில இருக்கான்.. அனுராதபுரத்தில் அறுத்து ஒரு மாதமாகல்ல... சே... என்ன செய்யப் போறீங்க ஐயா..?

வீட்டுக்குச் சென்ற நஸீரால் நிம்மதியாக இருக்கமுடிய வில்லை. பெரியவர் கொலைசெய்யப் பட்டுவிடுவாரா என மனம் பதைபதைத்துக் கொண்டிருந்தது. இரவு தொலைபேசி யில் பெரியவருடன் தொடர்புகொள்ள முயல்கிறான். எதிர் முனையில வெகுநேரமாகியும் பதிலில்லை.

கவித்துவமான உரைநடை கதையின் இலக்கியப் பெறுமானத்தை வலுவுடையதாக ஆக்கிவிடுகிறது.

கதைகளைக் கட்டமைப்பதில் ஆசிரியர் தேர்ந் தெடுக்கும் உத்திமுறைகள் பற்றியும் விசேஷமாகக் குறிப்பிட வேண்டும். "ஒயத்தா மாமா" சிறுகதை ஒரு சிறுவனின தற்கூற்றாக அமைந்துள்ளது. "பொன்னெழுத்துப் பீங்கான்" சிறுகதை ஒரு தாய் மகளுக்கு சி.டி.யில் தன் பேச்சைப்பதிவு செய்து தபாலில் அனுப்புவதாக அமந்துள்ளது. "மும்மான்" குறியீடாகச் சொல்லப்படுகிறது. சில கதைகள் ஆசிரியர் கூற்றும் பாத்திரங்களின் உரையாடல்களுமாக வளர்க்கப்படு கின்றன.

"காக்கா மாருகளும் தேரர்களும்" என்ற கதையில் ஆசிரியர் ஒரு புதிய உத்தியைக் கையாள்கிறார். இக்கதை பத்திரிகைச் செய்திகள் பலவற்றின் தொகுப்பாக அமைந் துள்ளது. நமது நாட்டில் பிக்குகள் சிலர் தினம் தினம் முஸ்லிம் களுக்கு எதிராகப் பரப்பும் இனரீதியான செய்திகளும், முஸ்லிம் தலைவர்கள் சிலரின் நழுவல் போக்குகளும். ஆலிம் சபை

யினரின் இயலாமையும், முஸ்லிம் அமைச்சர்கள் சிலரின் அறிக்கைகளும் செய்திக் கீலங்களின் தொகுப்பாக அமைந் துள்ளன. இந்த நாட்டில் முஸ்லிம்களுக்கு ஏற்படும் இனரீதி யான துன்புறுத்தல்களையும் அவற்றிற்கு எதிராக எந்த நடவடிக்கைகளையும் எடுக்க முடியாத கையறுநிலையையும் படம் பிடித்துக்காட்டும் ஆசிரியர், இக்கதைமூலம் ஒரு சமூக விளிப்புணர்வை ஏற்படுத்த முயற்சிக்கிறார்.

இத்தொகுப்பில் உள்ள தீரதம், கபடப்பறவைகள், ஆத்துமீன் ஆசை ஆகிய கதைகளும் இலக்கியப் பெறுமானம் கொண்ட கதைகளே.

நௌஸாத்தின் சிறுகதைகளின் உயிரோட்டமான அம்சம் அவரது உரைநடை. அனுபவத்தைத் தொற்ற வைப்பதற்கு ஏற்ற வகையில் தேர்ந்தெடுத்த உணர்ச்சிக் கூறுகள் நிறைந்த - அதேவேளை சமூக யதார்த்தத்திலிருந்து விட்டக லாத நடைச்சிறப்பு அவருடையது.

நௌஸாத் கதைசொல்லும் முறையில் ஒரு புதுமை இருக்கிறது. புதுப்புனல் ஊற்றின் குளிர்மைப் பிரவாகம் கொள்கிறது. அவருடைய சிறுகதைகளைப் படித்து முடித்ததும் அவைதரும் உணர்வுகள் படிப்பவர் மனதில் தொற்றி நிற்கின்றன.

மேலும் பல வெற்றிகள் எதிர்காலத்திலும் அவருக்குக் காத்திருக்கின்றன என்பதை இச்சிறுகதைத் தொகுதி கட்டியம் கூறுவதாய் அமைந்துள்ளது. நௌஸாத்துக்கு எனது மனப் பூர்வமான வாழ்த்துக்கள்.

தி. ஞானசேகரன்
"ஞானம்" சஞ்சிகை பிரதம ஆசிரியர்
3-பி, 46ஆவது ஒழுங்கை
கொழும்பு -06
29-06-2016

## வழிமொழிவு

சமூகங்களின் அடையாளத்தை வெளிப்படுத்துவதில் இலக்கியங்களுக்கு முக்கிய பங்குண்டு. ஈழத்தில் தமிழ் பேசும் இரு சமூகமானதமிழர்களும் முஸ்லிம்களும் தமது அடை யாளத்தைவெளிப்படுத்துவதற்கு இலக்கியத்தை முக்கிய சாதனமாகப் பயன்படுத்திஉள்ளனர். “மரணத்துள் வாழ்வோம்” என்றகவிதைத் தொகுதி ஈழத்துத் தமிழ் சமூகத்தின் ஒட்டுமொத்தமானபோராட்டவலியைவெளிப்படுத்துவதாக அமைந்தது. இதேபோன்று “மீசான் கட்டைகளில் மீளஎழும் பாடல்கள்” என்றதொகுதி போராட்டத்தின் உக்கிரத்திற்குள் நசுங்குண்ட முஸ்லிம்களின் வலியைவெளிப்படுத்தியது. அதேநேரம்தொகுதிகளாகவெளிவராவிடினும் 1980களுக்குப் பின்னர் ஈழத்தில் வெளிவந்தபெரும்பாலானசிறுகதைகள் அவ்வச் சமூகஅடையாளத்தைவெளிப்படுத்துவதில் பெரும் பங்கு வகித்தன.

1950களில் அ.ஸ.கிழக்கிலிருந்து சிறுகதைஎழுத முனைந்தபொழுது வேறொருவிதமான நெருக்கடியைச் சந்தித்தார். தமிழகசஞ்சிகைகளுக்குஅவர் எழுதிய சிறுகதை களில் இருந்த இங்குள்ளஊர்ப்பெயர்களும் ஆட்பெயர்களும் திருத்தப்பட்டுத் தமிழகப் பாணியிலே வெளிவந்தது. ஈழத்துச் சுதேச உணர்வுகளுடன் எழுதப்பட்ட அவரது கதைகள் செங்கல் பட்டுவாகவும் ஆபீசாகவும் தலைமைக்குமாஸ்தாவாகவும்

திருநெல்வேலிச் சந்தியாகவும் மாற்றப்பட்டவரலாறுஉண்டு. அதுபோக ஷரிஆ சம்பந்தப்பட்டபிரச்சினைகளைக் கதைக் கருவாகக் கொண்டுஅவர் சிலகதைகளைஎழுதியவரலாறும் உண்டு. இந்தத் தொடர்ச்சிபோக 1980களில்தான் தமது சொந்தசமூகஅடையாளங்களை இயல்பாகவும் வேண்டு மென்றும் தமதுகதைகளுக்குள் கொண்டு வர நமது எழுத்தாளர்கள் முனைந்தனர்.

இந்தவரிசையில் சாய்ந்தமருதைச் சேர்ந்த தீரன் ஆர்.எம். நௌஸாத் "வல்லமைதாராயோ", "வெள்ளிவிரல்" என்ற இரு சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டவர். இவரது பிந்திய சிறு கதைத்தொகுதியில் இனப்பிரச்சினை தொடர்பான பல்வேறு கதைகள் வெளிவந்தபோதும் முஸ்லிம் சமூகம் சார்ந்த சில கதை களும் வெளிவந்தன. அதேபோன்று இத் தீரதம் என்ற தொகுதி யில் வெளிவந்தகதைகளும் இனப்பிரச்சினை சார்ந்ததும் சமூக அடையாளங்களை வெளிப்படுத்தும் கதைகளாகவும் அமைந் துள்ளன.

அதேநேரம் "நட்டுமை", "கொல்வதெழுதுதல் 90" ஆகிய இரண்டு நாவல்களையும் தீரன் எழுதியுள்ளார். கிழக்கில் நாவல் துறையின் வளர்ச்சி மிகவுமே போதுமானதல்ல. அவ்வாறு இருப்பினும் இவ்விரு நாவல்களையும் முக்கியமான நாவல்களாகக் கொள்கிறபோதும் இதனுள் உள்விழுந்து பார்க் கிறபோது விமர்சன ரீதியாகச் சிலகேள்விகளை எழுப்ப வேண்டிய தேவையிருக்கிறது. அதேபோன்று தீரதம் என்ற இத்தொகுதியில் வெளிவந்தசிறுகதைகள் சிலவற்றைப் பற்றியும் சிலகேள்விகள் எழுப்பவேண்டியிருக்கிறது. ஒட்டு மொத்த மாகக் கிழக்கு முஸ்லிம் சமூகத்தின் அனுபவங்கள் இந்தக் கதை களில் பதிவாகியிருப்பதுகுறிப்பிடத்தக்கது.

"ஒய்த்தாமாமா", "பொன்னெழுத்துப் பீங்கான்", "தீரதம்" முதலானகதைகள் முஸ்லிம் சமூகம் சார்ந்த மிக முக்கிய மான கதைகள். இப்போதைய சிறுவர்களுக்கு ஒய்த்தாமாமா

பற்றிய அனுபவம் இருப்பதில்லை. ஒய்த்தாமாமாவின் வேலைகள் எல்லாவற்றையும் வைத்தியர்கள் பாரமெடுத்துக் கொண்டார்கள். முஸ்லிம்களிடம் சாதிஉண்டா என்று கேட்பவர்களுக்கு ஒய்த்தாமாமா ஓர் ஆதாரமாக அமையக்கூடும். ஆனால், அந்தச் சமூகக் கட்டுமானத்தைப் பற்றி தீரன் சொல்ல வரவில்லை என்று நினைக்கிறேன். அதேநேரம் ஒய்த்தா மாமாவைப் பற்றிய ஒரு பதிவினை தீரன் மிகஅற்புதமாகக் கொண்டுவந்திருக்கிறார்.

"பொன்னெழுத்துப் பீங்கான்" லண்டனுக்குச் சென்ற தன் மகளின் செய்தியை அறியவிரும்பும் தாயின் ஏக்கத்தை வெளிப்படுத்துகின்ற ஒரு நல்லகதை. அவள் பக்கத்தில் ஒரு வெள்ளைக்காரனோடு நின்று எடுக்கப்பட்டஒரு புகைப்படப் படத்தைக் கண்டவுடன் அந்தத் தாய்க்கு ஏற்பட்ட மனஉணர்வு மிகஅற்புதமாக இந்தக் கதையில் வருகிறது. புலிகளினால் கொலை செய்யப்பட்டதன் கணவர் ஒரே பீங்கானிலே பொன்னெழுத்துப் பீங்கானிலே சாப்பிட்ட கதையை அந்தத் தாய் இக்கதையில் விபரிக்கிறாள்.

> "அப்படிப்பட்ட எனக்கிப் பொறந்த ஒனக்கிட்டயும் அந்தப் பொன்னெழுத்துப் பீங்கான்தான் இரிக்கிம்.. அதுல நீ ஆரையும் சாப்பிட உடமாட்டாய் ண்டும் எனக்கித் தெரியிம்.. ண்டாலும் புள்ளே.. எண்ட மனம் கெடந்து அல்லாடுது.. ஒடன இந்த கெசட்டுப் பீசக் கேட்ட ஒடனே... நாட்டுக்குப் பறந்துவாடா எண்ட கண்டு மகளாரே! நீ வெராட்டி எண்ட மய்யத்துலதான் முளிப்பாய்.. செல்லிட்டன்.. வல்ல பெரிய நாயன் ஒனக்கு ஒதவி செய்யட்டும்.. ஆமின்... ம்க்க்க்..ம்ம்ம்."

கிராமிய உணர்வு ததும்பும் இக்கதையில் பொன்னெழுத் துப் பீங்கான் இங்கு ஒரு குறியீடாக வருவதாகவே நான் உணர்கிறேன். இக்கதையிலும் முஸ்லிம் உணர்வு சார்ந்த வியாக்கியானம் ஆங்காங்கே வருகிறது.

தீரதம் என்பது இறைகாதலை வெளிப்படுத்துகிற மிகமுக்கியமான ஒருகதை. சூபி இசம் சார்ந்த இக்கதை பழைய மெய்ஞ்ஞான பாடல்களின் இன்னுமொரு வியாக்கியானமாக உரைநடையில் வந்த ஒன்றாகவேநான் நோக்குகிறேன். புதுமைப்பித்தன் முதலான பலசிறுகதை ஆசிரியர்களும் இந்தத் தத்துவார்த்தரீதியான ஆன்மீகம் சார்ந்த கதைகளை எழுதியிருக் கிறார்கள். அவ்வகையில் முஸ்லிம்கள் சார்ந்த ஆன்மீகரீதியான உணர்வினை வெளிப்படுத்துகிற மிக எளிய ஒருகதையாகவே தீரதம் கதையைக் கொள்ளலாம்.

கிராமிய அனுபவங்களைக் கூறுகிற அதுவும் கிழக்குப் பிரதேச கிராம அனுபவங்களைக் கூறுகிற ஒரு நல்லகதை "மறிக்கிடா. ஆனால், இக்கதையைப் பொறுத்தவரையில் மாற்று இனப் பாத்திரங்கள் கதையாகி இருப்பது நமது இன உறவுக்கு அப்பாலே முரண்படத்தக்க கேள்விகளையும் எழுப்பக் கூடும். இப்படியான கதை சொல்லுகிறபாங்கு ஈழத்துச் சிறுகதை மரபிலே உண்டு. மிகக் கவனமாக இந்தமாற்று இனப் பாத்திரங்களைக் கையாள்வதில் ஆசிரியர்கள் மிகப் பொறுப் புடன் செயற்பட வேண்டிய தேவையிருப்பதாகவும் நான் உணர்கிறேன்.

"அணில்" இன ரீதியான விவகாரங்களை வெளிப்படுத்து கிற ஒருமுக்கியமான நல்லகதை. இதேபோன்று புதியஉத்தியில் அமைந்த இன விவகாரங்களைக் கையாள்கிற மற்றுமொருகதை "காக்காமாரும் தேரர்களும்" இக்கதை வெறும் செய்திகளைத் தொகுத்துச் சொல்வதாக இருந்தாலும்,

"இதெல்லாம் ஒருசிறுகதையா?" என்று முகத்தில் வீசினார் பத்திரிகைஆசிரியர். "இதெல்லாம் சிறுகதையல்ல.. பெரும்பெரும் கதைகள்..." என்று சொல்லிவிட்டு நடையைக் கட்டினேன்.

இக்கதையிலுள்ள "பெரும் பெரும் கதைகள்" என்ற சொல்லின் மூலமே இச்சிறுகதையின் முழு அர்த்தத்தையும்

ஆசிரியர் வெளிக்கொண்டு வருகிறார். இவ்வகையான கதை களை தீரன் முன்னரும் எழுதியுள்ளார். "மும்மான்" என்ற கதை யும் இன ரீதியான விவகாரங்களை வெளிப்படுத்துகிற நல்லகதை.

இலக்கியக்காரரர் ஒவ்வொருவருக்கும் அவரவர் வீட்டிலே இருக்கிற பிரச்சினைகளை ஒரு அற்புதமான உத்தி யோடு அணுகியிருக்கிற "கபடப்பறவைகள்" என்ற கதை சுவாரசியமானதுதான்.

மேலும்சில கதைகளோடு அமைந்த இந்த தீரதம். என்ற தொகுதி ஒருநல்ல சிறுகதை ஆசிரியன் ஆர்.எம். நௌஸாத் என்பதற்கு மிகப் பெரும் சான்றாகும். நல்ல படைப்புக்களை வாசிக்கின்றபோது இன்னும் இன்னும் செழுமைபெற்ற நல்ல கதைகள் வந்துசேரும். அதுமாத்திரமன்றி இந்தக் கதைகளைச் செப்பனிடச் செப்பனிட இன்னும் நல்லகதைகள் வந்துசேரும். நௌஸாத்தின் கதைகள் புதியஅனுபவங்களைத் தருகிற நல்லகதைகள் என்பதில் நமக்குச் சந்தேகமில்லை. தீரதம் ஆசிரியருக்கு நமது பிரார்த்தனைகளும் வாழ்த்துக்களும் என்றும் உண்டு.

**கலாநிதி றமீஸ் அப்துல்லாஹ்,**<br>
**தலைவர்,**<br>
**மொழித்துறை,**<br>
**தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.**<br>
**ஒலுவில்– சிறிலங்கா.**<br>
**2016.11.10**

## என் மொழிவு

சிறுகதைகளின் வார்ப்பு என்பது தனி ஒரு கவர்ச்சிகர மான நுட்பம்... ஒரு சிறுகதையை மிக நீண்ட முழுநாவலாக்கி விடுவோரும் ஒரு நாவலையே ஒரு சிறுகதையாக்கி விடு வோரும் இந்த நுட்பம் தெரியாதோரே...இது விரிவான விசயம்... ஒரு சிறுகதையின் வெற்றிக்கு பல காரணங்கள் இருந்த போதிலும், என்னைப் பொறுத்த வரையிலும் இதுவரை அறியப்படாத தளங்களில் இருந்தும் அறியப்பட்ட தளங்களில் உள்ள, தெரியப்படாத பக்கங்கள் பற்றியும் கூடுதலாகச் சிந்திக் கிறேன். முதலில் நுகர்பவரை கதைக்குள்ளே வரவைக்கிறேன். அப்புறம் அவர் என்னை வாங்காமல் போக முடியாதபடி செய்து விடுவது என் கதைத் தந்திரம். இதில் மறைப்பதற்கு ஒன்றுமில்லை. எல்லோரும் ஒரே விதமாக "கதை"த்துக் கொண்டிருப்பதில் எனக்குச் சம்மதமில்லை. அதில் அர்த்தமில்லை. இக்காலத்தில் கூட என்னால் இன்னும் வெகு சுதந்திரமாக எழுத முடியவில்லை என்றே விசனிக்கிறேன்.

ஒரு கணத்தில் மின்னி மனதில் வீழ்படிகின்ற கருவைப் படைப்பதில் எத்தனையோ விசயங்களை யோசிக்கின்றேன். பாத்திர வார்ப்பு, கதா மாந்தர், நிகழ்தளம் யாதர்த்தப் பூச்சு, மொழிநடை, உரையாடல் என்றெல்லாம் படைப்பின் முன்னுள்ள நிலை மகாகுழப்பமானது. எல்லாவற்றையும் கருத்திற் கொண்டு உருவாக்கிய படைப்புரு என்னை இலேசில்

திருப்திப்படுத்துவதில்லை. மீண்டும், செவ்விதாக்கல் என்ற செதுக்கும் தொழிற்சாலையிலிட்டு (அது எத்தனை நாளாகுமோ தெரியாது) கடைச்சல் வேலை செய்கின்றேன். அது ஒரு தனிக்கலை. உண்மையில் படைப்புலகம் ஒரு இருள். படைப்புத் திறமை ஒரு அருள். அது எல்லோருக்கும் அருளப்படுவது கிடையாது. நினைத்தவுடன் பேப்பரை எடுத்து கதை (எழுதி) விடுவதை சகித்துக் கொள்ள முடியாது...

ஒரு கவிதைக்குள் அடக்கி விட முடியாமல் திணறிக் கொண்டிருக்கும் "கரு" த்-துகள்கள் வியாபித்து வெடிப்பது சிறுகதையில்தானே... அந்தப் பிரசவம் தரும் வலி இனிது. அதன் வடிவமைப்புகள் பெரிது.. அதனூடான சஞ்சாரம் ஒரு ஆபத்தான அழகு... ஒரு சிறுகதையைப் படித்த பின் அக்கதை மாந்தருடன் வாசகர் வாழும் காலமெல்லாம் அக்கதையும் அதன் தயாரிப்பாளியும் நித்திய ஜீவியமடைகிறார்கள் என்பதே உண்மை.

00

ஏறக்குறைய 35 வருடங்களாயிற்று... இந்த இலக்கிய வண்டியில் ஒரு சக பயணியாக உங்களுடன் நான்... கல்முனை ஸாஹிறா; இலக்கியப் பண்ணையிலிருந்துதான் இப்பயணம் ஆரம்பமாயிற்று. 1975ல் பாடசாலை வெளியீடான "அம்பு" சஞ்சிகைக்கு ஒரு வாசகர் கடிதம் எழுதி பயணச்சீட்டைப் பெற்றுக் கொண்டு உட்பிரவேசித்தேன். அப்புறம் துணுக்கு கள், கேள்வி பதில்... உருவகக் கதை... குறுங்கதை... ஒன்றிரண்டு சிறுகதைகள்... இலங்கை வானொலியில் முஸ்லிம் சேவையில் நாடகங்கள்... அப்படி இப்படியென்று நீண்ட காலம் போயிற்று...

1990க்குப் பின்னர் ஒன்றும் எழுதாமல் இலக்கிய நெடுந்தூக்கத்தில் ஆழ்ந்தேன்... இக்காலப்பகுதி முழுவதும் படிப்பு, தொழில்... திருமணம் குடும்பம்...என்று போயிற்று.. இருப்பினும் தோன்றும் போதெல்லாம் எழுதி எழுதி வைத்துக்

கொண்டும் செவ்வை பார்த்துக் கொண்டும் அநேகமாக புத்தகங்கள் வாசித்துக் கொண்டும்தானிருந்தேன்..

இலக்கிய நெடுந்தூக்கத்திலிருந்து மீண்டெழுந்து... 2000ம் ஆண்டில் "வல்லமை தாராயோ..." என்ற சிறுகதைத் தொகுதியை கொணர்ந்தேன்.. அதிலிருந்து தொடர்ச்சியாக எழுதி வருகின்றேன்... 2009ல் நட்டுமை நாவல், 2011ல் வெள்ளிவிரல் சிறுகதைத் தொகுதி, 2013ல் கொல்வதெழுதுதல் 90 என்ற நாவல்... 2015ல் அபாயா என் கறுப்பு வானம் என்ற மின்நூல் கவிதைத் தொகுப்பு...2017ல் அழித்தாயே ஆழித் தாயே... (சுனாமி கடற்கோள் காவியம்) மற்றும் குறு-நெல். (குறும்பாக்கள்)... இப்போது தீரதம். சிறுகதைத் தொகுதி...

இத் தொகுதியில் நான் எழுதிய 10 கதைகள் தொகுக்கப் பட்டுள்ளன. இதுபற்றிய வாசகரின் கருத்துக்களை அறிந்து கொள்வதில் பெருமகிழ்வடைவேன்.

இதன் பின்னணியில் எனக்கு உற்சாகமளித்த அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

அன்புடன்

தீரன். ஆர்.எம். நௌஸாத்.
0714457593
rmnawshad@gmail.com
சாய்ந்தமருது.
2017.03.11

# ஒய்த்தா மாமா

எனக்குப் பத்து வயதிருக்கும் போது அது நடந்தது... ஒய்த்தாமாமாவைக் கண்டாலே எனக்குப் பயம். அவர் சிறுவர் களின் குஞ்சாமணியை தயைதாட்சண்ய மின்றி அறுத்தெறிகிறவர் என்று கேள்விப் பட்டதிலிருந்து இந்தப்பயம். இது நிச்சய மாக நமக்கும் எப்போதோ நடக்கத்தான் போகிறதென்று உணர்ந்ததிலிருந்து அவரைக் கண்டாலே குலை நடுக்கம்தான்.. அப்படி அவர் குஞ்சாமணியை அறுத்தெறி கிறவர் என்றால் நம்மட வாப்பா பெரியப்பா பெரிய ஆம்பிள்ளைகள் எல்லாம் எப்படி ஒண்டுக்குப் போகிறார்கள் என்று கேள்வி மண்டையைக் குடையும்... பள்ளிக்கூடம் செல்லும் வழியில் ஒய்த்தாமாமா தென் பட்டால் பதறிப் போய் வேறு வழியாக ஓட்டம் பிடிப்பேன்... வீட்டருகே விளை யாடிக் கொண்டிருக்கும் போது கண் டாலோ துடித்துப் பதைத்து உள்ளறைக்கு ஓடி விடுவேன்..

எங்கள் வீட்டில் வேலையாளாக இருந்த கலந்தன் காக்கா தான் ஒய்த்தா மாமாவைப் பற்றி கதைகதையாகச் சொல்வான்... சில பிள்ளைகளின் குஞ்சாமணியை நுனியில் கொஞ்சமாக அறுப்பார் என்றும்... அறுத்த குஞ்சு பல்லியின் வால் துடிக்கிறாப் போல் துடிக்குமென்றும்... அதுல சைத்தான் வந்து நிற்குமென்றும... சில துடுக்குப் பிள்ளைகளின் குஞ்சாமணியை குலையோடு அறுத்து அதனைக் கடலில் கொண்டு போய் வீசிவிடுவார் என்றும்... அப்படிப்பட்ட பிள்ளைகள் இனி ஒண்டுக்குப் பேயவும் முடியாதென்றும் அவன் சொன்ன கதைகள் பல... அதிலிருந்து நானும் எனது துடுக்குத்தனத்தையெல்லாம் அடக்கி கப்சிப்பென்றிருப்பேன்...

ஆயினும் ஒருநாள் மூன்றாம்தவணைப் பரீட்சை சித்தி யடைந்து மிகச் சந்தோசமாக ரிப்போர்ட்டை வாப்பாவிடம் காட்டியபோது, அவர் மகிழ்ந்து போய் "நாலாம் வகுப்புப் பாசாய்ட்டான் மகன்... இனி நீ அஞ்சாம் வகுப்பா...? ...பெரிய ஆள்... உனக்கு வார வெள்ளிக்கிளம சுன்னத்து வெய்க்கப் போறம்டா மகனே..." என்று என் சம்மதமில்லாமலேயே திடீரென்று அறிவித்தார். கூட நின்றிருந்த கலந்தன்காக்கா வாப்பாவுக்குத் தெரியாமல் என்னிடம் தன் விரலைக் காட்டி கத்தியால் கரகரவென அறுத்தெறிவது போல் பாவனை காட்டினான்... நான் பயத்தில் "எண்டம்மா... எண்டம்மா..." என்ற கத்திக் கொண்டே உம்மாவிடம் ஓடி அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டேன்... உம்மா சிரித்து... "பயப்புடாதேடா தம்பி... அது எல்லாருக்கும் செய்றதுதான்... அப்பிடியெல்லாம் நோகாது... சும்மா கடியன் கடிச்சாப்பல கொஞ்ச நேரம் கடுக்கும்... மறுகாச்செரி..." என்று சொல்லிச் சிரித்தாள்...

எனக்கு ஒரே குழப்பமாகிப் போய்விட்டது... என் அங்க இழப்பில் அவர்களுக்கென்ன சந்தோஷம் என்று புரியவில்லை. முதல் ஆளாக வகுப்பேறிய சந்தோஷமும் போய்விட்டது... எல்லோர் மீதும் கோபித்துக் கொண்டு படுத்துவிட்டேன்..

மாலையில் உம்மா என்னை எழுப்பி தேறுதல் சொல்லி சாப்பிட வைத்தாள்... வாப்பா வந்து... "என்னடா தம்பி பயந்துட்டியா... பயப்புடாதே... எல்லாருக்கும் வெய்க்கிறது தானே... எனக்கிம் உண்ர வயதில வெச்சதான்... அந்த நேரம் கய்ட்டம்... ப்ப எல்லாம் லேசி...! ஒண்டுக்கும். பயப்புடாத..." என்றார்...

நான் பயத்தடன் "எனக்கி முன்ன பொறந்த லாத்தாவுக்கு வெய்க்காம எனக்கேன் வாப்பா வெய்க்கிறீங்க... மொதல்ல அவளுக்கு வெய்ங்க..." என்றேன்... அதைக் கேட்டு எல்லோரும் கலகலவென்று சிரித்தார்கள்... கலந்தன்காக்கா எட்டிப் பார்த்து... "உனக்கிட்டதானே குஞ்சாமணி இருக்கி..." என்று சிரித்து... மறுபடி விரலை வெட்டிக் காட்டினான்... எனது இந்தக் கேள்வி அல்லசல் முழுவதும் பெண்கள் மத்தியில் பரவி... போறவாற பெண்கள்... சிறுமிகள் எல்லோரும் என்னைப் பார்த்துச் சிரித்தார்கள்... கேள்விப்பட்ட லாத்தா வந்து என் தலையில் ணங்கெண்று குட்டி விட்டுச் சென்றாள்... நான் பயத்துடனும் ஏக குழப்பத்தடனும் வீட்டு தொங்கல் அறைக்குள் ஒழித்திருந்தேன்..

அன்று பின்னேரம் சுன்னத்துக் கலியாணம் என்று கார்ட்டெல்லாம் அடித்து வந்தாயிற்று...

"எல்லாம்வல்ல இறைவன் திருவருளால்... நிகழும் ஹிஜ்ரி **1412** ஸவ்வால் மாதம் பிறை **12**க்குச் சரியாகிய **1969**ம் ஆண்டு பங்குனி மாதம் **23**ம் திகதி பி.ப.**4.00** மணியளவில் எமது திருநிறைச் செல்வன் அ.ற. முகம்மது றெஸ்வின் அவர்களுக்கு விருத்தசேதனம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அன்று நிகழும் பகற்போசனத்திலும் அன்று மாலை நிகழவுள்ள வைபவத்திலும் தாங்கள் குடும்ப சகிதம் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.. இவ்வண்ணம் மீ.மு. அப்துல றகீம் முதலாளியும் பாரியாரும்..." வாசிக்க வாசிக்க ஆனந்தமாயிருந்தாலும் வருவோர் போவோ

ரெல்லாம் மாப்பிள்ள மாப்பிள்ள என்று கூப்பிட்டுக் கூப்பிட்டு அன்பு காட்டியதாலும்... எராளமான அன்பளிப்புக்கள் கிடைத்துக் கொண்டிருந்ததாலும் ஒய்த்தா மாமா மீதான பயம் சற்றுக் குறைந்தது... இருந்தாலும்... கலந்தன்காக்கா எங்கள் வீட்டிலிருந்த ஒரு பெரிய அருவாக்கத்தியை எடுத்து என் கண்ணில்படும்படியாக ஒழித்து வைத்திருந்தான்... அடிக்கடி அதை எடுத்து தீட்டிக் கொண்டுமிருந்தான்... அக்கத்தியையும் என்னையும் பார்த்து அறுத்தறுத்துக் காட்டி என் பயத்தை சற்றும் குறையவிடாமல் அதிகரித்துக் கொண்டேயிருந்தான்....

வெள்ளிக்கிழமைக்கு இன்னம் நான்கு நாட்கள்தாம் இருந்தன... வாப்பா பென்னம்பெரிய ஒரு மாட்டை அறுத்து தானம் கொடுத்தார்... வீடெல்லாம் திருத்தினார்கள்.. புது மை பூசி கதவெல்லாம் "பொளிஸ்" மணத்தது.. தென்னங்குருத் தோலைகளால் அலங்காரம் செய்து நிலைப்படிகளில் தொங்கின... வாசலில் பெரிய பந்தல் இட்டு சீலையால் மறைத்து அழகழகாக... கலர்கலரான சோடனைத்தாள்ககளால் அலங்கரித்தார்கள்... தென்னம்பாளையின் குருத்துகளில் வித விதமான அலங்காரங்கள்... ஆறு பெரிய "டியுப் லைற்"றுகள்... பத்துக் குண்டு பல்புகள் கலர்கலராய் உமிழ்ந்து கண்ணைப் பறித்தன... "ஷ்பீக்கர்" கொண்டு வரப் போயிருந்தார்கள்.. பொல்லடி அடிக்கவும்... குருடி கவி பாடவும். சானாப் புலவன் வாழ்த்துப் பாடவும்... போட்டோக்கள் பிடிக்கவும்... ஏற்பாடுகள் நடந்தன..

வாப்பாவின் தங்கச்சிமார்... மாமிமார் "பொண்டுகள் கூட்டி" வந்தார்கள். என்னை அலங்கரிக்கப்பட்ட கதிரையில் அமர வைத்து...பூக்கள் சொரிந்து... குரவையிட்டு... பகல் வர்த்தி சக்கரம் கொளுத்தி... பால்பழம் தந்து... பரிசுகள்... காசுகள்... துணிமணிகள்... உண்மையில் நான் பெரிய மாப்பிள்ளையேதானா...? வந்தோருக்கு உபசாரங்கள்... அதற்குதவியாக என் உம்மாவின் உறவினப் பட்டாளங்கள்...

எப்போது பார்த்தாலும் கேக்... வாழைப்பழம்... துதல்... மஸ்கற்... கோப்பி... டீ... என்று பான வகைகள்... பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தார்கள்... நாலுநாலாக வீடெல்லாம் கலகலப்புக்குப் பஞ்சமில்லை...

***

வெள்ளிக்கிழமை விடிந்தது... கண்விழித்ததுமே... வீடெல்லாம் பரபரப்பாக இயங்கியது... ஓ... இன்றைக்கு அல்லவா சுன்னத்து...? என்ற நினைப்பு வந்ததுமே பயந்து போய் சட்டென்று எழுந்து விட்டேன்... உம்மா வந்து என்னை அணைத்துக் கொண்டாள்... "ண்டைக்கித்தான் என்ட புள்ள பெரிய எளந்தாரியா ஆகப் போறான்...டோ...ய்..." என்று சிரித்தாள்... மாப் பிட்டும் காடைக்குருவிக் கறியும் தந்து சாப்பிடச் செய்தாள்... என்னைக் கண்டதும் கலந்தன்காக்கா சிரித்து... "ஙா... மாப்பிள்ள எழும்பிட்டியா... ண்டைக்கி ஒரு ஆள்ர குஞ்சி அறுந்து தொங்கப் போகுது... டோ...ய்..." என்று என் கண்ணெதிரேயே அந்த அருவாக்கத்தியை எடுத்து முற்றத்து முண்டாக்கல்லில் கூர் தீட்டித் தீட்டி என்னைப் பார்த்துச் சிரித்தான்.. நான் வாய்குளறிப் போய் உம்மாவின் பின்னால் நின்று அழத்தொடங்கினேன்... உம்மா சிரித்து... "டேய்...கலந்தா...! பிள்ளயப் போட்டு பயமுளுத்தாட்டா தடா..." என்று அவனுக்கு ஏசினாள்... வாப்பா வந்து, "தம்பி... அவண்ட கதய உட்டுட்டு... நீ வடிவாக் குளிச்சிட்டு வாடாம்பி... பள்ளியடிக்கிப் போய் காணிக்க போட்டுட்டு வருவம்..." என்றார்...

கலந்தன் காக்காவும் மீரானும் எனக்குக் கிணற்றடியில் வைத்து தண்ணீர் ஊற்றி வார்த்தார்கள்.. அந்நேரம் கலந்தன் காக்கா என் "அதை"ப் பிடித்துப் பார்த்து "ண்டையோட இது அறுந்து போகும்... வெறும் மொட்டையா இரிக்கிம்... நா ஒய்த்தமாமாட்ட செல்லிட்டன்... வேரு செரியான துண்டாக் காரன்... குலையோட அறு...ண்டு செல்லிரிக்கன்..." என்றான்...

நான் பயத்தால் விறைத்துப் போனேன். உடனே மீரான் "டெ...கலந்தா...புள்ளயப் பயம் காட்டாதடா. அதெல்லாம் சும்மா செல்றான்டா தம்பி... நீ ஒண்டுக்கும் பயப்புடாத..." என்று ஆறுதலளித்தாலும் மீரானும் பொய்தான் சொல்கி றானோ என்று மேலும் பயமாகி விட்டது...

குளித்து முடிந்ததும் எனக்கு புது உடுப்பு அணி வித்தார்கள்.. வாழ்வில் முதற்தடவையாக லோங்ஸ் அணிந் தேன்... புது உடுப்பும்... காலில் சப்பாத்தும் அணிந்து உண்மை யில் பெரிய ஆள் போலத்தானிருந்தேன்... என்னைக்கண்ட வகுப்புக் கூட்டாளிமாரும் அல்அசலில் வசிக்கிற சிறுமிகளும் ஆச்சரியம் ததும்ப என்னைப் பார்ப்பதும் கிசுகிசுப்பதுமாக இருந்தனர்... எனக்குப் பெருமையாக இருந்தாலும் மாலை நடக்கவிருக்கும் ஒய்த்தா மாமாவின் அறுப்பை எண்ணி எண்ணி பயந்துகொண்டுமிருந்தேன்...

மாலை அஷர் தொழுகை முடிந்த கையோடு பரபரப்பு ஆரம்பமாகி விட்டது... ஒய்த்தா மாமா வந்துவிட்டார்... நான் பயத்தால் விறைத்துப் போய் உம்மாவிடம் போய் ஒட்டிக் கொண்டேன்... உம்மா சற்றுக் கவலையாக.... "ஞ்சங்க... புள்ள ஓரமாப் பயப்புடுறான்... அவர மாமாட்டச் சொல்லி கொஞ்சம் ஊதிப்பாருங்க..." என்றதும் வாப்பா வந்து என்னிடம் "ஏன்டா மகன் பயப்பர்ராய்..? வா... வா... மாமா கொஞ்சம் ஊதிப் பாக்கட்டும்...வா..." என்று என்னைப் பலவந்தமாக இழுத்துக் கொண்டு ஒய்த்தாமாமாவிட்ம கொண்டு வந்தார்... "மாமா... புள்ள கொஞ்சம் பயந்திரிக்கான்... கொஞ்சம் ஊதிப்பாருங்க..." என்றதும் - ஒய்த்தா மாமா என்னைப் பார்த்தார்... அவரது கண்களில் ஒன்று மாறுகண்ணாக இருந்தது... "தம்பி... நீ தானா... மாப்பிள்ள... சரிசரி... வா... வா... ஒண்டுக்கும் பயப்புடாத... சும்மா கொஞ்சத்த நோண்டி விடுவன்... ப்ப வா... ஊதிப்பாப்பம்..." என்று சொல்லி என்னை அருகமர்த்தி அரபு பாஸையால் என்ன்னவோவெல்லாம் ஓதி நெஞ்சில் ஊதி

விட்டார்... கைச்சந்தில் ஒரு சின்ன வெள்ளைச் சீலையில் ஒரு ரூபாய் நாணயக்குற்றியை முடிச்சிட்டுக் கட்டினார்... பின் என் நெஞ்சிலும் முகத்திலும் மெதுவாக தண்ணீரினால் ஓங்கியடித் தார்... "ஙா... செரிசெரி... அ... இனிப்பயப்படமாட்டாரு மாப்பிள்ள... உள்ளுக்க கூட்டிட்டுப் போய் உடுப்ப மாத்திக் கூட்டிட்டு வாங்க..." என்றார்..

கலந்தன்காக்கா அந்தப் பெரிய அருவாக்கத்தியக் கொண்டு போய் ஒய்த்தாமாமாவினருகே வைத்துவிட்டு என்னை நோக்கிச் சிரித்தான்... "வேல செரி..." என்றான். நான்வெருண்டு போய்... கத்தியழ ஆரம்பித்தேன்... இனி நடப்பதெதுவும் என் வசத்திலில்லை என்று புரிந்துவிட்டது... நான் அணிந்திருந்த லோங்ஸையும் சேர்ட்டையும் கழற்றிவிட்டார்கள்... வெறும் ஒரு வெள்ளைத் துண்டை உடுத்துவிட்டார்கள்....

கலந்தன் காக்காவும் மீரானும் என் தாய்மாமாவும் சேர்ந்து என்னைப் பலவந்தமாக ஒய்த்தாமாமாவின் அருகே கொண்டு சென்றனர்... ஒரு மர உரலுக்குப் பக்கத்தில் கீழே அமர்ந்திருந்த ஒய்த்தா மாமாவின் பக்கத்தே ஒரு தட்டு நிறைய மணல் இருந்தது... சின்னஞ்சிறிய கத்திகளும்... கூடவே... பயமுறுத்தும் ஒரு வகை மணமும்... உத்தரத்திலிருந்து நூல் தொங்கியது... அதில் ஒரு பெரிய வெள்ளைச்சீலை கட்டி பாயின் மீது படிந்து தொங்கியது... ஒய்த்தாமாமா "கத்தாத மருமகனே... ஒரு அஞ்சி நிமிசத்தில வேல முடிஞ்சிரும்..." என்று சொன்னார்... நான் உதறிக் கத்தி ஆர்ப்பரித்தேன்... என் கூச்சலை யாரும் பொருட்படுத்தவில்லை...

ஒய்த்தாமாமா எனக்கு விளங்காதபடி கலந்தன் காக்கா விடம் ஏதோ சைகை செய்தது போலிருந்தது. அவரின் எதிரே உரலில் என்னைப் பலவந்தமாக இருப்பாட்டினார்கள். எனக்குப் பின்னாலிருந்த கலந்தன்காக்கா நான் உடுத்தியிருந்த வெள்ளைத் துண்டை சட்டென உருவிவிட்டான்... நான்

நிர்வாணமாக மகா அவமானத்துடனும் ஆத்திரத்துடனும் அவனின் கையைக் கடித்தேன்... ஆனால்... அவன் என் புறத் தொடைகளுக்குள் அவனது கைகளைச் செலுத்தி என் கைகளையும் சேர்த்து ஒரே கொடுங்கைப்பிடியாகப் பிடித்துக் கொண்டான்... மீரான் என் தலையை ஒரு பக்கமாகத் திருப்பிப் பிடித்துக் கொண்டான்... என்னால் அசையவே முடிய வில்லை... ஒரு சற்றும் திமிறவும் முடியவில்லை... நான் என் வசமிழந்து கண்களை மூடிக் கொண்டேன்... ஒய்த்தாமாமா மிக இலகுவாக என் குஞ்சாமணியைப் பிடித்... வேறு ஒன்றும் என் நினைவிலில்லை...

எனக்கு ஞாபகம் வந்து விழித்துப் பார்த்தபோது, பாயில் படுக்க வைக்கப்பட்டிருந்தேன்... உம்மாவின் முகம் கண்ணீருடன் தெரிந்தது... வாப்பா சிரித்தபடி என்னிடம்... "எல்லாம் முடிஞ்சி மகன்... நோகுதா...?" என்று கேட்டார்... கலந்தன்காக்காவும் மீரானும் புன்னகைத்தனர்... "சின்னத்து வெச்சாச்சேய்..." என்றனர்... எனக்குத் துளி கூட வலிக்க வில்லை... நான் தயக்கமாக என்னை மூடியிருந்த வெள்ளைச் சீலையைச் சற்று உயர்த்திப் பார்த்தேன்... எதுவும் தெரிய வில்லை... ஆயினும் என் குஞ்சாமணியைச் சுற்றி சீலையால் கட்டுப் போடப்பட்டிருந்தது... ஓ... இருக்கிறது. நான் வெட்கத் துடன்... ஒய்த்தாமாமாவைப் பார்த்தேன்... ஒய்த்தாமாமா என்னைப் பார்த்து "என்ன மருமகனே... ஒரு சின்னத்துண்டை நோண்டிவிட்டேன்... எப்பிடி... நோகிச்சா... ல்லியே... வாப்பாட்டச் சொல்லி எனக்கி காணிக்கை கூடயா வாங்கித் தா..." என்று சிரித்தார்... அதன் பிறகு எனக்கு ஒய்த்தாமாமாக் களைக் கண்டால் ஒரு பயமும் இல்லை...

"ஞானம்" – ஓகஸ்ட் –2012 இதழில் பிரசுரமானது

# கள்ளக்கோழி

மண்டயப் பொளந்துருவன்... ல்லாட்டி கைச்சந்துல ஒண்ட எறக்கிற...எந்த அறாங்குட்டி யெண்டு பாத்துருவம்... ண்டு நம்முட ஆத்தப்பாக் கெளவன் கய்யிலிரிந்த அருவாக்கத்திய இறுக்கயாப் புடிச்சிட்டு நட்ட ராவையில அவண்ட ஊட்டுக்குப் பொறகால இரிக்கிற பெரப்பம் பத்தைக்க ஒளிச்சிட்டுக் குந்திரிந்தான்.

ஒளிச்சிட்டுக் குந்திரிந்தான். ஒரு மனிசன வெட்டி அரியிற அளவுக்கு ந்த எளு வத்தாறு வயசில ஆத்தப்பாக் கெளவனுக்கு வெஞ்சினம் வந்ததென்ன..?அப்பிடி ஆர வெட்டி அரியப் போறான்..?: ஆரந்த அறாங் குட்டி...? வேறாரு..?. பேத்திற்ற ராவையில இருட்டுக்க வந்து போற...ஒரு அறாமி..!.. ஆரவன்...? ஆரா இரிக்கட்டும்..! .கவை யில்ல... ண்டைக்கி வெட்டிப்போட்டுத்தான் மறுவேல... ரெண்டு பேரையும் வெட்டிப் போட்டுட்டு தூக்குல தொங்கிற யெண்டா லும் செரிதாங்... ஆத்தப்பாக் கெளவன்

...உரத்த ரோசக்காரன்....

கௌவன் உரத்த ரோசக்காரன்..... ஆத்தப்பாக் கௌவண்ட பேத்தி நெல்ல வடிவான கொம்புள.. நெல்ல செறப்பாத்தான் கலியானம் செஞ்சிவெச்ச.. நகநட்டு சீரு செனத்தி எல்லாம் குடுத்த.. என்ன நடந்த கொதறத்தோ..?. பண்ணினவன் ஒரு பொடவ யாவாரி.. நெல்லாத் தெரிஞ்சவன் தான்... காசிகப்பும் வெச்சிரிந்தான்... மட்டுக்களப்புல பொட்டணி யாவாரம்... ஆத்தப்பாக் கௌவனுக்கு ம்மாட வழியில கொஞ்சம் ஒறவு... ...அவண்ட சாதிசனம்தான்.. பண்ணி மூணுமாசம்தான் இரிந்தான். அண்டொரு நாள் சும்மா ஏசிப் போட்டுக் கோவிச்சிற்றுப் போய்ட்டான். ம்மாட ஊட்ட போனவன் திரும்பி வெரல்ல... சும்மாரிந்த குமரப் பழுதாக்கிப் போட்டுப் போய்ட்டான்... ரெண்டு வரிசமாகுது...

ரெண்டு வரிசமாகுது... கோய்ச்சிட்டுப் போனவனக் கூட்டிட்டு வெரப் போன ஆத்தப்பாக் கௌவன அவன் மாப்புள்ளட வாப்பாக்காரன் புடிச்சித் தள்ளி உட்டுட்டான். "போடாக் கௌட்டு வள்ளா... ஒண்ட பேத்திர .........க்க எண்ட மகண்ட ....ஒரு நாளும் இனிப் பூர மாட்டா.. போடா போடா....ண்டு வெரசினான்." "அப்பிடி என்ன குத்தம்டா செஞ்ச எண்ட பேத்தி...என்னடா கொறடா அவளுக்கு..? செல்லுங்களண்டா அறாமியள்..?" ண்டு ஆத்தப்பாக் கௌவன் ரோட்டுல நிண்டு கொம்பினத்துக்கு...மாப்புள்ளட ம்மாக்காரி முந்தானய சுத்திக்கட்டிட்டு ரோட்டுக்கு ஓடியாந்து..

ரோட்டுக்கு ஓடியாந்து... "டெ ஆத்தப்பாக் கௌவா... ஒண்ட பேத்தியப் பண்ணின நாள்ள இரிந்து எண்ட மகனுக்கு யாவாரத்தல நட்டம்டா நக்கு வள்ளா.. குறி கேட்டுப் பாத் துட்டம்... அவள வெலக்கினாத்தான் முசிவத்தும் வெலகு மாம்... இனி இஞ்ச வெராதடா கௌவா.. காதிக் கோட்டுல தான் வளக்கு வெளக்கம் எல்லாம்.. இனி ஞ்சாலப் பக்கம் வந்தியெண்டா....த்த்த்த..." ண்டு டானிஸ் ஆடிட்டாள்...

டானிஸ் ஆடிட்டாள்... கோவத்துல ஆத்தப்பாக் கெளவன் சம்பந்திர சொத்தையில வெத்திலாக்கக் காறித் துப்பிட்டு "அடி வெங்கிளாத்துர வேலக்காரி... ஒண்ட வங்கி சத்த நெக்கித் தெரியாதா... ஒருவாக்காசிக்கி மாட்டுப்பீயத் திண்ட கூட்டம்... இனி ஒன்ட மகன் அறாமாக்கும் வேணா...நெல்ல ஒரிச்சினல் மாப்ள்ள நான் எடுப்பன்டி..." ண்டு சவால் உட்டுட்டு வெட்டக்கிறங்கி வந்துட்டான்.. அத்தோட எல்லாம் அறுந்து போச்சி.....

எல்லாம் அறுந்து போச்சி... மாப்ள்ள பொண்ணப் பிரிக்கிறத்துக்கு காதிக் கோட்டுல வழக்கு நடக்குது...வேள் பேத்தி புரியனோட ஒளுங்கா வாள ல்ல அவளும் நெல்ல பார்வையான கொம்புள... ரோட்டுல திரியிற வளிசலுகள் பேத்தில கண்ணக் கிண்ணப் போட்ருவானுகள் ண்டத்தால ஆத்தப்பாக் கெளவன் கண்ணுல எண்ண ஊத்திக் கங்காணிப்பாயிரிந்தான்.. மஸிமாவ வெட்டக் கிறங்க உட மாட்டான்... கேட்டதெல்லாம் காலடியில கெடைக்கிற மாயிரி கட்டுக் காவலா வெச்சிருந்தான்... பேத்திக்கி அவிசிரமா மாப்பிள்ள பாத்தான்...

பாத்தான்தான்...ஆனா என்ன வெச்சிரிந்து என்ன..? ப்ப கொஞ்ச நாளா...பேத்திர நடத்தயள்ள கொஞ்சம் சமிசயம் தட்டுது. கொஞ்ச நாளா ராவையில பவுடர் பூசுறாள்.. தனிய நிண்டுட்டுச் சிரிக்காள்... அத்துரு மணக்குது... தலையில கிளிப்புகளும்.. களுத்துல மணி நெக்கிளசும் ஊசாடுது.. கொசாலா இரிக்காள்... சொணங்கித்தான் எளும்புறாள்.. செல நேரம் மாலமசண்டைக்க ஒரு பத்துப்பதினஞ்சி நிமிசம் ஆளக் காணல்ல... எங்கடி போனண்டு கேட்டா "என்னது நா ஒண்டுக்கு இரண்டுக்குப் போறல்லியா.. ஊட்டுக்குள்ளயா பீமூத்திரம் உர்ர..?" ண்டு கேட்டு கடிச்சி ஏறப்பாக்காள்.. "கௌட்டு வயதுல சோத்தத் திண்டுட்டுப் படுக்காம கௌ வண்ட கேள்வியப் பாரு..." ண்டு செல சமயம் புறுபுறுக்காள்..

செல சமயம் புறுபுறுக்காள்... வேள்ளந்தப் புதுக் குசாலுக்கு என்னடா காரணம் ண்டு ஆத்தப்பாக் கெளவன் உசுப்பாம ஒசாரா கங்காணிக்கத் தொடங்கினான். ரெண்டொரு நாள் மாட்டுக்குடில்ப் பக்கம் ஆரோ பொளங்கின மாயிரி சமுசயம் தட்டிட்டு... ன்னமின்னம் ஊசாட்டம் பாத்ததுல பேத்திக்கு ஆரோ ஒர்த்தனோட சாடமாடயாத் கள்ளத்தொடர்வு இரிக்கி ண்டு வெளங்கிப் போச்சி... ம்.. நமக்குத் தெரியாம வேளவு தகிரியமா ஞ்சயே வந்து சந்திக்கிறவன்...ஆரந்த அறாமி..?

ஆரந்த அறாமி.. கள்ளக்கோழி புடிக்க வாறவன்...? ஒரு நா பகல் அப்பான் சாப்பிட்டுட்டு கொஞ்சம் கெளிவம் ண்டு ஆத்தப்பாக் கெளவன் கண்ணமூடிட்டு உள்ளறைக்க கட்டில்ல படுக்கிற மாய்ரி சாஞ்சிற்று இரிந்தான்.. வேள் பேத்தி சாப்புக்க படுத்தவள் எளும்பி பொறக்கடக் கதவ உசுப்பாம தொறந் துட்டு.. வெட்டயால போறாள்.... ஆத்தப்பாக் கெளவனும் தவண்டுட்டு வெட்டையால வந்து ஊட்டுக்குப் பொறகால இரிக்கிற பெரப்பம் பத்தைக்க ஒழிச்சிட்டு இரிந்து பாத்தான்.. நெனச்சது செர்தாங்...! ஒரு சீட்டிச் சத்தம் கேக்குது.... ஒடன மாட்டுக்குடிலுக்க வேள் பேத்தி போறதும்... ஆரோடயோ குசு குசுக்கிறதும்.....ம்...... சிக்கிலட்டுப் பொகையும் மணக்குது..? ஆத்தப்பாக் கெளவன் வெறச்சிப் போய்ட்டான்.. ஆரந்த அறாங்குட்டி...? என்ன கட்டுக்காவலா வெச்சிருந்தும் ந்தப் பொட்ட நாய் போன போக்கென்ன..?

போன போக்கென்ன..? பேத்தி ஒரு அஞ்சி நிமிசத்தில திரும்பிட்டாள்.. கய்யில ஒரு பெரிய பார்சல்... சிரிச்சிட்டு திரும்பிப் பாத்து கைகாட்றாள்...என்னயோ கதைக்காள்... டக்கெண்டு கெளவன் திரிம்பி வந்து படுத்துட்டான்... நெஞ்சப் பொத்திற்று வெஞ்சினத்த விழுங்கிற்றான்... ம்மாட மண்ட.... இத ரெண்டுல ஒண்டு பாக்காம உட்றல்ல... ண்டு அந்நரம் முடிவு கட்டினான். ஆரு நாயா இரிந்தாலும் நக்க வார நாய்க்கி

அருவாக்கத்தியால மண்டையில கொத்துற ண்டு தீமானங் கட்டிட்டான்...

அந்நரமே முடிவு கட்டிட்டான்.. இதப்பத்தி ஆத்தப் பாக் கெளவன் பேத்திட்ட ஒரு கதயும் கேக்கல்ல.. தெரிஞ்ச மாய்ரி காட்டிக்கயும் ல்ல.. ஆனா செரியான சந்தர்ப்பத்த காத்துட்டு அதுலயே ஒரு கண்ணாயிரிந்தான்..

அதுலயே கண்ணா இரிந்தவன்...ஒரு திட்டம் போட்டுட்டான்.. இண்டு ராவைக்கி தோட்டத்துல பண்டிக் காவலுக்குப் போறண் ண்டு செல்லிட்டு சாப்பாடும் கட்டி எடுத்துட்டு... போறாப்பல போக்குக் காட்டிட்டுப் போய்... நெல்ல மசமசண்ட இருட்டுக்க ஆத்தப்பாக் கெளவன் கிறுகி வந்து ஆருக்கும் தெரியாம ஊட்டுக்குப் பொறகால இரிக்கிற பெரப்பம் பத்தைக்க குந்திரிந்தான். கய்யில மூணு வெத்தி டோர்ச்சி லைட்டும் நெல்ல கூரான அருவாக்கத்தியும் வெச்சிட்டுப் பதுங்கிற்று சத்தம்கித்தம் போடாம குந்திரிக்கான்.

சத்தம்கித்தம் போடாம குந்திரிக்கான்......ண்டைக்கி நெல்ல அம்மாச இருட்டு... ஒத்தச் சாமக் கோளி கூவக்க.. வெசயம் தொடங்கிட்டு... ஆத்தப்பாக் கெளவன் நெனச்ச மாயிரியே நடந்திச்சு... திடிருண்டு மாட்டுக்காலைக்கிப் பொறகால இரிந்து ஒரு சின்ன விசில்ச்சத்தம் கேட்டிச்சு... ஒடனே பேத்தி பொளக்கடக் கதவத் தொறந்துட்டு வெட்டால வாறாள்.. சாட்டுக்கு கெணத்துல தண்ணி அள்ளி காலக்களுவு றாள்.. பொறகு.. ன்னொரு கனப்புச் சத்தம் கேட்டதும்... பேத்தி வந்து மாட்டுக்காலைக்குள்ள பூந்துட்டாள்... ஆத்தப்பாக் கெளவனுக்கு எரத்தம் கொதிக்குது.... பல்லக் கடிச்சிட்டு அருவாக்கத்திய இறுக்கயாப் புடிச்சிட்டு சரசரண்டு பெரப்பம் பத்தைக்க தவண்டு தவண்டு மாட்டுக்காலப்பக்கம் வந்துட்டான்.

மாட்டுக்காலப்பக்கம் வந்துட்டான். ஆனா கெளவன் வந்த சத்தம் கேட்டுட்டுப் போல.... வேள் பேத்தி குசுகுசுப்பாக

“ஆரே வாறாக.. ஆரே வாறாக..” ண்டு செல்லிட்டு டக்குண்டு எழும்பி பொடவயத் தூக்கிட்டு ஒட-கூட இரிந்த ஆரோ ஒரு கள்ளன் உடுத்திரிந்த சாரனையும் அவுட்டுட்டு மாட்டுக்காலைக்கி வெளியால பாஞ்சான்... ஆனா.. ஆத்தப் பாக் கௌவனும் உடல்ல.. டக்கெண்டு பாஞ்சி அவண்ட காலக் கட்டிப் புடிச்சிட்டான்.. ரெண்டு பேரும் தட்டுமுட்டுப் பட்டு மாட்டுக்காலைக்க உளுந்து கட்டிப்புடிச்சிட்டுப் பெரள.... பேத்தி பயத்தில ஊட்டுக்க ஓடிட்டாள்.. ஆத்தப்பாக் கௌவன் தன்னோட மல்லுக்கட்டின ஆம்பிளய ஒரே புடியா அமுக்கிட்டான்... ஆனா அவன் எளந்தாரிப் பொடியன்..

எளந்தாரிப் பொடியன். ஆத்தப்பாக் கெளவண்ட கய்யக் கடிச்சிற்றான்..புடிய ஒதறி உடுபட்டுட்டு... டக்கெண்டு பசுமாட்ர கவுட்டுக்குள்ளால பூந்துட்டு மத்தப்பக்கமா பாஞ் சிட்டான்.. ஆனா ஆத்தப்பாக் கௌவன் சட்டுண டோச்சி லைற்ற அவண்ட சொத்தையில வெளிச்சம் அடிச்சிற்று... அருவாள ஓங்க...

அருவாள ஓங்க... டோர்ச்சி லைற்று வெளிச்சத்துல அவண்ட சொத்தையப் பாத்த ஆத்தப்பாக் கௌவன் வெறைச்சிப் போய்ட்டான்... ஒடன அருவாக்கத்திய கீள போட்டுட்டான். வெக்கத்துல மெலச்சிப் போய் அப்பிடியே செல மாய்ரி நிண்டுட்டான். அப்பிடியே குந்திட்டான்.. வெறப்படி இரிக்கிம்..? வந்துட்டுப் போற அந்தக் கள்ள அறாங்குட்டி வேள் பேத்திர உட்டுட்டுப் போன புரிசன்காரன் தான் ண்டு தெரிஞ்ச பொறகு.........................?

ஞானம் – ஒக்டோபர்-2013 இதழில் பிரசுரமானது

# மறிக்கிடா

"அகிலேஸ்வரி என்கிற அகிலமக்கா பத்து ஆடுகள் வைத்திருந்தாள். எல்லாம் பெட்டைகள்தாம்.. பெட்டைகளுக்கு மறிக் காக என்று வைத்திருந்த பெரிய கிடாவை சென்ற பெருநாளைக்கு முஸ்லிம் சந்தையில் இருபத்தெட்டாயிரம் கொள்ளை விலைக்கு விற்றுவிட்டிருந்தாள். ரொக்கப்பணத் துக்கும் கல்முனை சொர்ணம் நகைமாளிகை யில் கைச்செயின் வாங்கி அணிந்திருந்தாள்.

அகிலமக்காவுக்கு வயது 45தான். இன்னும் நரைக்கவுமில்லை. சதா வேலை வாடை செய்ததில் கட்டுமஸ்தான உடம்பும்... நல்ல முகவெட்டும்... சதா வெற்றிலை போட்டுச் செக்கச்சிவந்திருந்த உதடுகளும்... முந்தானையை மீறத் துடிக்கும் மார்புகளும்... கணவர் சின்னப்புவுக்கு தனது 68 வயதில் அவளுக்கு தன்னால் ஈடு கொடுக்க முடியாதென்பதை தாம்பத்திய இரவுகளில் சந்தேதகமறத் தெரிந்து கொண்டிருந்தார். பிள்ளை குட்டிகளும்

இல்லை. என்றாலும் பெயருக்கு கணவர் என்ற லேபலோடு ஏதோ அவள் சொல்வதையெல்லாம் செய்து கொண்டு காலம் தள்ளிக் கொண்டிருந்தார்.

அகிலமக்காவின் ஆட்டுப்பட்டியில் இப்போது எல்லாமே பெட்டைகளாகவே இருந்தன. மறிக்கு ஒரு கிடாய் இல்லை. அப்படியானால் பட்டி பெருகுவது எப்படி... மறிப்படுவதற்கு பெட்டைகள் தயாராக இருந்தன.. அவற்றின் யோனி நீர் வழிந்து தொழுவம் முழுவதும் மணத்தது.. இந்த நேரத்தில் சரியான ஒரு கிடாய் அகப்பட்டால் தப்பாமல் இரண்டிரண்டு குட்டிகளாவது கிடைக்கும்.. அகிலமக்கா சின்னப்புவிடம் சொன்னாள்.

"ஞ்சப்பாருங்கோ... பெட்டைகளுக்கு மறிக்கு விட நல்ல கிடாய் ஒண்டைப் பாருங்களன்.. சொல்லி எத்தினை நாளாயிற்று... ஒரு வேலைக்கும் உதவாது நீங்க..." என்று குத்தி விட்டாள்.

"பாத்துட்டுதானே இரிக்கிறன்.. ந்தப்பக்கத்து மாப் புள்ளக் கிடாவெல்லாம் சரிப்பட்டு வரா... சீலைப்பள்ளியில மய்யதீன்காக்காட பட்டியில நெல்ல தெரமான ஒரு கிடா இருக்கிதாம்.. எப்படியும் இண்டைக்கிப் போய்ப் பார்த்துட்டு வாரன் புள்ளேய்..." என்று சொன்ன கையோடு புறப்பட்டும் விட்டார்.

எட்டுமைல்துாரம் நடந்து போய் மய்தீன் காக்காவின் ஆட்டுப்பட்டியை அடைந்தார். மய்யதீன் காக்காவின் பட்டியைப் பார்த்த போது உண்மையில் அதிசயப்பட்டார். இருபது பெட்டை ஆடுகளும்.. ஒரு மாப்பிள்ளைக் கிடாவும் நின்றன.. மய்யதின் காக்காவின் மாப்பிள்ளைக் கிடாவைக் கண்டு அசந்து போனார்.. ஏறக்குறைய ஒரு மாட்டின் உயரத்தில் தாடியும்.. நீண்டு வளைந்திருந்த கொம்புகளும்.... கழுத்தில் கிண்கிணிமணிகளுடனும் மிக்க கம்பீரத்துடன் நின்று கொண்டு திமிறிக் கொண்டிருந்தது.. அதன் சத்தமே கரகரப்பாக ஆண்கள் கத்துவதைப் போலிருந்தது. அதன் வீச்சம்

மூக்கைத் துளைத்தது.. தன்னை நெருங்கும் ஆட்களை முட்டித் தள்ள மூர்க்கம் கொண்டு பாய்ந்தது..

மய்யதீன் காக்காவும் அந்த ஆட்டுக்கிடாவைப் போலவே ஆஜானுபாகுவாக கம்பீரமாக காட்சியளித்தான்.. சின்னப்புவைக் கண்டதும் வரவேற்று ஆட்டுப்பால் கொடுத்து உபசரித்த பின் விசயத்தைக் கேட்டு விட்டு நக்கலாய்ச் சிரித்தான்..

"சின்னப்பு அண்ணேய்... நம்மட கிடாவப் பாத்தாய் தானே... சின்னப்பெட்டையெல்லாம் இதுக்குக் கிட்ட நிக்க ஏலுமா.. ஒரு தரத்தில நாலைஞ்சி பெட்ட வேணும் இதுக்கு..." என்று தன் மாப்பிள்ளைக்கிடாவின் பாலியல் சக்திப் புராணம் பாடிவிட்டு "நான் எல்லாருக்கும் மறிக்கு விடுறல்ல சின்னப் பண்ணே.. நீ தூரத்துல யிரிந்து வந்திருக்காய் ண்டபடியால பரவாயில்ல உனக்கு தாரன்.. ஆனா ஒருதரம் மறிக்கு விட மூவாயிரம் ரூவாத் தெரணும்.." என்று தயைதாட்சண்யமின்றிக் கேட்டான். அவனே கிடாவைக் கூட்டி வந்து மறிக்கு விட்டுக்கூட்டிப் போக போக்குவரத்துச் செலவு... தனக்கு சாப்பாட்டுச் செலவு... கிடாய்க்கு தாராளமாக கிளிசறிப் புண்ணாக்கு... மறியேற முன் கிடாய்க்குச் சாராயம்.. என்று சில உபவிதிகளும் சொன்னான். மய்யதீன் காக்காவின் நிபந்தனை களும் விலையும் மிகமிக அதிகமாகவே இருந்ததாலும் அகில மக்காவிடம் தன் கெட்டிக்காரத்தனத்தை நிருபிக்க வேண்டி அவன் சொன்னவற்றுக்கெல்லாம் சம்மதித்துத் திரும்பினார் சின்னப்பு.

சொன்னபடியே அடுத்தநாள் அதிகாலையிலேயே மய்யதீன் காக்கா தன் மாப்பிள்ளைக் கிடாவுடன் அகிலமக்கா வின் வீட்டுக்கு வந்துவிட்டான். சின்னப்பு எங்கோ போய் விட்டிருந்தார். அகிலமக்காதான் வந்து வரவேற்றாள். அகில மக்காவின் கட்டுமஸ்தான அழகில் ஒரு கணம் ஒருகணம் மெய்மறந்தான் மய்யதீன் காக்கா... இந்த நோஞ்சான் சின்னப்பு வுக்கு இப்படி ஒரு பெண்சாதியா... என்று மறுகினான்.

சட்டெனத் தன்னைச் சுதாகரித்துக் கொண்ட மய்யதீன் காக்கா

"சின்னப்பு அண்ணர் வரச்சொல்லியிரிந்தாருக்கா..." என்றான்.

"ஓம்... ஓம்... நீதானா மறிக்கு விட வந்த... கிடா நல்லாருக்குது காக்கா...! இது உன்னதா...?" என்ற அகிலமக்கா கிடாயின் அருகே வந்தாள். மய்யதீன் காக்காவின் .இடுப்பளவு உயரத்தில் கம்பீரமாக நின்றிருந்த கிடாய் அகிலமக்காவைக் கண்டதுமே உற்சாகமாகிப் பாய்ந்தது. அதன் உயரத்திலும் பிடரி மயிர்ச்சிலிர்ப்பிலும் கனபரிமானத்துடன் உயர்ந்து நீண்டு சுருண்டிருந்த கொம்புகளிலும் பெரிய வட்டச் செவ்விழி களில் தெரிந்த ஆவேசத்திலும் அகிலமக்கா மயங்கித்தான் போனாள்.

"எங்கக்கா சின்னப்பண்ணரைக் காணல்லை..?" என்று கேட்ட மய்யதீன்காக்கா அகிலமக்காவின் கட்டுடலில் வைத்த பார்வையை மீட்டிக் கொள்ள முடியாமல் மறுகினான்...

"கொத்து பறிக்க கரப்பத்துக்குப் போயிட்டாரு.. வந்துருவாரு..." மய்யதீன் காக்கா தன்னை கள்ளத்தனமாகக் குறுகுறுவெனப் பார்ப்பதை உணர்ந்து கொண்ட அகிலமக்கா உள்ளூர நகைத்துக் கொண்டாள். ஏதோ கொஞ்சம் சந்தோஸ மாகவும் கர்வமாகவும் இருந்தது..

இதுர குறியப் பாருக்கா... இத பட்டியடிப்பிட்டிக்கே போய் சின்னக்குட்டியா வாங்கி வந்து வளத்தது.. நெல்ல திறமான சாப்பாடு போட்டு வளத்த கிடா... ஒருநாளைக்கிச் சாப்பாட்டுக்கே அய்நூறு போகுதுக்கா..;; என்று சொல்லிக் கொண்டிருந்தாலும் மய்யதீன்காக்காவின் பார்வை அகிலமக்காவின் அங்கங்களில் இரகசியமாக மேய்ந்தது.. மறிக்கிடாவின் பார்வை துாரத்திலிருந்த பெட்டைஆடுகளின் தொழுவத்தின் மீதிருந்தது.

"விலைக்கு கேட்டா குடுக்க மாட்டியா..?" அகில மக்கா நழுவும் முந்தானையைச் சரிசெய்யாமலே கேட்டாள்.

"ல்லக்கா.. லச்சம் தந்தாலும் சரியான்.. அது நம்முட

மாப்பிள்ள... புள்ள மாயிரி வளக்கன். நான்..."

ஆட்டுத் தொழுவத்துள் அடைபட்டுக் கிடந்த பெட்டைகளின் மதனநீர் நாற்றத்தில் கவரப்பட்ட கிடா மய்யதீன் காக்காவின் பிடியிலிருந்து விடுபட கால்களை உயர்த்திக் கிளம்பித் திமிறியது. "ஞ்ங்ங்மேமமய்ங்ங்" என்று விசித்திரத்தொனியில் கத்தி மய்யதீன் காக்காவின் தோளில் கால்களை உயர்த்தித் துள்ளியது. அவனை நெட்டித்தள்ளியது. அதன் உயர்த்திய கால்களிடையே வெளித்தள்ளிய கிடாயின் ஆண்குறி செஞ்சிவப்புக்கலரில் விறைத்துக் கிளம்பி நீண்டிருந்தது.

"குறியப் பாத்தியாக்கா... ?" என்று சாதாரணமாகத்தான் கேட்டான் மய்யதீன் காக்கா. "ம்ம்..ம்.." என்ற அகிலமக்கா அதனைப் பார்த்துக் கிறுகிறுத்துப் போனாள்.. "ஆ..என்ன நீட்டமும் பெரிசும்..." என்ற உள்ளார்ந்த அருட்டுணர்வால் அவளுக்குள் ஏதோ சிலீரிட்டு மனதுக்குள் பாய்ந்தது...

"அக்கா கிடாய்க்கு கொஞ்சம் சாராயம் வேணுமக்கா..."

"சாராயமா...?"

"ஓமக்கா... கொஞ்சம் குடிச்சா நெல்ல திறமா மறிப்படுமக்கா..."

அகிலமக்கா வியப்புடன் சின்னப்பு குடிக்க வைத்திருந்த அரைப்போத்தலைக் கொணர்ந்து கொடுத்தாள். உபசாரங்கள் முடிந்ததும் இருவருமாக கிடாவை தொழுவத்துக்குள் கூட்டிப் போனார்கள்.. ஆனால் மதனநீர் வாசத்தால் கம்பேறியிருந்த கிடா பெட்டைகளைக் கண்டதுமே மய்யதீன் காக்காவின் பிடியிலிருந்து திமிறிக் கிளம்பி அவனை முட்டிக் கொண்டு பாய்ந்தது

"ஞ்ங்ங்மேமமய்ங்" என்று கத்தி ஆவேசப்பட்டது. "விடுவிடு..." என்றாள் அகிலமக்கா.. மய்யதீன் காக்கா பிடியை விட்டதும்... எகிறிப் பாய்ந்த கிடா ஒருபெட்டையின் பின் பக்கத்தை நோக்கி ஒரே பாய்ச்சலில் பாய்ந்தது. பெட்டையின் பின்புறம் தன்னிரு கால்ககளால் இறுக்கிப் பிடித்துக் கொண்டு

மேல் உயர்ந்தது. அதன் செந்நிறக் குறி ஒரே கணத்தில் கம்பீர மாக வெளிப்பட்டுப் பெட்டையின் பின்புறத்தைத் துளைத்துக் கொண்டு மறைந்தது... மறிக்கிடா மிக ஆவேசத்துடன் ஆடியது.. அதன் ஆக்ரோசத்தையும் ஆவேசத்தையும் கண்ட அகிலமக்காவின் பார்வை தன்னிச்சையாகவே மய்யதீன் காக்காவின் மயிரடர்ந்திருந்த பரந்த தொடைகளின் மீது பட்டு மீண்டது...

"என்னக்கா எப்பிடி மறியேறுது பாத்தியாக்கா...?" என்ற மய்யதீன்காக்கா ஒடுக்கமான தொழுவத்துக்குள் அகில மக்காவை மிகநெருங்கி அவளது வெற்றிலைவாசம் மூக்கருகே மணக்குமளவுக்கு நின்றிருந்தான்..அவனது தார்ப்பாய்ச்சிக் கட்டியிருந்த சாரனுக்கு வெளிப்புறம் தெரிந்த கால்களில் மறிக்கிடாவின் ரோமக்கற்றைகள் போலவே அடர்ந்திருந்தது..

"ம்..." என்ற அகிலமக்கா தன்வசத்திலில்லை. மறியாடும் கிடாவின் கம்பீரத்தில் இலயித்திருந்தாள்...

மறிக்கிடா ஒரு பெட்டையை முடித்துவிட்டு அடுத்ததை நோக்கித் தாவ... மய்யதீன் காக்கா கிடாவை இழுத்துப் பிடித்துக் கொண்டு சிரித்தான்..

"ஒரு பெட்டைக்கு மூவாயிரமக்கா... மத்ததுக்கு ஏறணு மெண்டால் வேறயா ரெண்டாயிரம் தெரணுமக்கா..."

"காசிலேயே குறியா இரி... பாத்துத் தாரண்... விடு... விடு..." என்று அவசரப்படுத்தி தற்செயலாகப்படுவது போல கயிற்றைப் பிடித்திருந்த அவனது கையைப் பிடித்து உலுக்கி விட்டாள் அகிலமக்கா...

"விட்டா ஆக்கள்ளயும் ஏறுமக்கா இது... சரியான மறி...! ஆனா பொருத்தமான பெட்டை ல்லக்கா உங்கிட்ட..." என்ற மய்யதீன்காக்கா "ஒரு மணித்தியாலத்துல மூணு தெரம் ஏறுமக்கா... பட்டியடியில ஒருநாள் நாலு பெட்டையளுக்கு ஏறிச்சக்கா..." என்று பெருமை கூறியவாறே ஒரு விசமப் புன்னகையுடன் அகிலமக்காவை கடைக்கண்ணால் பார்த்தான்.

அகிலமக்காவோ - மய்யதீன்காக்கா தன்னை உரசும் அளவுக்கு நெருங்கி நின்றிருந்ததை ஆட்சேபிக்கவுமில்லை.. தள்ளிப்போகவுமில்லை... அவனிடமிருந்து வீசிய ஒருவகை யான வியர்வை நெடி அவளைத் தள்ளிப் போகச் செய்ய வில்லை. அவனது ஆட்டுவாசத்தை உள்ளூர ரசித்துச் சுவாசித்த படி... வெளிப்படைக்கு மூக்கைப் பொத்திக் கொண்டிருந் தாள்..

மறிக்கிடா ஆவேசம் அடங்காமல் மறுபடி உயரக் கிளம்பியது... "எங்கக்கா அவரு... சின்னப்பு...அண்ணர்...?" என்று கேட்டு தன் வலிமையான கரங்களால் மறிக்கிடாவின் கயிற்றைப் பற்றித் திடீரென இழுத்தான் மய்யதீன் காக்கா

கரப்பத்துக்குப் போனவரு.." என்ற அகிலமக்கா தன்னை யறியாமலே "அவரு வெர நெல்லாச் சுணங்கும்..." என்றும் முணுமுணுத்துவிட்டு பின் - "காக்கா கன பெட்டையளுக்கு விட்டிருப்பாய் போல..." என்றாள் எதையோ நினைத்துக் கொண்டு.

என்னக்கா... கன பெட்டையளுக்கா...?... ஙிக்கிக் கஹூய்... அப்பிடி ல்லக்கா.. கண்டகண்ட எல்லாப் பெட்டை யளுக்கும் விடுறயில்லக்கா... பரவாயில்ல..." என்றான் பூடகமாக..

திடீரென மறிக்கிடா மய்யதீன் காக்காவின் பிடியி லிருந்து திமிறி விடுபட்டு அகிலமக்காவை நோக்கிப் பாய... அகிலமக்கா பயந்து கத்தியபடி ஒரு தற்செயல் கணத்தில் மய்யதீன் காக்காவின் பின்பக்கமாகப் பாய்ந்து அவனது முதுகைப் பிடித்துக் கொண்டாள். மய்யதீன் காக்கா சிரித்தபடியே

"பயந்துட்டியாக்கா...?" என்று கேட்டு கிடாயை இறுகப் பிடித்து இழுத்து அதன் விறைத்த குறியில் கொஞ்சம் சாராயத்தை ஊற்றினான். பின் அகிலமக்காவிடம் "இதக் கொஞ்சம் பிடித்துப் பாரனக்கா... இன்னம் வெறைப்பு அடங்கல்ல..." என்றான் குறும்பாக...

"எ...என.ன...ந..நா..னா...புடிக்கவா...?" பயத்துடன் அகிலமக்கா தயங்கியபடியே கையை நீட்ட... "அப்பிடி ல்லக்கா ந்தா இப்பிடிப் பிடிச்சுப் பாருக்கா..." என்ற மய்தீன் காக்கா திடீரென வெகு சுவாதீனமாக அகிலமக்காவின் கையோடு தன் கையை வைத்துப் பிடித்துக் கொண்டு. கிடா யின் விறைத்த குறியைப் பிடிக்கச் செய்தான்.. "ஆ..என்ன நீட்டமும் பெரிசும்..."

கிடாயின் குறியில் கைபட்டதுமே அகிலமக்காவுக்குள் ஒரு பூகம்பம் வெடித்து மனதெல்லாம் சிலீரிட்டுப் பரவியது..

அகிலமக்காவின் கைபட்ட கூச்சத்தில் கிடாய் திமிறி ஆவேசத்துடன் அகிலமக்காவை நோக்கி அசுர வேகத்துடன் தாவ- .

"க.கடவு..ளே...ய்..." என்று கத்திக்கொண்டே நிலை தடுமாறித் தரையில் விழுந்தாள் அகிலமக்கா. மய்யதீன் காக்கா வும் தடுமாறி சமநிலை குலைந்து அகிலமக்காவின் மீது இடறினான். மறிக்கிடா விடுபட்டு அடுத்த பெட்டையை நோக்கித் தாவியது.

"ச்சீ.. நாசமத்துப் போன மறிக்கிடாதான் இது." என்று கிடாயைத் திட்டியபடியே எழுந்த மய்யதீன்காக்கா "உளுந்துட்டியாக்கா..?" என்று கேட்டு அகிலமக்கா எழத் தன் கைகளை நீட்டினான்.. அவனது கைகளைப் பற்றிப்பிடித்த அகிலமக்கா எழும்பாமல் கீழே கிடந்தவாறே "அவரு... வரச் சுண...ங்கு..." என்று ஏதோ முணுமுணுத்தாள். மய்யதீன் காக்கா ஒரு நமுட்டுச் சிரிப்புடன் கீழே கிடந்த அகில மக்காவையே உற்றுப்பார்த்தான்...

சற்றுநேரத்தின் பின் தொழுவத்துக்குள் மய்யதீன் காக்காவின் மறிக்கிடா வேகத்துடன் இயங்கத் தொடங்கியது. அகிலமக்கா அதன் வேகத்தில் இலயித்துவிட்டாள்.. சின்னப்பர் வரச் சுணங்கும்தானே...?

எதுவரை..? - இணையம் - 2015 ஒக்டோபர்

# பொன்னெழுத்துப் பீங்கான்

என்ட கண்டுமணி மகளாருக்கு... பத்துமாசம் செமந்து பெத்த ஒங்கு ம்மா சவரியத்தும்மா பேசி அனுப்புற கடசிக் கெசட்டுப் பீசி இது.. நீ லண்டனுல இரிந்து அனுப்பின காய்தமும்..காசியிம் கெடைச் சிச்சு.. நம்முட போஷிமாஸ்டரு எல்லாம் வாசிச்சுக் காட்டினாரு.. அதக் கேக்கக் குள்ளேயே என்ட ரெண்டு கண்ணுலயும் தண்ணி.. என்ட மகளே... ஒன்ன நெனச்சிக் கொளறிட்டன்டா.. மளே... நீ வெளி நாட்டுல.. கங்காணா தேசத்துல... நா ஞ்ச ஊர்ல..உள்ளதும் ஒரு கொம்புளப் புள்ள நீ.. ஒன்னப் பிரிஞ்சி நான் எப்பிடி மகள் நெம்மதியா இரிக்கிற....?

எண்ட கண்டு மஹறளாரே.... நீ அந்தக் கடிதத்தோட அனுப்பி இரிந்த அந்தப் போட்டோவுல இரிக்கிற ஒனக்குக் கூட நிக்கிற அந்த வெள்ளக்காரக்காரன் ஆரு புள்ளேய்...? என்ட மனசு கெடந்து மறுகு துடி... அவனுக்கும் ஒனக்கும் என்ன

ஒறவுஹா புள்ளேய்... கூடப் படிக்கிறவனா...? வேல செய்யிற வனா..? கூட இரிக்கிறவனா...? அவனப்பத்தி நீ ஒண்டும் எழுதல்லியே... ஏண்டா மஹளே... ஆருஹா அவன்..?

அவனத்தான் நீ கலியாணம்கிலியாணம் முடிக்கிற ண்ட மாதரி... .அப்பிடி ஒரு எண்ணம் உண்ட மனசில இரிந்தா அத உட்டுர்ரி.. ராசா...மஹளே.. அந்த அறாமான வேல நமக்கு வாணா.. ஒனக்கு தெறிச்சிப் பாத்து மாப்புள்ள எடுக்க எனக்கித் தெரியிம்.. ஊருல கன சனம் இரிக்கி... உன்னக் கேட்டு... ஊடுவளவும் ஒண்டும் வேணா ண்டு சொல்லி ஒன்னக் கேட்டு வேலம் வெதானட மகன் லாக்குத்தருப் பொடியன் வெசளம் அனுப்பின... நம்மட பள்ளிக்குடப் பிரிஞ்சிப்பில்லும் அவர்ர ரெண்டாவது மகன் எஞ்சினியருக்கு கேட்டு நடக்காரு.. மறுகா நம்முட காசிம்போடிமாமாட மகன் ஒரே சாடமாடயா கேட்டுட்டுத்தான் இரிக்காரு... ப்பிடி ஊருல மாப்புள்ளமார் அடிபுடி.... எத்தினயோ சனம் காத்திரிக்கி ஒண்ண எடுக்க... நீ அங்க வெளிநாட்டுல அப்பிடியிப்பிடி ஒண்டும் செஞ்சி பொட்ராத ம்மா...

ஒண்ட கால் ரெண்டையும் புடிச்சன்... ஒன்னயப் பெத்த வவ்த்துல நெருப்ப அள்ளிக் கொட்டிராத... நான் வருத்தக் காரி... வாள்ர வயசில புரிசனப் பலி குடுத்த கைம்பொண்சாதி... நாப்பது வரிசமா மான ஒளுக்கத்தோட வாள்ர இசலாமான கொம்புள நான்...நீ என்ட ஈரக் கொளுந்து... என்ட சொத்தை யில கரியள்ளிப் பூசிராத கிளியே...

ஒங்கு வாப்பா எப்பிடிப்பட்ட மனிசன்...? ஒண்ட பத்து வயசில அவரு மவ்த்தாய்ட்டாரு... அவரும் நானும் வாள்ந்த வாள்க்க எப்பிடியான வாள்க்க...? தெரியா ஒனக்கு... ஆனக் காவலுக்கு ராவையில தட்டத்தனிய போய் வார நெஞ்சுத் தகிரியமான ஆம்புள அவரு... ஒவ்வொரு ராவையிலயும் போகக்க தப்பாம அந்தப் பொன்னனெளுத்துப் பிங்கான எடுத்து அதுலதான் சாப்பாட்டக் கட்டி எடுத்துட்டுப்

போவாரே..்ஊட்ட சாப்பிர்ரதும் அதுலதான்.. எங்கயும் போய்ச் சாப்பிடுற எண்டாலும் அந்தப் பொன்னெளுத்துப் பிங்கானத்தான் எடுத்துப் போவாரு... "ஞ்சங்க... ஊட்டுல இ.ந்த ஒரு பிங்கான் மட்டும்தானா இரிக்கி...?" ண்டு நான் கேப்பன்... நீயும் அதப் பாத்து "வாப்பா..வாப்பா.. இது வாப்பாப் பிங்கான்... ண்டு செல்லுவியே... அதுக்கு வாப்பா என்ன செல்ற ண்டு தெரியிமாஹா புள்ளே...ய்...?"

"டியெ... சவரியத்து ...ந்தப் பொன்னெழுத்துப் பிங்கானுல மட்டும்தாங்கா நான் சாப்பிடுற... பலபல பிங்கானுகள்ள சாப்பிடுற பளக்கம் எனக்கிட்ட ல்லடி... நீயான் என்ட பொன்னெளுத்துப் பிங்கான்..." ண்டு செல்லி என்னப் பாத்து கண்ணச் சிமிட்டிட்டுச் சிரிச்சாரே.... வெளங்கிச்சா புள்ள ஒனக்கு... அது ஏணுண்டு... அதர கருத்து என்னண்டு....? பெரிய இங்கிலிசி சிங்கிலமெல்லாம் படிச்சிரிக்கிறியே..இதர அர்த்தம் தெரியிமா நொக்கு..?

அப்பிடி... ஒருபிங்கான்ல மட்டும் சாப்பிட்டவண்ட மகள் நீ... ஒளுக்கமான ஒருமையான ஆம்புளைக்கிப் பொறந்தவள் நீ.. நீ ஒரு நாளும் பொளயா நடக்க மாட்டாய்.. அப்பிடி நா ஒன்ன வளக்கல்ல.. ஒண்ட வாப்பாவப் புலிப்பட சுட்டுக்கொண்டுபோடக்குள்ள ஒனக்குப் பத்து வயசி....எனக்கி 26 வயசி.. அந்த மனிசன சுட்டும் வெட்டியும் அரிஞ்சி எரத்தம் ஒறஞ்சி போய்... மய்யித்து வரக்க... என்ட தங்க மகளாரே... நான் எப்பிடித் துடிச்சித் தொவண்டு போயிருப்பன்.... அவரு ஆருக்கு என்ன கருமம் செஞ்ச...?

சும்மா வளக்கம் போல ஆனக்காவலுக்குப் போக அதே பொன்னெளுத்துப் பிங்கானுல சோறு கட்டிக் குடுத்தன்.. "வெட்டயால தமுளன்ட கொளப்பமா இரிக்காம்... ண்டைக்கும் காவலுக்குப் போகணுமா...?" ண்டு கேட்டன்... சிரிக்காரு... புலிப்படயக் காட்டி சிங்கப்பட பொறுப்பு.. சிங்கப்படயக் காட்டியிம் ஆனப்பட பொறுப்புடி புள்ளேய்...

வயலத் தொவைச்சிரும்... நான் போகாட்டி ஆனக் கூட்டம் வட்டைக்க பூந்து அளிச்சிரும்.. என்ன நம்பி ஒரு கண்டம் பயிரு இரிக்கி..." ண்டு செல்லிட்டு.. ஒன்னத் தூக்கிக் கொஞ்சினாரு.. "போறன் சவரியத்து! புள்ளயப் பாத்துக்க..." ண்டுதான் அவரு கடசியாச் சென்ன கத.. போய்ட்டாரு... அதான் கடசிப் போக்கு ண்டு எனக்கி எப்பிடித் தெரியிம்...? பொலுபொலுண்டு விடியக்க - வெசளம்வந்துட்டு... அவரச் சுட்டும் வெட்டியும் வட்டைக்க கால்வாய்க்க போட்டிருக்காம்... பொன்னெளுத் துப் பிங்கான்ல சாப்பிட்ட பாதி சாப்பிடாமப் பாதி கெடக்கு தாம்... துடிச்சிட்டன்டா தங்கோம்... என்னப் படச்ச நாயனே... என்னடாது ந்தக் கொடும.... ண்டு கத்தினன்.. கதறினன்... ஆரு செஞ்ச...? ந்தக் கறுமத்த செஞ்சவன் ஆரு...? என்ட வாள்க்கயக் கொலச்சது ஆரு... அவன....? அவன.....? நெஞ்சி அடைச்சி யாது மாறி உளுந்துட்டண்டி கிளியாரே...

இருபத்தாறு வயசில பத்து வயசிப் புள்ளயோட திடீர்ண்டு வெதவ.... ராவு புரிசனனோடப் படுத்த நான் அடுத்த நாள் கம்பொண்சாதியாப் போனன்...டி மகளே... ஒண்ட மொகத்தப் பாத்து.. "எண்டல்லா...எண்டல்லா" ண்டு கத்தினன்.. ஊரு கூடி ஆறுதல் பண்ணியும் ஆறுமாடி என்ட புண்ணு...? இனி என்னய்ற நான்... இதான் நம்முட தலநசிவு... அதத்தான் நம்முட தலயில ஆண்டவன் எழுதி வெச்சிட்டான் ண்டு பொறுதி பொறுத்தன்...ஆருக்காக... ஒனக்காக... நீ மட்டும் ல்லாட்டி என்ட புரிசனோட என்ட உசிரயும் மாச் சிரிப்பன்... ஒன்ட மொகத்துக்காகத்தான் பொறுதியானன்... அவர்ர மய்யத்தோட கொண்டாந்திருந்த அந்தப் பொன் னெளுத்துப் பிங்கான வடிவாக் களுவி அடிப் பெட்டிக்க வெச்சிப் பூட்டிட்டன்... ஒனக்காக மட்டும் வாளத் துணிஞ் சிற்றன்.

என்ன வேல செய்யல்ல நான்.. பொட்டி எளச்சன்.. புல்லுப் புடுங்கினன்.. அப்பம் சுட்டு வித்தன்... கடயளுக்கு வட

சுட்டுக் குடுத்தன்... ஊட்டு வேலையள் செஞ்சன்...பயிருபச்ச வெதச்சன்.. நெல்லுக் குத்தினன்.. சீட்டுக் கட்டினன்.. எல்லாம் செலவளிச்சி ஒன்னப் படிப்பிச்சன்... வாப்பா ல்லாத ஒரு சின்னக் கொறயும் வெயக்கல்ல... நீ கேட்டதெல்லாம் வாங்கித் தந்தன்... நீயும் நெல்ல கெட்டிக்காரிதான்.. என்ட கய்ட்டத்த ஒணந்து படிச்சாய்... எடுத்த சோதனயெல்லாம் பாசாய்னாய்....ஒசந்த படிப்புக்கு ண்டு செல்லி அரசாங்கமே ஒண்ண லண்டனுக்கு அனுப்பிச்சி.. செலவுக்கு ண்டு ஒனக்கு ஊடு கட்ட வெச்சிருந்த காசெல்லாம் தந்தன்.. நீயும் லண்டனுக்குப் போய் ப்ப வரிசம் ரெண்டாய்ற்று.... கடிதம் அனுப்புறாய்..காசனுப்புறாய்...ப்ப எனக்கு ஒரு கய்ட்டமும் ல்லத்தான்... ஆனா...

நான் என்ட புரிசன எளந்து இரிபத்தஞ்சி வருசத்துலயும் நான் பட்ட கய்ட்டங்கள்....பட்ட சதுரப்பாடுகள்...ஆம்புளத் தொண ல்லாம தட்டத் தனிய ஒழுகிற குடிசைக்க படுத்த அந்தக் காலத்துல.... எனக்கி வந்த சோதனயும் வேதனையிம் ஆருக்கு வெரும்...? அந்நரம் எனக்கும் எத்தின வாள்க்கைகள் தேடி வந்திச்சுகள். மொதலாம் தாரம் ண்டும் ரெண்டாம்தாரம் ண்டும்... எத்தினயோ பேரு... ஆனா....என்ட மனசில எதுக்கும் எடம் குடுக்க நான் உடல்ல.. எண்ட நபுச ஒரேயடியா அடக்கிற்றன்... எண்ட ஒருமையான ஆம்புள்ள சாப்பிட்ட ந்தப் பொன்னெளுத்துப் பிங்கான்ல வேற எவருக்கும் சாப்பிட இடமில்ல.. அது நடக்காது.. கடசி மட்டும் நடக்காது... அப்பிடி ஒருமையோட இரிக்கிறவள்தான் ந்தச் சவரியத்து....ம்மா.... ஏ..ன்...?

ஒரு பிங்கானுல மட்டும் சாப்பிட்டஅந்த மன ஒருமை யான ஆம்பிளக்கி கடசி மட்டும் விசிவாசமா... அதப் பொன்னப் போல பாதுகாத்து... ஆரையும் அதுல சாப்பிட உடாம இருபத்தி அஞ்சி வரிசமா பாதுகாத்திரிக்கன்...ஏன்... என்ட விசிவாசம்... நம்பிக்க... ஒளுக்கம்... இசிலாமான கொம்புள...

அப்பிடிப்பட்ட எனக்கிப் பொறந்த ஒனக்கிட்டயும் அந்தப் பொன்னெழுத்தப் பிங்கான்தான் இரிக்கிம்... அதுல நீ ஆரையும் சாப்பிட உடமாட்டாய் ண்டும் எனக்கித் தெரியிம்... ண்டாலும் புள்ளே.... எண்ட மனம் கெடந்து அல்லாடுது... ஒடன ந்த கெசட்டுப் பீசக் கேட்ட ஒடனே.... நாட்டுக்குப் பறந்து வாடா என்ட கண்டு மகளாரே.... நீ வெராட்டி எண்ட மய்யத்துலதான் முளிப்பாய்... செல்லிட்டன்... வல்ல பெரிய நாயன் ஒனக்கு ஒதவி செய்யட்டும்.... ஆமின்.... ம்க்க்க்க... ம்ம்ம்..

தடாகம் – இணையம் – ஒக்டோபர்.2015

# அணில்

அலிகன்முல்ல அஞ்சல் அலுவல கம் அமைந்திருந்த பெரிய வளவின் முற்றத் தில் பிரமாண்டமாக வளர்ந்திருந்தது மருத மரம் ஒன்று. அதன் பக்கக் கிளையிலிருந்த பொந்தக்குள்ளிருந்து நாளைக்கு கொல்லப் படவிருந்த அந்த அணில்குஞ்சு எட்டி எட்டிப் பார்த்தது. "கிச்..கிச்"ன்று கத்தியது. திடீரெனத் தாவி மறுகிளைக்குக் குதித்தது. கீழே குறுகுறுவெனப் பார்த்தது. அதன் பஞ்சு வால் ஆடிக்கொண்டேயிருந்தது. தன் எஜமானான தபாற்சேவகன் இந்திகவைத் தேடிக் கொண்டிருந்தது.

அஞ்சல் அலுவலகத்தினுள் அவசர அவசரமாகத் தபால்பை கட்டிக் கொண் டிருந்த இந்திகவின் காதுகளில் "கிச்..கிச்" சென்ற சத்தம் கேட்டதும் விரைவாக வெளியே வந்தான். அவன் மரத்தினடியில் வந்ததும் அணில் "கிச்"சென்ற சத்தத்துடன் அவனது தோளில் பாய்ந்தது. இந்திக அதன் முதுகைத் தடவிக் கொண்டு அதனிடம்

ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தான். பலமாத காலமாக இந்த விசித்திர உறவு தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

அஞ்சல்அலுவலகத்தினுள்ளிருந்து யன்னலூடாக விநோதமாகப் பார்த்துக்கொண்டிருந்த நஸீர். ஒர் உதவித் தபால் அதிபர்.. இந்திகவைக் கூப்பிட்டான்.

"இனி..? இந்திக அணில் இண்டைக்கு என்ன சொல்லிற்று..?" நஸீர் கேட்டதும் இந்திக சிரித்து-

"பவ் மஹத்தயா.. தவஸ் தெக்கஹிந்த கொல்லாட்ட தரஹவெலா மாத்தெக்க.. அய் தன்னவாத..? மெ பேரக் கெட்டியக் துன்நேள்ளு மங்..." (பாவம் மஹத்தயா.. அதுக்கு ரெண்டு நாளாக கோபமாம் என்னோட.. ஏன் தெரிமா.. கொய்யாப்பழம் கொடுக்கயில்ல நான்..) என்று சிரித்தான்.

"ஹரி..ஹரி.. லொக்கு மஹத்தயா 'செக்' கரண்ட எனவா.. 'டக்'காலா மெயில் எக்க வஹண்டகோ.." (பெரிய ஐயா 'செக்' பண்ண வெருவாரு.. கெதியா மெயிலைக் கட்டு)

அச்சமயம் பெரிய தபாலதிபர் வினாயகமூர்த்தி ஐயா உள்ளே வந்தார். ஊர் கோப்பாய். இந்தச் சிங்களக் கிராமத்தில் ஆறு வருடங்களாகக் கடமை செய்து வருகிறார். சிங்களம் தளதண்ணி மனிசருக்கு. நஸீருடன் மட்டும் தமிழில் கதைப்பார். கூட நஸீருடன் இந்திகவும் இருந்தால் சிங்களம்தான்.. (அவன் தப்பாக நினைத்துக் கொள்வானாம்.)

"தம்பி..நஸீர்... சரியா எட்டரைக்கெல்லாம் 'மெயில் பஸ்' வந்திடுமடா மோனே.... முடிஞ்சிருமோ.?"

"ம்..ஐயா.. இப்ப முடிஞ்சிரும்.."

"சரி முடி.. எதையும் கெதி பண்றத்துல சோனகர் மெத்தவும் உசார்தான்.." -பெரியவர் அரசியல்வம்புக்கு இழுத்தார். கதை கொடுத்தால் பண்டாரவன்னியன் தொடக்கம் பிரபாகரன் வரை அணிவகுப்பர்..

"......................." நஸீர் பேசவில்லை. ஆனால் பெரியவர் விடவில்லை.

“ந்த நாட்டுல பூர்விகம் எண்டால் அது இசக்கர் நாகர் என்ட தமிள் பேசின இனம் மட்டும்தான்.. தெரியிதே..? சிங்களரும் விஜயன்ட வருகைக்குப் பிறகுதான் வந்திச்சினம்.. சோனகருக்கும் லங்கைக்கும் ஒரு சம்பந்தமுமில்லை.. நான் தந்த உவன் “வால்ட் டய்லரி”ன் கட்டுரையைப் படிச்சனீர்தானே..? அப்பிடி இருக்கேக்க அவரு உங்கட தலவரு அதென்னது.. ஙா.. பூர்விகம் பத்தி பார்ளிமெந்துல பேசப் போறாராமே.. என்ன பேசாம இருக்கிறீர்..? என்னவெண்டாலும் சொல்லுமன்...” பெரியவர் விடவில்லை..

“இதுக்குப் பதில் சொல்ல ப்ப நேரமில்ல ஐயா..!” நஸீர் சுருக்கமாக வெட்டினான்.

“ஹிக்ககீய்.. ஏ.. என்னது..? ஙா...ங்.. தனிஅலகு! ... தனி அலகு வேற வேணுமாம்.. ம்க்க்க்.. நல்ல பகிடியொண்டெல்லே இது..?”

நஸீர் வாய் பேசவில்லை. எனவே. பெரியவர் தன் பேச்சை தற்காலிக போர்நிறுத்தம் செய்தார். பெரிய மேசையில் உட்கார்ந்து முத்திரைக் கணக்குகளைச் சரிபார்க்க ஆரம்பித்தார்.

திடீரென யன்னலில் “கிச்கிச்சென” சத்தம்.. முதலில் ஒரு பட்டுப் பஞ்சு வால் தெரிந்தது. பின்னர் துள்ளித் திரும்பியதில் முதுகில் மூன்று கோடுகளுடன் சின்னக் கண்களால் எட்டிப் பார்த்தது அணில். இந்திக கண்களால் எச்சரித்ததை அது அலட்சியம் செய்து உள்ளே தாவி வந்தது. பெரியவரின் அருகே ஓடியது..“ச்சூ..ய்ய்ய.” என்று அதட்ட அணில் பயத்துடன் ஒரே தாவலில் இந்திகவின் சீருடைப் பக்கெட்டினுள் தாவி ஒழிந்து கொண்டு பொட்டுக் கண்களால் எட்டிப் பார்த்தது. அமைதி கலைந்த பெரியவர்

“உன்ர அணிலுக்குச் சிங்களம் தெரியுமே..?” என்று தமிழில் கேட்டார்.

“கொஞ்சம் கொஞ்சம் இயலும் ஸேர்..” கேள்வியில்

விருப்பமின்றிச் சிரித்தான் இந்திக.

"எடடே.. மிருக சாதிக்கே சிங்களம் வெளங்குது.. இந்த உந்தச் சிங்கச் சாதிக்கு தமிள் விளங்கறயில்லையாம்.. உங்கட சோனகச்சாதிக்கு பாசைப் பிரச்சினயில்லையப்பு.. சிங்களவ னோடச் சேர்ந்தா சிங்களம்.. தம்ளனோடச் சேர்ந்தா தம்ள்.. அரபுநாட்டுக்கப் போனால் அரபு.. உந்த வெசயத்துல சோனக ரின்ர திறமையை பாராட்டத்தான் வேணுமப்பா.. சாதாரணமா மூணுநாலு பாசை தெரியுமில்லே.. சோனகருக்கு..?" என்றார். நஸீர் பேசவில்லை. அதைப் பொருட்படுத்தாத பெரியவர்

"அடே நஸீர்.. இந்திக்க கேளுங்களடா.... ஓமந்த கேம்ப் எக்க அபே கொட்டி அற்றாக் கரண்ட வெலாவட்ட...." (ஓமந்தை கேம்ப்பை எங்கள் புலிகள் தாக்கும் போது...)... என்று புலிப்படைப் புகழ் பாடத் தொடங்கி ஸ்ரீ போராட்டம் தொடக்கம் தரப்படுத்தல் சட்டம்... சிங்களம் மட்டும் சட்டம்... அதன் விளைவான தமிழர் பாதிப்புக்கள்.. அதன் தொடர்ச்சி யான போராட்டங்கள்... அது ஆயுதப் பேராட்டமாக உரு வெடுத்த வரலாறு... என்றெல்லாம் தொடரவே நஸீரும் இந்திகவும் அணிலும் புன்னகைத்தபடி வேறுவழியின்றி வேண்டாவெறுப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

***

அணிலின் மரணம் தீர்மானிக்கப்பட்ட அன்று ஞாயிற்றுக் கிழமை தபாலகம் இரண்டுமணி நேரம்தான் திறந்திருக்கும். முக்கியமான தபால்கள் கட்டப்பட வேண்டும். பெரியவரும் நஸீரும் இந்திகவும் மும்முரமாகவேலை செய்துகொண்டிருந்தனர். அணிலும் வெகு சுதந்திரமாக தபால் அறையில் ஓடித் திரிந்து கொண்டிருந்தது.

திடீரெனப் பெரியவர் ஆரம்பித்தார்.

"-நேத்து பீபிஸி கேட்டனீரே.. ..உம்மட தலைவருக்கு தனிமாநிலம் வேணுமாம். ஆடு அறுக்கிறத்துக்கிடையில அதுர புடுக்க அறுக்..... அடச்ச்ச..சே.. உந்த அணிலப்

பாருமன்.. 'மெய்ல்பேக்கு'க்குள்ளயெல்லே போய்ட்டுது.. கலையடாப்பா அத.."

"ஐயா சமைக்கல்லையா..?" கேட்டான் நஸீர் மறுபடி தமிழரசியலுக்கு பெரியவர் வந்துவிடாதபடி..

"சமைக்கத்தான்.. இண்டைக்கு அசைவம்தான்.. நானும் உவன் இந்திகவும் கொஞ்சம் 'முஸ்பாத்தி' எடுப்ப மெண்டு.... நில்லுமன் நீரும்.. இண்டைக்கு எங்களோட.. கொஞ்சம் 'ட்ரிங்க்' எடுப்பமென்ன..?"

"நான் குடிக்கிறல்லை ஐயா.. இண்டைக்கு நான் வீட்ட போயே ஆகனும்.. அய்யா.. தலைக்கு மேல வேல இருக்கு.."

"மோமோம் தெரியும்.. தலைக்கு மேலயில்ல கீழதான் வேல இரிக்கும்.. சோனகர் என்ன இல்லாட்டாலும் இருப் பினம். ஆனா ... ல்லாம இருக்கமாட்டினமெல்லே..? சரி.. சரி.. நீர் போறெதெண்டால் போம்.. என்ற பெரியவர்- இந்திகவிடம்..

- இந்திக.. ரெட்ரம் தெக்க வைற் காலயக்.. பியர் எக்க .;; பெரியவர் இந்த விசயத்தில் மட்டும் கஞ்சத்தனம் பார்க்க மாட்டார். ஐநூறு நோட்டை விசிறிவிட்டு குவார்ட்டஸ் பக்கம் சென்றார்.

இரண்டுமணியாகிவிட்டது. அம்பலாங்கொட தபால் வண்டி வந்துவிட்டது. தபாலைப் பாரம் கொடுத்து ஒப்பம் பெற்று சகல கதவுகளையும் சாத்தித் தாளிட்ட நஸீர் திறப்புக் களை எடுத்தக் கொண்டு 'குவார்ட்டஸ்' பக்கம் வந்தான். சமையற்கட்டிலிருந்து இறைச்சி பொரியும் மணம் 'கம்மெ'ன மணத்தது.

"அய்யாட அசைவச்சமையல ஒரு நாளைக்கு ருசி பார்க்கனும் நான். 'தக்பீர்' பண்ணிண இறைச்சி கொண்டு வாரன்.. 'ரோஸ்' பண்ணுவீங்களா அய்யா.."

"உதென்ன விசர்க்கேள்வி.. றச்சி 'ரோஸ்' பண்றத்துல நான் 'கிச்சன் கிங்' தெரியுமே..? கொண்டாரும்..

கொண்டாருமன்.. அதெல்லாம் வெகு "ஸ்பெசலாக;ச் செய்வனடா... றச்சி சமைக்க எனக்கு ஒரு காத்தான்குடிச் சோனகன்தான் பழக்கி விட்டவன்... அருமையாச் சமைப் பானப்பா.. நான் காத்தான்குடியில... ஆயிரத்தி..."

"ஆயிரத்தி அறுவத்தி ரெண்டு தடவ சொல்லிட்டீங் கய்யா.. நன்றிகெட்ட சோனகர் குவார்ட்டஸ்க்க புகுந்து சுட வந்திட்டினம் எண்டு..."

"அந்தா பாத்தியா..? அதான் சோனகர்..!"

"கறி என்னய்யா... மாடா..? கோழியா.. இன்றைய ஸ்பெசல்..?"

"ரண்டுமில்ல.. அணில்..."

"என்னது...? என்னய்யா.. என்ன இறைச்சி..?"

"அணில்..! உவன் பியோன் இந்திகவின்ர லேணா..றச்சி ரோஸ்ட்.."

அதிர்ந்துபோய்விட்டான் நஸீர். இந்திக வளர்த்த அந்த அணிலா..? ச்சே என்ன மனிசன் இந்த ஆள்..? ஆத்திரமும் அதிர்ச்சியுமாக நஸீர் படபடத்தான்.

"என்ன அய்யா இது.. மோட்டுக் காரியம் பண்ணீங் கள்..? அவன்ர அணிலயா கறி ஆக்குறது..? இத அவன் அறிஞ் சால் எண்டால்...? அறியத்தானே போகிறான்.. இப்ப சாராயம் எடுத்திற்று வந்து அணிலத்தானே தேடுவான்..? இதுக்கு என்ன பதில் சொல்லப் போகிறீங்களோ தெரியா.. என்ன மடத்தனம் இது.. இத்தனைக்கும் அவன் அன்பா வளர்க்கிற அணிலயா... ச்சே..க்..!"

"என்னப்பா பினாத்துறீர்..? சோனகரும் தாம் அன்பா வளர்க்கிற ஆடு மாடுகளத்தானே வெட்டுகினம்.. அது பாவ மில்லையே...?"

"என்ன மடத்தனம்..! அதுவும்இதுவும்ஒண்டா அய்யா..?"

"வேறென்ன..? எல்லாம் வாயில்லாத சீவராசிகள்தானே ப்பு..?"

"இப்ப இந்திக வந்தான் என்டால்..? என்ன நடக்கும்..? இங்க நடக்கப்போற கொலைக்கு நான் சாட்சியா இருக்க விரும் பல்ல.. திறப்பப் புடிங்க அய்யா.. நான் வீட்ட போறன்.. என்ன மடத்தனம் இது.. அவன்ட அணிலப் புடிச்சி... பாவம் புண்ணியம் பாக்காமக் கொண்டு.. ச்சே.. அய்யா.. கடசியா ச் சொல்றன்.. நீங்க இஞ்ச இருக்கிறது நல்லா இரிக்காது.. 'டக்கெ'ண்டு வெளிக்கிட்டு எங்கேயாச்சம் போங்க.. இல்ல என்னோட வாங்க.. அவன் இந்திகட அண்ணண்மார் ஆமில இரிக்கான்.. அனுராதபுரத்துல அறுத்து ஒரு மாதமாகயில்ல.. ச்சே.. என்ன செய்யப் போறீங்க அய்யா..?"

பெரியவர் ஒரு குறுஞ்சிரிப்படன் அதி நிதானத்துடன் சொன்னார்.

"இண்டைய சாராயத்க்கு 'றச்சிரோஸ்'தான் 'பைற்' வேண்டுமென்று அவன்தான் கேட்டவன். இப்ப அவசரத்துக்கு மாடு ஆடு தேடேலுமே... உதுதான் வசதியா அகப்பட்டுது.. நீர் விரும்பினா நில்லும்.. இல்லாட்டால் உன்ர பெண்டிலுட்ட ஓடுமன்.."

நஸீர் பதற்றத்துடன் சட்டென்று திரும்பி வெளியே வந்தான்.. தன் கைப்பைகளை எடுத்துக் கொண்டு வேகமாக மருதமரத்தைக் கடந்த போது இந்திக.. மனம் பயத்தில் துணுக் குற்றது. இந்திக கையில் தபாற்பைக்குள் மூன்று சாராயப் போத்தல்களை மறைத்துக் கொண்டு ஒரு 'டிபிடிப்' பக்கட்டை எடுத்து மருதமரத்திடம் காண்பித்து.. 'சிக்கூ......ஸ்...' என்று விசிலடித்தான்.. பதிலளிக்க யாருமில்லை.. மீண்டும் கூப்பிட்டுப் பார்த்தான். அணில் வெளிவரவில்லை..

"ஙா..ஙா.. வடகினினம் எனவாந் நே..? வலமுவலமு.." (பசியென்றால் வருவாய்தானே பார்ப்போம்.. பாாப்போம்..!!) என்று கறுவியபடி ஒரு சிறு கல்லைப் பொறுக்கி அணில்ப் பொந்தை நோக்கி எறிந்து விட்டு உல்லாசமாகச் சீட்டி யடித்தபடி குவார்ட்டஸ் பக்கம் சென்றான்..

நஸீர் பயத்துடன் குறுக்குக் கிறவல் பாதையில் இறங்கி விரைந்தான்..

***

எல்லைகளில்லாத கொலைக் கற்பனைகளுடனும்.. அதீத கலவரத்துடனும் பிரயாணம் செய்து இரவு சரியாக எட்டரைக்கு வீடு வந்த சேர்ந்த நஸீர் உடனடியாகப் பரபரப் புடன் அலிகன்முல்ல தபாற்கந்தோருக்கு தொலைபேசி எடுத் தான். நெடு நேரமாக மணி அடித்துக் கொண்டிருந்தது. மனம் பதைபதைத்தது. அலிகன்மூல்ல பொலிசுக்கு அறிவிப்போமா என்று யோசித்தான். திடீரென தொலைபேசி மணி அடித்தது.. பரபரப்புடன் எடுத்தான்.

“ஹெலல்லோ.. ஙா.. நஸீர்.. ப்ப நீர் கோல் எடுத்தனீரே..?” பெரியவரின் சற்றே போதை கலந்த குரல்.

“அய்யாவா..? நான்தான் எடுத்தனான். நீங்க உயிரோட இருக்...”

“நான் சாகுறத்தில் உந்தச் சோனகருக்கு அவ்வளவு விருப்பமே..?”

“ல்லை அய்யா.. அவன் இந்திக தன்ர அணில...”

“உன்ர கற்பனப் புத்திய கதையள் எழுதறத்தோட நிப்பாட்டப்பு.. உது இந்திகவின்ர நான் ‘ரோஸ்’ பண்ணின ஆறாவது அணில் தெரியுமே...? அந்தா சட்டியோட வழிச்சி வழிச்சி விழுங்கிற்று விழுந்து கிடக்கிறானடா பாவி.. மோனே...”

நன்றி–யாத்ரா–ஜுன்–2012 இதழில் பிரசுரமானது.

# தீரதம்

பாரதம் பாடித் தாள் தேடிக் காணாயின்
தீரதமேறியுந்தன் திவ்வியச் சமுகம் வருவேன்.
(தோப்பு அப்பா நாயகம்)

"நல்லது இளவலே.. வல்லபெரிய இறையே உம்மை என்னிடம் வரவைத்தது.. 12 வருடங்கள் உமக்கு இந்த இறை பாட்டையில் பயிற்சியளித்தோம். உமது நிலை ஒவ்வொரு கட்டத்திலும் முன் னேறியே வந்துள்ளது..."

"அது அவனின் மாபெரிய கருணை யும் எனது பாக்கியமும் முக்கியமாகத் தங்கள் கடாட்சமும்தான் என் சங்கைமிகு சற்குரு நாதர் அவர்களே..."

"நல்லது இளவலே... கடுமையும் சிரமமும் நிறைந்ததும் மன ஓர்மையுமிக்க தான இந்தப் பயிற்சிகளினாலும் அந்த வல்ல இறையின் கருணையினாலும் 5 படி நிலை களை வெற்றிகரமாகக் கடந்து இப்போது முக்கியமான ஒரு நிலைக்கு வந்துள்ளீர்..."

"தங்கள் கருணையான கரம்பிடித்து இறைபாட்டையிற் சென்று அவனளவில் நான் அழியவே வேட்கைப்படு கின்றேன் என் கண்மணியே குருவே."

"நல்லது இளவலே.... முதலாவது படிநிலையில் என்ன அறிந்தீர்..?"

"ஆ...அதை என்னவென்று சொல்வேன் என் கருணை நாயகமே.. என் முதல் தரஜாவில் உலோகப் பொருட்களின் திரைகள் அகன்றன.. உலோகங்களின் மூலகங்கள் மற்றும் கற்கரடுகளின் சேர்க்கைகள் அவை படைக்கப்பட்டிருப்பதன் இரகசியங்கள் அனைத்தம் அறிந்தேன் என் உயிரினும் மேலான பாதுஷவான குருநாதரே..."

"நல்லது இளவலே.. இரண்டாவது ஏற்றத்தில் என்ன உணர்ந்தீர்..?"

"ஓ.. எல்லர்ப் புகழும் அவனுக்கே... அதில் நான் தாவரங்களின் தாரதம்மியங்கள் அவற்றின் உயிர்மைப் பண்பு கள் அவை சதா மொழிந்து கொண்டிருக்கும் இறைதுதி களையும் என் காதாரக் கேட்டேன் என் சங்கைமிகு ஷெய்கு நாயகமேஃ..."

"நல்லது இளவலே.. உம் மூன்றாவது தரஜாவின் போது ....?"

"சுபஹானல்லா"...! இந்த மூன்றாம் ஏற்றத்தில் நான் நீண்ட காலமிருந்தேன்..என்னருமை நாயகமே.. அச்சமயம் எனக்கு உயிரினங்களின் மொழிகள் அனைத்தும் அறிவிக்கப் பட்டன... அவற்றின் தனித்தனியான துதிகளும் அறிந்தேன். இறைவழிபாடுகளில் ஜீவன் ஊடுருவியிருப்பதையும் ஜீவனுள்ள வழிபாடுகள் உருக்கொண்டிருப்பதையும் நேரிடை யாகப் பார்த்திந்தேன் என் காரண மகத்துவ நாதர் பெருமானே..."

"நல்லது இளவலே.. 4வது படிநிலையில் அறிந்த மாட்சிமைகள் என்னவோ...?"

"அல்ஹம்துலில்லா்... ஆன்மாவம் ஜீவனும் சேர்ந்திருக்கும் திருக்காட்சி அது... மறைதல் புலப்படுதல்களின் இரகசியங்கள்..! இரசவாத உலகங்களின் உயிர்ப்புக்கள்...!! ஆன்மாவுக்கும் ஜீவனுக்கும் உடம்புக்கும் உள்ள தொடர்புகள்... வகைகள் அனைத்தும் என் முன்னே தோற்றமாயின என் பாஷாவேயான நற்குணக் கொழுந்தே என் நாயகமே...."

"நல்லது இளவலே.. 5வது தரஜாவில் எதை அடைந்தீர்...?"

"ஆஹா... வர்ணிக்க முடியாத ஜோதிப்பிரகாசம்... பரஞ்சோதியானவனின் மாட்சிமைமிக்க வர்ணங்களில் தோய்ந்தேன் என் காமிலான ஷெய்கேயான குருவே...

"நல்லது இளவலே... அனைத்தும் உண்மையே... 5 தரஜாக்களையும் வெற்றிகரமாகக் கடந்துவிட்டீர்... இனி ஆறாவது தரஜாவுக்கு உமக்குப் பயிற்சியளிப்போம்... இது ஒரு முக்கிய சந்தி..! இஷ்க் எனப்படும் இறைக்காதல் வேட்கை... இதில் இரண்டு பாட்டைகள் உள்ளன... ஒன்றின் பெயர் மஹ்"புபே இலாஹி... அதாவது இறைவனால் காதலிக்கப்படல்.. மற்றது "ஆஷிக்கே இலாஹி- அதாவது இறைவனைக் காதலித்தல்.. முதலாவதில் நாம் காதலியாக இருந்து இறைவனைக் காதலனாகப் பாவித்தல்... மற்றையதில் நாம் காதலனாக இருந்து இறைவனைக் காதலியாக அடையத் தேடுதல்.. எத்தனையோ பேர் இவ்விரண்டு பாதைகளிலும் போய் பைத்தியமாக அலைந்தோர் பலர்... காதலில் வென்று இறையில் சங்கமித்தவர்கள் வெகு சிலரே... இந்த இரண்டு பாதைகளிலும் நீர் எதனைத் தேர்ந்தெடுக்கப் போகிறீர் என் இளவலே..?

இளவல் சற்று நேரம் எதுவும் பேசவில்லை.. குருவும் அமைதியாக இளவலையே பார்த்துக் கொண்டிருந்தார்.. இளவல் சொன்னார்

இன்ஷா அல்லா...! இதற்கான விடையை என்

தாயாரிடம் கேட்டு நாளை சொல்லலாமா என் சற்குருவே நாயகமே...?

"நல்லது இளவலே..சென்று வாரும்.."- விடை கொடுத்தார் சற்குரு அவர்கள். குருவிடம் விடைபெற்று கான்காவை (ஆஸ்ரமத்தை) விட்டும் வெளிவந்தார் இளவல் நிஜாமுத்தீன் அவ்லியா அவர்கள்..

இறைபண்புகளின் தரிசனத்தில் தோய்ந்திருந்த இளவலின் முகம் அருட்பிளம்பாக ஒளிர்ந்து கொண்டிருந்தது. அதிகாலைப் பனிமூட்டம் இன்னும் விலகாத டில்லி மாநகரின் சந்தைத் தெருவில் நடந்தார் இளவல். நடைபாதை அங்காடிகள் திறக்கப்படும் அவசரத்தில் இருந்தன. வியாபாரிகள் ஆங் காங்கே குழுமியிருந்தனர். காலைச்சந்தைக்கு பாரவண்டிகள் ஒன்றிரண்டாய் வந்து கொண்டிருந்தன.. சந்தையின் குறுக்குத் தெருவில் திரும்பி நடந்த இளவலின் பார்வையில் ஓர் அழுக்குப் பிச்சைக்கார வயோதிப உருவம் மீன் சந்தைக் கட்டிடத் தூணில் சாய்ந்திருந்தது தெரிந்தது... நெருங்கவே துர்வாடை வீசியது.. இளவல் அந்தப் பிச்சைக்கார வயோதிபரைக் கடந்த போது திடீரென

"அடடா... நாளைக்கு என்ன பதில் சொல்லப் போகிறீர் நிஜாமுதீனே...? என்று சத்தமிட்டது அவ்வுருவம்"

சட்டென நின்ற இளவல் சொன்னார்.

"அதை என் தாயிடம் கேட்டே நாளை சொல்வேன்..."

இதைக் கேட்ட அந்த பிச்சைக்கார வயோதிப உருவம் கில்லில்லில்லிரெண்று சத்தமாகச் சிரித்தது. பின்...

"ஊஊஊ... போ...போ.. அதற்கான பதிலை உமக்கு நாம் நாளைக்குச் சொல்வோம்.." - என்று ஏதோ முணு முணுத்து... பின் திடீரெனச் சத்தமாகப் பாடியது

..நபிகட்கரசருக்கு புறாக்களித்தாய். நபி யுனூசுக்கு மீனளித்தாய்
நபி இலியாசுக்கு தீர்தமளித்தாய்..நாடிய காதலனுக்கு என்னவளித்தாய்
சொல்லடி..சொல்லடி முப்பொழுதும் முச்சுடரில் மூழ்கியழிவேனே.

***

வீட்டினுள் நுழைந்தார் இளவல். எதிர்பார்த்திருந்த தாயார் எழுந்தார்.

"ஏதும் பருகத் தரவா மகனே...?"

"தேநீர் தாருங்கள் அம்மா.."- என்ற இளவல் நடந்தவை களைத் தாயாரிடம் விபரித்தார்.

"சரி..மகனே.. ஓய்வெடுங்கள்.. இதற்கான பதிலை இன்ஷா அல்லா.. நாளைக்குச் சொல்வோம்.!"

***

அடுத்த நாள் அதிகாலைத் தொழுகை முடித்து தாயாரிடம் சென்றார் இளவல்.

"அம்மா... நான் இன்று என் ஷெய்கு நாயகம் அவர் களிடம் என்ன பதில் சொல்ல...?"

"நல்லது மகனே.. நீ முதலில் சந்தையில் கண்ட அந்த வயோதிபரிடம் சென்று அவரது பதிலைக் கேட்டு வாயேன்... நான் பின்னர் சொல்கிறேன்..."

"நல்லது அம்மா..."

இளவல் அந்தச் சந்தைப் பிச்சைக்காரரைத் தேடிச் சென்றார். அந்த மீன்சந்தைத் துாணில் சாய்ந்து கொண்டிருந்த வரைக் காணவில்லை.. அவ்விடத்தில் சிலர் கூடி நின்று கொண்டிருந்தனர். அவர்களிடம் விசாரித்தார்.

ஓ.. ஆலிம் ஷாகிபு அவர்களே... அந்தப் பிச்சைக்காரன் அதிகாலையில் இவ்விடத்தில் இறந்து கிடந்தான்.. அடக்கம் செய்ய ஆளில்லாமல் நகர் காவலாட்களால் ஏதும் பிரச்சினை வருமென்று துப்புரவுத் தொழிலாளிகள் அந்த உடலை குப்பைக் கரத்தையில் வைத்துத் தள்ளிக் கொண்டு சென்று நகரத்துக்கு ஒதுக்கமாகவுள்ள குப்பைத் திடலில் எறிந்து விட்டு வந்துவிட்டனர்...ஆலிம் அவர்களே...! என்று கூறிய ஒருத்தன் இளவலின் கைகளை முத்தமிட்டான்...

இளவல் அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு

மெதுவாக அந்த குப்பைத்திடலை நோக்கி நடந்தார். உண்மைதான்... மலைபோல் குவிந்திருந்த குப்பைத் திடலுக்குள் பாதி புதைந்து போய்க் கிடந்தது அந்த வயோதிபரின் சடலம்.

சற்று நேரம் அந்தச் சடலத்தையே பார்த்துக் கொண்டிருந்த இளவல் சற்றுக் கடுமையான தொனியில்-கேட்டார்.

"அடடா.. நாளை எமக்குப் பதில் சொல்வோம் எனச் சொல்லி விட்டு நீர் அங்கே சென்று விட்டீரோ....?"

பிணத்தின் விழிகள் சட்டென்று திறந்தன.. இளவலையே உற்ற நோக்கின.. வாய் அசைந்தது. பின் தெளிவான முறையில் பதிலளித்தது

ஆய்...நிஜாமுதீனே... உமக்குப் பதிலளிக்க முன் என் கதையைச் சற்றுக் கேளும்... நான் உயிரோடு உங்கள் உலத்திலே இருந்த காலத்தில் ஒரு நாள் ஓர் ஆற்றை அக்கரை கடக்க வேண்டி ஒரு தோணியிலேறிக் கொண்டு மற்றொருவருமின்றி நான் ஒருவனாகவே தோணியைத் தள்ளிக் கொண்டு போகையில் வயிற்றுப்போக்குக் கண்டது வயிற்றாலும் வாயாலும் கக்கினதாலே நானே அடிக்கடி சுத்தம் செய்து கொண்டேன்... ஆனால் வயிற்றுப்போக்கு உபாதை தீவிரமாகி அவ்விடத்திலேயே மரணித்து விட்டேன்... என்னுடைய மரணத்தையிட்டு நானே வாய்விட்டலறி... தோணியிலேயே என் மையித்தைப் போட்டுக் கொண்டு நல்லடக்கம் செய்ய வேண்டி அக்கரை சேர்ந்தேன்...

"அடடா..அப்புறம்..?:

" நானே என் மையித்தைக் குளிப்பாட்டினேன். பின் கபனிட்டேன்.. அப்பால் பள்ளிக்குச் சுமந்து கொண்டு போனேன். பள்ளியில் என் மையித்தை வைத்து விட்டு நானே கபுர் தோண்டினேன். பின் தொழுவித்தேன். அதன்பின் தல்கீன் ஓதினேன். என் ஜனாசாவை நல்லடக்கம் செய்து விட்டு வீடு

திரும்பினேன். துக்கம் விசாரிக்க வந்தவர்களோடு முசாபாஹ் செய்தேன்.....

"புரிந்தது சொல்லுங்கள்..."

"ஆய்...நிஜாமுதீனே...மேலும் கேளும்... பின்னர் ஐயோ... என் வாழ்நாள் அன்றோடு முடிந்து போய் விட்டதே என்று வாய்விட்டழுதேன்..பின்னால் நானே என் புதைகுழி யிலிருந்தும் புரண்டு எழுந்தேன். படுத்திருந்த இடத்தை விட்டும் வேறாகினேன். கண்ணை விழித்தேன். சுற்றிப் பார்த்தேன். நான் இருந்தவிடத்திலேயே இருந்தவிதமாயிருக்கிறேன்... நான் தோணியில் போகவுமில்லை..வயிற்றுப் போக்கு ஏற்படவுமில்லை.. மவத்தாகவுமில்லை..விசனித்து அழவுமில்லை... அதன்பின்னரே எனக்கு சர்க்குருநாதரின் திருக்கடாட்சம் கிடைத்தது... அவரிடம் சொன்னேன்.. அறிவுக்கறிவாய் நின்று உணர்த்திய அருளிறையைக் கண்டேன்...

"ம்ம்ம்..மேலே சொல்லுங்கள்.... ஆனால் சற்று நேரத்தில் மாநகராட்சியார் வந்து இந்தக் குப்பைத் திடலுக்குத் தீ வைத்து விடுவார்கள்...தெரியும்தானே..

"இபுறாகீமை எறிந்த தீ.... மூசாவுக்கு தெரிந்த தீ... நல்ல செய்..தீ..."

"தோன்றியதைச் சொன்னேன்"

ஆய்...நிஜாமுதீனே... தோன்றியதைச் சொன்னீர்... ஹி..ஹி.. நான் தோன்றாததைச் சொல்கிறேன்.. இளவலே.. பார்த்தீரா என்நிலையை..? இதுதான் ஒரு ஆஷிக்கின் நிலை.. இறைவனைக் காதலிப்பவனின் நிலை... அவளது காதலைப் பெறத் துடிக்கின்ற காதலனின் நிலை...வேதனை... காதலியின் சம்மதம் பெற இப்படி எத்தனையோ சோதனை... இது உமக்குத் தாங்காது.... இறைவனுக்கு நீர் காதலியாக இரும்... அதுதான் உமக்குப் பாதுகாப்பானது... ஆகவே ஆஷிக்கே இலாஹியின் அலுவலகத்தில் உமது பெயரை எங்கேயும் பதிவு செய்து

விடாதீர்... மஹ்புபே இலாஹியாக இருக்கும் பாதையைத் தேர்ந்து கொள்ளும்.. இதுதான் என் பதில்... - கூறிவிட்டு சட்டென்று பிணம்(?) குப்பைக்குள் புகுந்து தன்னை முழுவது மாக மறைத்துக் கொண்டு மீண்டும் பிணமாகி விட்டது.

“தீரதம் ஏறத் தயாராகி விட்டீரோ என் காருண்யப் பொக்கிஸமே... என்று ஆழ்ந்த குரலில் கூறிவிட்டு வீடு திரும்பினார் இளவல்.”

***

“என்ன பதில் கிடைத்தது என்னருமை மகனாரே..?”

“அவர் தீரதம் ஏறிவிட்டாரம்மா.... அதற்கு முன் காதலிக்கப்படுபவனாக இருப்பதே எனக்குச் சிறந்தது என்று பதில் கிடைத்தது அம்மா...”

“மாஷா அல்லாஹ்.. அதுதான் என் பதிலும்.. சங்கைமிகு ஷெய்கிடம் போய். மஹ்புபே இலாஹியாக உன்னைப் பதிவு செய்து கொள் மகனே...”

“நல்லது அம்மா...”

***

“நல்லது இளவலே.. என்ன பதில் கொண்டு வந்துள்ளீர்?” சங்கைமிகு தவராஜர் குருநாதர் அவர்கள் இலேசான புன்னகையுடன் தம் கருணைக் கண்களால் இளவலை உற்று நோக்கினார்.

“மஹ்புபே இலாஹிதான் என் தெரிவு என் சங்கைமிகு காருண்யமே...”

“நல்லது இளவலே..! காதலியின் சம்மதம் பெறச் செல்லம் பாதை வெகு கடினமானதே... தீரதம் ஏறுதல் உமக்குப் பொருந்தாது... ஆயினும் இறை காதலில் வெற்றி பெற்றால் அதைவிடப் பேரின்பம் வேறில்லை.. எனினும் இளவலே.. நீரும் தீரதம் ஏற வேண்டாம். நீர் காதலனாகவே இரும்.. ஒளிரதம் உம்மைத் தேடி வரும். அதுதான் உமக்குப் பாதுகாப்பானது.. இறைவனுக்கே காதலனாகும் பாதையில்

நீர் நாளை முதல் பயிற்சியைத் தொடங்கலாம்... சென்று வாரும்...."

என்று விடைகொடுத்தார்கள் சங்கைக்குரிய ஞானகுருநாதர்.

இளவல் சென்ற பின் தம்மிரு விழிகள் மூடி திக்ரில் ஆழ்ந்த ஞானகுரு "ஹஸரத் "ஹாஜா குதுபுத்தீன் பக்தியார் கார்க்கி (ரளி) வொலியுள்ளாஹ்" அவர்களின் ஞான திருஷ்டியில் -குப்பைக் குவியலில் தீராக் காதலில் தீரதம் ஏறத் தயாராகிக் கொண்டிருக்கும் தனது ஞானகுருவின் ஒளி விழிகள் பளிச்சிட்டு ஒளிர்ந்தன..

ஞானம்–ஜனவரி–2015 இதழில் பிரசுரமானது.

(இக்கதை முற்றாக இஸ்லாமிய ஆத்மீக–லௌகீக நடைமுறைகளைக் கொண்டதல்ல.. பாதிக்குப் பாதி கற்பனையாகும்)

# காக்காமாரும் தேரர்களும்

....வஸ்ஸிகா விய புப்பானி
மத்தவானி பமுஞ்சதி
ஏவங் ராகஞ்ச தோஸஞ்ச
விப்ப முஞ்சேத பிக்கவோ.....

ஓ.. பிக்குகளே.. மல்லிகைச் செடி வாடிய மலர்களை உதிர்த்து விடுவதைப் போல் ஆசையையும் துவேசங்களையும் உதிர்த்து விடுங்கள்...

(தம்மபதம் 18. 377– பிக்குவக் கோ.)

***

இன்று தம்பிலாக்கள் அதாவது காக்காமார்கள் எனப்படும் முஸ்லிம்கள் கைகளில் நமது பௌத்த சிங்கள நாடு பறி போய்விட்டது.. நமது பொருளாதாரத்தைக் கையிலெடுத்துக் கொண்டார்கள்.. தம்மினத்தைப் பெருக்கி விட்டார்கள்.. நமது சிங்களப் பெண்களை மதம் மாற்றி விட்டார்கள். தனியாக ஷரிஆ சட்டங்களை

இயற்றுகின்றார்கள்.. மிருக பலி பலதாரமணம் தலாக் ஹலால் என்றெல்லாம் தம்மிஷ்டப்படி நடக்கிறார்கள்.. உடனடியாக இது நிறுத்தப்பட வேண்டும்...

- ஞானதார தேரர் அவர்கள்.

எல்லாம் வீணான குற்றச் சாட்டுக்கள்.. நாட்டின் பாதுகாப்புக்கு முஸ்லிம்கள் ஒருபோதும் அச்சுறுத்தலாக இருந்ததில்லை.. இருக்கப் போவதுமில்லை. முஸ்லிம்கள் நாட்டுப் பற்றாளர்கள்...

- ரமிஸ் ரக்கீப்.

பாருங்கள் சிங்கள மக்களே.. இந்த தம்பிலாக்கள் உலமா சபை ஆலிம் சபை சூறாசபை என்றெல்லாம் நன்கு திட்டமிட்டு அரபு வசந்தப் பணத்தில் தீவிரவாதம் வளர்க்கிறார்கள்.. மத்ரசாக்களிலும் பள்ளிவாயில்களிலும் பயங்கரவாதம் போதிக்கிறர்கள...

- அத்தே விகார ஹாமி தேரர்.

அவரது கூற்றில் உண்மையில்லை.. புத்தபெருமான் ஒரு போதும் இனக்குரோதத்தைப் போதிக்கவில்லை. பௌத்தம் அகிம்சையையே போதிக்கிறது. முஸ்லிம்களால் இந்நாட்டுக்கு ஒரு அச்சுறுத்தலும் இல்லை.. அவர்கள் நமது நண்பர்கள்.. கருணையும் மனிதநேயமும்தான் பௌத்தத்தின் பாதை.

-இனாமலுவே கருணாஹிமி தேரர்.

தம்பிலாக்கள் இரகசியமாக எமது நாட்டில் ஜிஹாத் படை உருவாக்குகின்ற னர்.ஸ்ரீலங்காவை ஜெய்லான் என மாற்றத் திட்டமிட்டுள்ளனர். சிங்கள பௌத்த மக்களின் பொருளாதாரத்தை சுரண்டுகிறார்கள்...

- ஞானதார தேரர் அவர்கள்.

ஜனாதிபதி அவர்கள் தலையிட வேண்டும்...

- ஆலிமு சபை.

இந்தக் கறுப்பு கோணி பில்லாக்கள் ஏழு கல்யாணம் முடித்து ஒவ்வொருத்தியும் பதினாலு பிள்ளைகளைப் பெறுகிறார்கள்.. ஆனால் எமது சிங்களப் பெண்களோ இரண்டொரு பிள்ளைகளுடன் நிறுத்திக் கொள்கின்றனர்.. குருநாகலில் ஒரு பௌத்த விகாரையை பள்ளிவாயிலாக மாற்றி விட்டனர். முஸ்லிம்களுக்கு இது தாய்நாடு அல்ல.. இது உண்மையான பௌத்த சிங்கள நாடு.. வியாபாரம் செய்ய வந்த தொப்பி மரக்கலகளே.. யாவரும் வெளியேறி ஓடிவிடுங்கள்... இனி இந்த தம்பிலாக்கள் எந்த ஒரு பௌத்த சிங்களவன் மீதும் கைவைக்க முடியாது..

- ஜாதிக பிக்கு பெரமுன சங்கமய.

ஜனாதிபதி அவர்கள் தலையிட வேண்டும்... நாட்டு நிலமை சீராக தொழுது வணங்கி குனூத் ஓதுங்கள்..

- ஆலிமு சபை.

பாருங்கள் பௌத்த மக்களே.. இன்று கொழும்பு கண்டி அம்பாறை மாவட்டங்களில் முஸ்லிம் சனத் தொகை கூடி விட்டது. இம்மாவட்டங்களில் காக்காமாரின் சனத்தொகை வளர்ச்சி வீதம் சிங்கள தமிழரை விட 10வீதம் அதிகரித்துச் செல்கிறது.. நாம் இதைக் கவனியாது விட்டால் எமது சந்ததி வாழ ஒரு அங்குல இடமும் இந்த பௌத்த நிலத்தில் நமக்குக் கிடைக்கப் போவதில்ரைல...

- அத்தே விகார ஹாமி தேரர்.

பள்ளிவாசல்களைத் தாக்குகிறார்கள்.. மேலிடத்தில் முறையிட்டும் தீர்வு கிட்டவில்லை.. 3நாட்கள் இடம்பெற்ற கலவரத்தில் கோடிக்கணக்கான சொத்திழப்களும் 4 பெறுமதி

மிக்க உயிர்களும் பறிபோயின.. எனினும் எதற்கும் நீதி கிடைக்க வில்லை.. நீதிவானாக இருப்பதில் வெட்கப்படு கின்றேன்...

– ரமிஸ் ரக்கீப்.

பாமர முஸ்லிம்களுடன் எமக்குப் பிரச்சினை இல்லை. முஸ்லிம் மத அடிப்படைவாதிகளே எமது இலக்கு. இவர்களே மதப் போதனை என்ற போர்வையில் போருக்குப் பயிற்சியளிக் கின்றனர். ஜமாஅத் என்ற பேரால் வெளிநாடுகளுக்கு அழைத்துப் போகிறார்கள்.. அங்கு ஆயுதப் பயிற்சி நடக்கிறது. திரும்பி வரும் போது போதைப் பொருள் கொண்டு வருகிறார் கள். இதில் நமது சிங்கள அரசியல்வாதிகளும் உதவுகிறார்கள்..

– ஞானதூர தேரர் அவர்கள்.

ஜனாதிபதி அவர்கள் தலையிட வேண்டும்...

– ஆலிமு சபை.

இந்நாட்டில் முஸ்லிம் மக்களுக்கு எவ்வித பிரச்சினையு மில்லை.. சிறுசிறு தகராறுகளை பெரிதுபடுத்தத் தேவை யில்லை.. முஸ்லிம் நட்புறவுச் சங்கத்தின் தலைவரே நம் ஜனாதிபதிதான்..

– சிரேஸ்ட அமைச்சர் அப்துல் மாதர் ஹாஜியார்.

பிக்குகள் கண்ணியமானவர்கள் ஒரு சில பிக்குகளே தீவிரமானவர்கள்.. அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்படல் வேண்டும்..

– அமைச்சர். றிபாத் ஸரியுதீன்.

தலைவரைப் போல இனத் துவேச உரைகளை விட்டுக் கொண்டிருக்காமல் உள்ளிருந்து அழுத்தம் கொடுப்பதிலும் உட்சென்று நடவடிக்கை எடுப்பதிலும் எமது கட்சித் தலைமை செயற்பட்டு வருகிறது..

– தேசியத் தவிசாளர் நிதாவுல்லாஹ் அவர்கள்

விரைவில் இங்கு விஜயம் செய்யவுள்ள பர்மிய பிக்கு விராது ஹிமியின் இயக்கத்துடன் இணைந்து செயற்படவுள்ளோம். அவரது 568 இயக்கம் புனிதமானது..மத அடீப் படையை மதமாற்றத்தை எதிர்ப்பது. தர்ஹாடவுன் அளுத்கம அசம்பாவிதங்களுக்கு நாம் பொறுப்பல்ல..

– அத்தே மைத்ரீ தேரர்.

ஜனாதிபதி அவர்கள் தலையிட வேண்டும்...

– ஆலிமு சபை.

காருண்ய விகாரைக்கு முழுவதும் டைல்ஸ் ஒட்டிக் கொடுத்து சுற்று மதிலும் கட்டிக் கொடுத்த என் வீட்டை தாக்கி கொள்ளையடித்து விட்டனர். அந்த விகாரைக்கு பொறுப்பான மதகுருவே தாக்குதலுக்கு சில வெளியுர் ஆசாமிகளுடன் முன்னின்றார்.

– பிரபல வர்த்தகர் ரிஸ்வான் மக்தூம் ஹாஜியார்.
அளுத்கம வர்த்தகர் சங்கம்

விடயம் சர்வதேசமயப்படுத்தப்பட்டுள்ளது. தூதுவர் ராஜதந்திரிகள் மட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.. அரசிலிருந்து வெளியேறுவதில் பலனில்லை..

– ரமிஸ் ரக்கீப்.

பர்மிய முஸ்லிம் மக்களின் படுகொலைக்குக் காரணமான பிக்கு விராதுவை நாட்டுக்குள் வர அனுமதிக்க கூடாது...

– சிறிலங்கா முஸ்லிம் சங்கம்.

ஒரு பௌத்த தேரரை ஒரு பௌத்த நாட்டுக்குள் வரக் கூடாது என உத்தரவிடுவதற்கு யார் இந்தச் சோனகர்கள்..? இது என்ன சவ்தி அரபியாவா.. ஈரானா..?

– ஜாதிக பிக்கு பெரமுன சங்கமய.

ஜனாதிபதி அவர்கள் தலையிட வேண்டும்... குனூத் ஓத வேண்டாம்...

– ஆலிமு சபை.

மத அடிப்படை வாதம் ஒழிக்கப்பட வேண்டும்.. கிழக்காசியாவில் பௌத்த மா கண்டம் உருவாக வேண்டும்.. பௌத்த மதம் ஒன்றே பிரகடனப்படுத்தப்படல் வேண்டும்

– பர்மிய பிக்கு விராது தேரர்.

இந்த மாநாட்டிலே ஏழாயிரம் பிக்குகள் கூடியிருக்கின்றர். இங்கு கூறப்படும் போதனைகளைக் கேட்டுச் சென்று உங்கள் ஊர் விகாரைகளில் பரப்புரை செய்யுங்கள். பத்து லட்சம் சுத்தமான பௌத்த வாக்குகளே எமது இலக்கு.. அதன் மூலம் பௌத்த ஜனாதிபதியை நாமே தீர்மானிப்போம்.. தேசியச்சிங்களவர். சிங்களத் தமிழர்கள். சிங்களக் கிறிஸ்தவர்கள் சிங்கள முஸ்லிம்கள் என்றே அனைவரும் பதியப்படல் வேண்டும். பௌத்த சிங்கள சட்டம் மட்டுமே அமுலாக்கப் படல் வேண்டும்

– ஞானதார தேரர் அவர்கள்.

ஜனாதிபதி அவர்கள் தலையிட வேண்டும்...

– ஆலிமு சபை.

***

இதெல்லாம் ஒரு சிறுகதையா...?-- என்று முகத்தில் வீசினார் பத்திரிகை ஆசிரியர்.

இதெல்லாம் ஒரு சிறுகதையல்ல.. பெரும்பெரும் கதைகள்..

என்று சொல்லி விட்டு நடையைக் கட்டினேன்.

நன்றி- தமிழ்விழி--இணையம்- மார்ச்-2014-சருகு-2017

யாவும் கற்பனையல்ல.. -செய்தி ஊடகங்களே..

## முமமான்.

### (ரகுமான். பெருமான். முசல்மான்.)

ஒரே ஒரு காட்டில் ஒரேயொரு ராஜா. அது சிங்கராஜா. காடு முழுவதையும் சிங்கம் தன் கட்டுப்பாட்டில வைத்திருந்தது. தன் ஏக இராச்சியத்தில், தானே எல்லா வற்றையும் அனுபவித்து வந்தது. தட்டிக் கேட்பார் யார்..? சிங்கம், பிடரி மயிர்கள் சிலிர்த்தெழ உறுதிமிக்க தன்னிரு முன்னங் கால்களிலும், வாளை ஏந்தி முன்னுயர்த்தி கொடூர விழிகளை உருட்டி, கர்ச்சிக்கும் போது காடே கிடுகிடுத்தது. விலங்கினங்கள் பயத்தில் திடுக்கிட்டு தினம்தினம் செத்தன. "ஒரு உறையில் ஒரே வாள். ஒரு காட்டில் ஒரே ராஜா" என்றும் திட்டமாகக் கர்ச்சித்தது.

சிங்கத்தின் இந்த ஆதிக்க அட்டூழியத் தில், கதிகலங்கிப் போன ஏனைய விலங் கினங்கள் கூடி யோசித்தன. வரவர இந்தச் சிங்கத்தின் ஆக்கிரமிப்பையும், அட்டூழி யத்தையும் தாங்க முடியவில்லை. நாம் வேட்டையாடும் சிறுநிலப் பரப்பிலும் அது

தன் ஆதிக்கத்தை விரிவுபடுத்துகிறது. நாம் இப்படியே பொறுத்துக் கொண்டிருந்தால் விரைவில், நமது இருப்பே கேள்விக்குரியதாகிவிடும்.. நமக்கு ஒரு துண்டுக் காடாவது கிடைக்கப் போவதில்லை. எப்படியும், நமது சிறுகாட்டுப் பரப்பினுள் சிங்கத்தை வரவிடக் கூடாது. என்று முடிவு செய்தன. இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முடிவை சிங்கத்திடம் எடுத்துச் செ(ா)ல்ல ஒரு தூதுக்குழுவையும் தெரிவு செய்தன.

இக்குழுவை சிங்கம் சந்திக்கவே மறுத்துவிட்டது. இவை சிங்கத்தின் குகைவாசலில், சத்தியாக்கிரகமும், உண்ணா விரதமுமாக, இருந்து பார்த்தன. ஆனால், சிங்கம் மசிய வில்லை. மாறாக, தன் குட்டிகளை ஏவி, உண்ணாவிரதிகளை கடித்துக் குதறி அனுப்பியது. "சிங்கத்தோடு பேச்சுவார்த்தை ஏதும் நடத்தி இனி ஒரு பலனுமில்லை. இனி நம்மைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" என்று சொல்லி விட்டு, கிழட்டுப்பசு உயிரை விட்டது.

சிங்கத்துக்குத் தகுந்த ஒரு பாடம் படிப்பிக்கவே வேண்டும் என்று இரகசியமாகவும், திட்டவட்டமாகவும் சில வரிப்புலிகள் தீர்மானித்தன. புரட்சி நீறு பூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருந்தது. இரண்டாவது பலம்பான்மை நாம் தான். மற்ற விலங்கினங்களை விட நமக்குத்தான், போராடக் கூடிய வல்லமையும், வேட்டைப் பற்களும், கூரிய நகங்களும், குரூர நெஞ்சும், போராட்டத்தளமும், உண்டு. சிங்கத்துக்கு நிகராக வேட்டையாடவும் முடியும். எதிர்க்கவும் முடியும் என்று முடிவு செய்தன.

எனவே முதலில் புலிகள் சிங்கத்தின் அட்டகாசத்தை பக்கத்துப் பெருங்காட்டை ஆளும் காண்டாவிடம் முறை யிட்டன... காண்டா அதைக் கண்டு கொள்ளவேயில்லை.. "அது உங்கள் உள்காட்டு விசயம் நான் தலையிடமாட்டேன்" என்று சொல்லி விட்டது. சிங்கத்துக்கு நல்லபிள்ளையாக

நடந்து கொண்டு ஆனால் புலிகளுக்கு இரகசியமாக எலும்புத் துண்டுகளை தும்பிகளிடம் கொடுத்தனுப்பி வானத்திலிருந்து போட்டது. அத்துடன் இரகசியமாக சில புரட்சிப் புலிகளை தன்னிடத்துக்கு வரவழைத்து போர்ப்பயிற்சி அளித்தது.

"இது ஒரு காட்டின் கானக எல்லையை மீறிய செயல்..." என்று வெகுண்டெழுந்த சிங்கம் காண்டாவின் பருத்த உடல் வலிமை கண்டு கொஞ்சம் பயந்து அடக்கியே கர்ஜித்தது..

தொடர்ந்த சில நாட்களில் நூற்றுக்கும் மேற்பட்ட சிங்கக்குட்டிகள், எல்லைக் காட்டருகில் கொல்லப்பட்டுக் கிடந்தன. இதுகண்டு வெகுண்டெழுந்த சிங்கம், வெறி கொண்டு, எல்லை கடந்து உட்புகுந்து கண்ணில் கண்ட விலங்குகளையெல்லாம் வேட்டையாடியது. காடு போர்க்கள மானது.

அதேசமயம், காட்டில் தாமுண்டு தம் வேலையுண்டு என்று வாழ்ந்திருந்த சில அப்பாவி முசல்மான்களும் கூட பயங்கரமான முறையில் கொல்லப்பட்டு எல்லைப்புறத்தில் விசிறப்பட்டுக் கிடந்தன. "இது சிங்கத்தின் உச்சக்கட்ட வெறித் தனம்." என்று வரிப்புலிகள் அறிவிக்க "இல்லை இது வரிப் புலியின் குரூரக் கொலை..." என்று சிங்கமும் குற்றம் சாட்டியது.

இடையில் அகப்பட்டுக் கொண்ட முசல்மான்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவை வேட்டைப்பற் களும், கூரிய நகங்களுமற்று இருந்ததால், வேட்டையாடப் படும் விலங்குகளாகவே இருந்து வந்தன. சிங்கத்தின் கர்ச்சிப்பி லும், புலியின் உறுமலிலும், தினம் தினம் தம்மை இழந்து வந்தன. தாம் அநாவசியமாக இந்த ஆதிக்கச் சண்டை யில் மாட்டுப் பட்டதென்ன.. ஏன்.. என்றெல்லாம் யோசிக்கத் திராணியற்று பயத்துடன் அங்குமிங்கும், அகதிமான்களாய் அலைந்து திரியத் தொடங்கின. போராட்ட விலங்குகளின் இனவெறிக் கூச்சலில், முசல்மான்களின் முனகல் எவர் காதிலும்

விழவில்லை.

விலங்கினங்களின் அநியாய அழிவைத் தடுக்கவும், தான் இந்தப் போரில், ஒரு அரசியல் இலாபம் பெறவும், வலிமை பெற்றுவரும் வரிப் புலிகளை ஒரு மட்டம் தட்டவும் காண்டா திடீரெனத் தீர்மானித்தது. இதில் இனி நேரடியாக களமிறங்கத் தீர்மானித்தது. "போரை நிறுத்துங்கள்.!" என்று பெருங்குரலில் கத்தியது. "இல்லாவிட்டால் எனது கரும் பூனைப்படையை அனுப்புவேன்." என்று இரு தரப்பாரையும் அச்சுறுத்தியது.

அதன் அனுசரணையின் பேரில், சிங்கம், புலியுடன் பேச்சுவார்த்தை நடத்த இணங்கியது. "அதிகாரப் பகிர்வுக்கு முன்னர் அமைதியை ஏற்படுத்துங்கள்" என்று சிங்கம், காண்டாவிடம் கூறியது. "இரண்டும் ஒரே சமயத்தில் நடக்கும்" என்று உறுதியளித்த காண்டா உபகண்டம் முழுக்க நிறுத்தி வைத்திருந்த வலிமைமிக்க, தன் கரும்பூனைப் படைகளைக் களத்தில் இறக்கியது. கரும்பூனைப்படை களுக்கு, அமைதிகாக்கச் சொல்லி ஆணையிட்டது.

ஆனால் எதிர்பார்த்தபடி ஏதும் நடக்கவில்லை. அமைதி காக்கவந்த கரும்பூனைகளால், அமைதிகாக்க முடிய வில்லை. விரைவிலேயே, புலிகளுக்கும் கரும்பூனைப்படை களுக்கும் போர் தொடங்கிவிட்டது. காட்டுக்குள் உக்கிர யுத்தம் வெடிக்க கொஞ்சம் நிம்மதியாயிருந்த முசல்மான் களுக்கு மீண்டும் கிலி பிடித்துக் கொண்டது. இரண்டுக்கும் நடுவில் அகப்பட்டு முசல்மான்கள் மீண்டும் கொல்லப் பட்டன.. சிங்கமும் முசல்மான்களைத் தந்திரமாக கைவிட்டு விட்டது..

அவை இருக்கவும் புலம்பெயரவும் இருவழியும் ஆபத்தாகி இக்காட்டுக்குள்ளேயே கிடந்து வாழ்ந்து யுத்தத்தில் அழிய ஆரம்பித்தன. இதனையே நிலையான வாழ்வாகக் கொண்டன. சிங்கத்தின் காட்டுப் பிரதேசத்தில் வாழ்ந்த

முசல்மான்களைச் சிங்கம் சந்தேகக் கண் கொண்டு பார்த்தது. “நீங்கள் மான் தோல் போர்த்திய புலிகளா..” என்று சிலசமயம் குதறியும் பார்த்தது. புலிக்கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழ்ந்த முசல்மான்களை, நீங்கள் மான் தோல் போர்த்திய சிங்கங்கள் என்று புலி சந்தேகித்து சில முசல்மான்களை கொன்று தோலுரித்துப் பார்த்தது.

அது போதாதென்று கரும்பூனைப்படைகளும், அதனுடன் ஒட்டிக் கொண்டிருந்த சிலகழுதைப் புலிகளும் கூட தம் பாட்டுக்கு முசல்மான்களை காரணகாரியம் ஏது மின்றியே வேட்டையாடத் தொடங்கின.. முசல்மான்கள் முப்பக்க நெருக்குவாரத்தில் சிக்குப்பட்டுச் சீரழிந்தன. நிரந்தர மாக மரணபீதி ஆரம்பித்து விட்டது. காட்டில், சும்மா மேய்ந்து கொண்டிருந்த நம்மை யார் கொல்கிறார்கள்.. ஏன் கொல்கிறார்கள்... உண்மையில், நாம் காடு கேட்கவுமில்லை.. காட்டைப் பிரித்துக் கேட்பவர்களுக்கு இடைஞ்சலாய் இருந்ததுமில்லை... ஆயினும் நமக்கு இந்தக் கதி ஏனோ..

இந்நிர்க்கதி நிலையை யோசித்த முசல்மான்கள் தனிவழி செல்லத் தீர்மானித்து கஸ்தூரிமானின் தலைமையில் ஒரு மரத்தின் கீழ் ஒன்று கூடின. காட்டுக்கு உண்மையான ராஜா யார்..? சிங்கமா..? புலியா..? காண்டாவா...?.. முத்தரப் பையும் சந்தித்துத் தமது அவல நிலையை எடுத்துச் சொல்லத் தீர்மானித்தன.. முத்தரப்பும் முசல்மான்களின் கதையைக் கேட்டு ஆவண செய்கிறோம் என்று கூறி வழியனுப்பி விட்டு கோரிக்கையை வரலாற்றுக் குப்பைத்தொட்டிக்குள் எறிந்தன. முசல்மான்களுக்கு கிலி பிடித்தாட்டியது.

திடீரென ஒரு நாள், நூற்றுக் கணக்கான முசல்மான் களின் உயிரற்ற உடல்கள் குதறப்பட்டுக் காடெங்கும் சிதறிக் கிடந்தன. மறுபடியும், இது புலிகளின் இரத்த வெறி என்று சிங்கங்களும், இது சிங்கத்தின் பிரித்தாளும் தந்திரம் அல்லது கரும்பூனைப் படையும் அதனுடன் சேர்ந்து விளையாடும்

குள்ளநரிக் கூட்டமும் மற்றும் கழுதைப் புலிகளும் பார்க்கின்ற வேலை என்று வரிப்புலிகளும் மாறிமாறிப் பழி சொல்லி யுத்த மூர்க்கமுற்றன.

இன்னொரு நாள், வரிப்புலிகள் மூன்றே நிமிசத்தில் வாழிடங்களை விட்டும் முசல்மான்களைப் பலவந்தமாக வெளியேற்றின. இப்போது, வரிப்புலிக்கட்டுப்பாட்டுப் பகுதி தனிஇனநிலமாக இருந்தது.

மற்றுமொரு நாள் முசல்மான்களின் தலைமையான கஸ்தூரிமான் நடுக் கானகத்தில் வைத்து வெகு சூட்சுமமான முறையில் கொல்லப்பட்டுவிட்டது.. தலைமையையும் இழந்த முசல்மான்களின் நிலை பற்றிக் கவலைப்பட யாரும் இருக்கவில்லை.

இந்த வேட்டைப் பிராணிகளின் மத்தியில், எமது தனித்துவத் தலைமையும் இழந்து கூரிய நகம் மற்றும் வேட்டைப் பற்கள் முதலான ஆயுதங்களும் இன்றி சாதுவாக இக்காட்டிலிருப்பது எவ்வளவு ஆபத்தானது.. தாமும் வேட்டைப்பற்களும், கூரிய நகங்களும் கொண்ட ஆயுதப் பிராணிகளாக மாற முடிவு செய்தன. பலம் கொண்டு பாய்ந்து கர்ச்சித்து, அல்லது பதுங்கி உறுமி, சிங்கத்தையும், புலிகளை யும் கரும்பூனைகளையும் தாக்குதல் வேண்டும். ஆயின், சாதுவான முசல்மான்கள் எப்படி சிங்கமாக மாற முடியும்..? அல்லது புலியாக மாற முடியும்..? இயல்பை மாற்றுதல் சாத்திமா..? உருவைத்தான் ஆக்குதல் சாத்தியமா..? அதுவும் இச்சிறுகாட்டினுள் இருந்து கொண்டு..?

எவ்வழிகளும் சாத்தியமாகாத நிலையில், இறுதியில் முசல்மான்கள் தம் பிரச்சினையை மான்களுக்குப் பிணை நின்ற கருணையே உருவான நம் பெருமான் ஊடாக தம்மைப் படைத்த வல்லபெரிய ரகுமானிடம் கொண்டு செல்லத் தீர்மானித்தன. யாகங்கள் பல செய்து அங்கிருந்த பெரும் பரிந் துரைக்கதிகாரியான பெருமானைச் சரணடைந்து புகழ்ந்

தேற்றி வல்லபெரிய ரகுமான் சந்நிதியை அடைந்தன. வல்ல பெரிய ரகுமானிடம் தம் பிரச்சினையச் சமர்ப்பித்தன. முசல் மான்களைப் படைத்த வல்லபெரிய ரகுமான் சொன்னது"

"ஓ.. முசல்மான்களே.. வேட்டைப் பிராணிகளாக நீங்கள் படைக்கப்படவுமில்லை. நீங்கள் சிங்கங்களாக அல்லது புலிகளாக, அல்லது வேறு எதுவுமாக மாற வேண்டிய அவசியமேயில்லை. முதலில் நீங்கள் உண்மையான முசல்மான் களாக நடந்து கொள்ளுங்கள். உங்கள் தலையில் என்ன இருக்கிறது..?"

திகைத்துப்போன முசல்மான்கள் அப்போதுதான் தம் தலைக்குமேலிருந்த தொப்பிக்குள் பார்த்தன. சிங்கத்தையும், புலிகளையும் வெருண்டோடச் செய்யும் மனித முகமும் வல்லூறை விடவும் விசாலிப்பான இறக்கைகளும், குதிரையின் வலிமையான உடலும் ஒருங்கே, கொண்ட பிராணியாக தம்மைக் கண்டன. அவை தம் வாயைத் திறந்ததும் "புராக்... புராக்..." கென்ற சத்தத்தில் ஈருலகங்களும் அதிர்ந்தன.

வல்லபெரிய ரகுமான் மீண்டும் சொன்னது "ஓ.. முசல் மான்களே..பார்த்தீர்களா.. இந்த புராக் உங்களுக்குள்ளேயே இருக்கிறது. நீங்கள் யாருக்கும் பயப்பட வேண்டிய தேவை யில்லை.. நீங்கள் முதலில் உண்மையான முசல்மான்களாக வாழ்ந்தால் வலிமையான புராக்காக மாற முடியும்.. இப்போது, நீங்கள் போகலாம்.."

இனியென்ன.. முசல்மான்கள் திரும்பி வந்தன. வலிமைமிக்க அந்த "புராக்"கைப் பெறுவது நம் நடத்தையில் தான் இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டன. அவை தம் தொப்பிகளை ஒழுங்காக அணியத் தொடங்கின..

நன்றி– தமிழ்விழி––இணையம்– ஏப்ரல் –2013

# கபடப்பறவைகள்

நான் காலஞ்சென்று 40வது நாள் என் வீட்டுக்கு வந்திருந்தேன். மனைவி பிள்ளைகள் பேரப் பேர்த்திகள் உறவினரை காணும் அடங்கா ஆவலில் என்னை அடக்கி யிருந்த மண்ணறையைப் பிளந்து வெளியே வந்துவிட்டேன். என் வீட்டில் நானில்லாத வெற்றிடம் தந்த சங்கதிகளைச் சொல்லும் முன்...

என்னைப் பற்றிச் சின்னதாய் ஒரு அறிமுகம். நான்தான் கவிஞர். கலாபூஷணம் கமர்தீன். ஈழத்தின் முற்போக்கு மூத்த முஸ்லிம் கவிஞர். சாகித்திய விருது பெற்ற கபடப் பறவைகள் கவிதைத் தொகுதியின் சிற்பி. உபரி விருது பெற்ற பனியில் தீப் பொறி கவிதை நூலின் சிருஷ்டிகர்த்தா.. 20ம் நூற்றாண்டில் முஸ்லிம் கவிஞரின் செல் நெறிகள் ஆய்வு நூலின் சொந்தக்காரன்.. இன்னும் ஈழத்தின் சகல இலக்கிய சஞ்சிகை களிலும் தேசியப் பத்திரிகையிலும் எண்ணி லடங்காத கட்டுரைகள்.. பத்தி எழுத்துக்

கள்.. விமர்சனங்கள்.. கவிதைகள்...என்று எழுதிக் குவித்தவை கள் எராளம்... கிடைத்த விருதுகளும் பரிசில்களும் தாராளம்...

ஆயின் என் செய்ய..? 80வது வயதில் என் இலக்கிய அனுபவங்களை தொகுத்து வீரகேசரியில் கமர்தீனின் கண்ணாடிகள். என்று அசத்தல் தலைப்பில் தொடராக எழுதிவந்த போது ஒரு நள்ளிரவில் 12ம் அத்தியாயம் எழுதிக் கொண்டிருந்த போது சீனி பிரசர் ஆஸ்த்மா எல்லாம் எகிறிப் போய் தலை கிறுகிறுத்து அவயவமெல்லாம் விறைத்துப் போய் பேனாவைக் கீழே வைக்கவும் அவகாசம் தராது "மலக்குல் மௌத்து" வந்து உயிரைப் பறித்துவிட்டார். எழுதிய மேசையில் கவிழ்ந்தவாறே மௌத்தாகி விட்டேன்..

அதிகாலையில்தான் நான் இறந்ததை அறிந்து.. பிள்ளைகள் பேரர்கள் மருமக்கள்..உறவினர் கூடி ஒரு கொஞ்சமும் கலங்காமல் அழாமல் உள்ளூர மகா நிம்மதியுடன் சோகமாக முகத்தைக் காட்டிக் கொண்டு பள்ளிவாசலில் மரண அறிவித்தல் கொடுத்து காலை 9.00 மணிக்கு முன்னரே விரை வாக எடுத்துச் சென்று கடற்கரைப்பள்ளி மையவாடியில் அடக்கிவிட்டு மீண்டனர்... புதை குழிக்குள் 40 நாட்களும் நடந்தவைகளைச் சொல்ல உத்தரவில்லை.

40 நாளைக்கப்புறம் ஒரு சின்ன இடைவேளை கிடைத்ததும் என் உடல் இல்லா வீட்டுப் பக்கம் ஒரு ரவுண்ட் பார்த்திடலாம் என்று வந்திருந்தேன்..

***

மரண வீடுதான்... ஆனால் வீடு நல்ல கலகலப்பாகக் காணப்பட்டது.. 40ம் நாள் கிரியைகள் முடிந்து வயிறுமுட்ட கோழி புரியாணியும் கோழிமுட்டையும் கோழியிறைச்சி ரோஸ்ட்டும் பத்தாததற்கு கடைசியில் கோழிசூப்பும் சூப்பி விட்டு பெரும்பாலான கோழி உறவினர்கள் கலைந்து விட்டனர்.. சில கோழிகள் மட்டும் ராச்சாப்பாட்டுக்கு மறுபடி இடியப்பமும் புளியும் திங்கக் காத்திருந்தனர்..

பந்தலின் ஓரத்தில் அடடா... என் இலக்கிய நண்பர் களான மூன்று எழுத்தாளர்கள் உட்கார்ந்திருந்தனர்.. ஆ.. என்னே..அன்பு.. இலக்கியத் தோழமை என்றால் இப்படி யல்லவா இருக்க வேண்டும்... வெகு ஆவலுடன் பறந்து சென்று மூவரையும் என் அருபக் கைகளால் தடவி பக்கத் தமர்ந்து கொண்டேன்... இலக்கிய உரையாடல்களை கேட்டின்புற விழைந்தேன்.

சாந்தூர்சையிது என்ற என் உயிர் நண்பர் சொல்லிக் கொண்டிருந்தார்...

“இதை வெளியில் சொல்ல வேண்டாம்.... ஆளும் மவ்த்தாகி விட்டாரே... சரியில்லைத்தானே... மனசுக்க வச்சுக் கோங்க... கபடப்பறவைகள் என்ற இவர்ர கதையைப் புகழாதவரே கிடையாதுல்லோ...?... இத்தனைக்கும் நான் திருத்தக் கொடுத்த என் சொந்தக் கதையப்பா அது... இந்தா... அந்தா என்று நாட்களை இழுத்தடித்துக் கொண்டிருந் தார்... மூண்டு வருசத்துக்குப் பிறகு நானும் மறந்து விட்டேன்... திடீரென ஒருநாள் இவருக்கு சாகித்திய விருது கிடைத்தது என்று இந்தக் கதையை துாரசேகரியில போட்டி ருந்தாங்க... நான் பதபதச்சிப் போய் ஓடிவந்து இவருட்ட கேட்டதக்கு... என்ன உம்மட கதையா...பைத்தியமா... என்ட பழைய ஒரு பைலுக்க கெடந்தது அது... இப்ப இத வெளியில சொன்னி யெண்டா... ஒருத்தரும் நம்ப மாட் டாங்க.. கப்சிப்பெண்டு வாய மூடு... எண்டு சொல்லிட் டாரு... நான் என்ன செய்ய...?

“என்னது...? நான் திகைத்து விறைத்துப் போய் விட்டேன்.. என்ன பெரிய பொய் இது... நான் இறந்து விட்ட தைரியத்தில் என்னமாய் அவிழ்க்கிறான்.. இந்த கழிசடை... இத்தனைக்கும் என் எத்தனையோ கவிதைகளை திருடிக் கொண்டு போய் பிரசுரித்த பின் ஓடோடி வந்து என் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டு அழுத நாய்

திடீரென பக்கத்திலிருந்த ஊனாபானா சொல்கிறான்...

"அடடா... அதுவும் அப்படியா...?... நானும் ஒரு வெசயம் சொல்லட்டா.... இவரு எழுதிப் பேமசான கரைவாகு வன்னியன் காவியம் இருக்கே... அது உங்கள்ட்ட என்னத்த மறைக்கிறது... அது அவருக்கு நான் சொன்ன கதைதான்... மனுசன் ஊம்..ஊம்.. என்று என்க்கிட்ட கதையைக் கேட்டுட்டு சந்தடி சாக்கில்லாம காவியமா ஆக்கிட்டாரு.. பெரிய எழுத்தாளருல்லோ.. நாம கதைச்சி எடுபடவா போகிறது .. எண்டு நானும் விட்டுட்டன்..

ஐயோ. அடப்பாவி.. என் நெஞ்சமெல்லாம் பற்றி எரிந்தது... என்ன பெரிய பொய்கள்... ஒரு மனிதன் செத்த பின்னர் இத்தனை கபடமா.... அடேய்... நீங்க சாகுறதே இல்லையாடா.... என்க்கிட்ட கதை காட்டித் திருத்தி என் சிபார்சுல பேப்பருல போட்ட நாய் கதைக்கிற கதையப் பாரு... மத்தவனும் ஏதோ சொல்ல நெளிந்து கொண்டிருந்தான்... இவன் கலாபூஷணம் மருவத்துார் மாணிக்கம்.

" என்ன மருவத்தூர் மாணிக்கம்.....இதையெல்லாம்.. அங்க ஞ்ச ஏடாகூடமா எழுதிவிடாதப்பு... நீதான் நத்தை என்ட பேருல எழுதுற ஆளு எண்டு எனக்குத் தெரியும்... அத்சரி...என்னயோ சொல்ல வந்தாயே என்னது சொல்லு...

நான் என்னத்த சொல்ற... உங்கட கதையள்ள எனக்கி நம்பிக்க இல்லாட்டாலும்.. நான் ஒண்டு சொல்லட்டே... பனியில் தீப்பொறி...தெரியும்தானே... செத்தவர்ர கவிதைத் தொகுதி...அத உபரி விருதுக்கு பரிந்துரை செய்தது இந்த மருவத்தூர் மாணிக்கம்தான்...

"இதெல்லாம் வெளியில தெரியாத வெட்கக் கேடுகள்... இப்படி ஒரு தலைப்பில...எழுதி உட்டாச்சரி....

குகிக்க்கிககீய்ய்ய...

என்று மூவரும் சத்தமாக இலக்கியச் சிரிப்பு சிரித்து.. செத்துப் போனாலும் என் மீது தமக்கிருக்கும் வஞ்சினத்தை தீர்த்துக் கொள்ள.. நான் அடங்காச் சினத்துடன் மூவருக்கும்

ஓங்கி அறைந்தேன்... என் அருபக் கை பட்டு காற்றுத்தான் சுழன்றடித்தது....

"ஹா...நல்ல காற்று....ஆ..ஆ..;

சும்மா சொல்லப்படாது... கமர்தீன் வீட்டுக் காற்றும் கதை எழுதும்.....

க்கிகிக்கிக்கீய்.....

எனக்குள் சீறிய வெஞ்சினத்துடன் இந்த நயவஞ்சக நாய்களை விட்டும் வெகுண்டெழுந்தேன்... கோபத்துடன் வீட்டினுள் நுழைந்தேன்.. என் விதவை மனைவியைக் காண ஆவலுற்றேன்.. பாவம் அவள் மட்டும் வெண்ணிறப் புடவையுடன் சோகம் தாளாது அழுது கொண்டிருப்பாள்... என்று நினைத்து அடங்கா ஆவலில் அவள் இத்தாஹ் இருந்த அறைக்குள் நுழைந்தேன்.

ஆனால் அவளோ வெண்ணிற ஆடை ஜெயலலிதா போல வெள்ளையில் நல்ல சரிகையோடிய சேலையணிந்து நரைமுடியை மூடி முக்காடிட்டபடி கோழித்- தீன் வகையறாக் களை ஒரு கை பார்த்துக் கொண்டிருந்தாள்.. அறைக்குள் எனது இரண்டு மகள்மாரும் அவர்களது கணவர்களும் பேரப் பிள்ளைகளும் கலகலத்துக் கொண்டிருந்தனர்.

அறைக்குள்ளிருந்த என் அலுமாரிகள் இரண்டும் குடையப்பட்டுக் கொண்டிருந்தன.. ஒன்றின் மேல்தட்டைப் பிரித்து மேய்ந்துகொண்டிருந்த என் மூத்த மருமகன்

"ஞ்ச..ஒரு காசும் ல்ல மண்ணாங்கட்டியும் ல்ல..." என்றான்..

அவனது மனைவியான என் மூத்த மகள் அழகாக அகரவரிசையாக நான் அடுக்கியிருந்த அருமையான இலக்கிய நூல்களை அள்ளியிறைத்து வெளியில் கொட்டி ஆராய்ந்த படியே...

"ஞ்சயும் ஒண்டையும் காணல்ல.. எக்கோவ்.. ம்மா... மௌத்தான வாப்பா காச எங்ககா வெச்சிரிந்தாரு...?" என்று

கேட்டுக் கொண்டே மென்மேலும் குடைந்தாள்..

கோழிக்காலைக் கடித்தபடியிருந்த என் இல்லக் கிழத்தி..

“நல்லாத் தேடிப் பாரு... ஒங்கு வாப்பா ந்த ரெண்டு அலுமாரியையும் காட்டி என்ட பொக்கிஷசமெல்லாம் இதுக்குள்ள தான் இரிக்கி யெண்டு அந்தாள் இடைக்கிட சொல்லிட்டிருந் தாரு...” என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தாள்..

மற்ற அலுமாரிக்குள் ஒழுங்குற அடுக்கப்பட்டிருந்த எனக்குக் கிடைத்த விருதுகள் கிண்ணங்கள் பேழைகளை கலகலவென உருட்டிப் புரட்டி ஒரு கோணிப்பையில் வாரிப் போட்டுக் கொண்டிருந்த என் இரண்டாவது மகள்..

இதையெல்லாம் வித்தா வாப்பாட 40ஆம் கத்தச் செலவை சமாளிக்கலாமா..? என்று சந்தேகம் வெளியிட அவளது புருஷன்

“ஓஓஓ.ம்... நாடான் கடையில குடுத்தா 40 றூவாவும் தரமாட்டான்...இதானா ஒங்கு வாப்பாட பொக்கிசம்..? என்று குத்திக் குடைந்து பேசியபடியே அல்மாரியின் அடித்தட்டில் அடுக்கியிருந்த முக்கியமான தமிழகத்து-ஈழத்து எழுத் தாளர்கள் எனக்கெழுதியிருந்த இலக்கிய இரசம் சொட்டும் கடிதங்களை ஒவ்வொன்றாக சரசரவெனப் பிய்த்து பண நோட்டுக்கள் தேடினான்.

என் 15 வயதுப் பேரப் பெடியன் இரண்டாவது தட்டில் தொடர்வாரியாக பைண்ட் பண்ணியிருந்த கலைமகளில் வெளி யாகி கனத்த வாசகரின் கவனத்தை ஈர்த்த எனது கரை வாகு வன்னியன் காவியத்தை பரபரவெனப் பியத்தெறிந்து பைல்களை மட்டும் சேகரித்துக் கொண்டிருந்தவன் போதாத தற்கு- “ம்மா...பாரங்கா... மூத்தப்பாட பேரு கள்ளாப் பொஞ்சாதியாம்....என்றான்..

“கள்ளாப் பொஞ்சாதி..யில்லடா மகன்.. கலாபூஞ்சனம் டா.. --

பட்டம் கெடைச்சயாம்.. அந்நரம் குடுத்த அய்யாயிரம் காச என்னஹா செஞ்ச ம்மா...? என்று அவள் தாயிடம் கேட்டாள்.

என் மனைவி- "அந்தக் காசிக்கித்தான் ன்னொரு பொத்தகம் என்னது...? கவடப் பொறா அச்சடிச்சி நட்டப்பட்டு ஹ்க்க்க்ம்ம்ம்ம... என்ட உள்ளதும் ஒரு தோட்ட வித்து கடன அடச்ச...ஹ்ஹ்ஹ்க்க்க்ம்ம் என்று எப்போதோ இழந்து போன தன் நகையை நினைத்து ஒரு பாட்டம் அழுதாள்..

பேரன் கவடப் பொறா ல்ல மூத்தம்மா... பாரு.. கானா பானா டானா ப்பன்னா ப... ற... வையன்னா ..ஙா.... க..ப..ட..ப்..ப..ற..வை..கள். கபடப்பறவைகள்...ண்டா என்ன கருத்து வாப்பா...? -தன் தந்தையிடம் கேட்க.. அவன் என் இரண்டாம் மருமகன் சட்டென-

"அதூஊ...கவடப் பறவ எண்டா மௌத்தான ஒங்கு மூத்தப்பாட கவட்டுக்குள்ள பறவ பறந்தயாம்... -என்று எவ்வித இங்கிதமுமின்றிச் சொல்ல-- என் மகள் அவனைக் கடிந்து"

"மௌத்தான ஆக்கள அப்பிடிச் சொல்லப் போடா.. ஒவ்... என்றாள்..

இப்போது முதலாவது அலுமாரியின் மூன்றாம் தட்டுக்குள் புகுந்து குடைந்து கொண்டிருந்த என் மூத்த மகளோ .."ஹச்சீ..ய்க்.. என்று தும்மிக் கொண்டு-" இதப் பாத்தியா.. போட்டோ அஞ்சாறு... வாப்பாவப் பாத்தியா... கலாபூசன விருதுபெற்ற கவிஞர் கமர்தீன் கலாசார அமைச்சர் தென்னக்கோன் அவர்களுடன்... பாத்தியா... இதப்பாருங் களன்... பனியில் தீப்பொறி கவிதை நூல் வெளியீட்டு விழாவில் புரவலர் தாஸிம் அமர் அவர்களுடன் நூலாசிரியரும் ஏனையோரும்.. அப்ப ந்தப் பொத்தகத்துல காசி கனக்கயாக் கெடச்சிரிக்கிமே.. அதெங்கஹா...ம்மா...?

"...தெரியா புள்ள.. அஞ்சி சதமும் ஊட்ட வந்து

சேரல்ல.... கேட்டா.. ந்த ரெண்டு அலுமாரியையும் காட்டி என்ட பொக்கிஷசமெல்லாம் இதுக்குள்ளதான் இரிக்கி நான் மவ்த்தானத்துக்குப் பொறகு எடு- ண்டு அந்தாள் இடைக்கிட சொல்லிட்டிருந்தாரு...” பொக்கிசம் அகப்படாத ஆதங்கத்தில் என் பத்தினியாள் போட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தாள்..

மூத்த மருமகன் இன்னொரு பக்கமிருந்த “மண்புளுக் களும் மண்வாசனையும்...” - குறுங்காவிய கைப்பிரதியை உதறியபடி- “பாரேன்... மாமாட புனைபெயர்களாம்... என்னது...? அபூ ஆய்ஷா - என்.தீரா- இலக்கியக் கண்டு.. இதுக்கு மட்டும் பஞ்சமில்ல... இதப் பாரு... கிராமிய அலை களால் இரையும் கடல்... அள்ளிச் சுருட்டியது ஆழிப் பேரலை.. சுனாமி காவியம்... எழுதிக் கிளிச்சான் மிச்சம் சுனாமியில குடுத்த நிவாரணச் சாமான் வாங்கப் போக வெக்கப்பட்டு வெட்டைக் கிறங்கல்ல மாமா... என்றான்.

“அது ஏனுண்டா... ரெண்டு அலுமாரிக்கயும் ந்தப் பெரிய பொக்கிசங்கள வெச்சிட்டுப் போனா ஆரும் புகுந்து கொள்ளடிச்சிருவான்...அந்தப் பயம்... வந்த நாசமத்த சுனாமி ந்தப் பொத்தககக் கட்டுகளக் காணல்லையே...” என்று ஒரு அனுதாபமுமின்றிச் சுட்டெடுத்தான் மூத்த மருமகன்..

“ம்ம்.........எல்லாம் பாத்தாச்சி.. பொக்கிசமுமில்ல..ஒரு பண்டயம் ல்ல.. .”

“பிரிச்சான் மிச்சம் ஒரு பண்டமுமில்ல.. டேய்.. சப்ரான்.. எல்லாத்தையம் கூட்டிக் கட்டி ஒரு ஆட்டாவுல ஏத்திக் கொண்டு போய் நாடானுட்டக் குடுத்துட்டு தாரத்த வாங்கிட்டு வா.. வசிச் செலவுக்காச்சும் ஒட்டும்...”

“என்ன...? அப்ப ஒண்டும் ல்லியா... நல்லாத் தேடி பாத்திட்டீங்களா.. அவரு.. ந்த ரெண்டு அலுமாரியையும் காட்டி என்ட பொக்கிஷசமெல்லாம் இதுக்குள்ளதான் இரிக்கி யெண்டு சொன்ன பச்சைப் பொய்யா....” என் சகதர்மினி பயங்கரமான ஏமாற்றத்தடன் காணப்பட்டாள்..

"ரெண்டு அலுமாரிக்கயும் அவர்ர அஞ்சாறு பைல் மட்டையும் அவர்ர ரெண்டு கொட்டயும்தான் இரிக்கி.. மர அல்மாரிய நான் எடுக்கன்.. இரும்பு அலுமாரிய நீ எடு..."- பாகப் பிரிவினை அவ்விடத்திலேயே முடிந்தது.

எல்லோருக்கும் ஓசியில் கொடுத்துவிட்டு ஒன்றே ஒன்று மிஞ்சியிருந்த எனது சாகித்திய விருது பெற்ற கபடப் பறவைகள் கவிதைத் தொகுதியின் மீது எனது பேரக் குழந்தை ஒன்று ஏறியிருந்து பீமூத்திரம் அடித்தபடி நக்கரைத்துக் கொண்டிருந்தது... இதற்கு மேலும் என்னால் இதுகளைப் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை..

என் உயிர்ப்பறவை பறந்த பின் வீட்டில் வாழும் கபடப் பறவைகளின் நடத்தைகளைக் கண்டு சகியாமல் விர்ரெனப் பறந்து என் புதைகுழியில் போய்ப் புகுந்தேன்.. என்னை மௌத் ஆக்கியதற்கு மிக்க நன்றி இறைவனே... என்று துதி செய்து கொண்டே நெடுந்துாக்கத்தில் ஆழ்ந்தேன்...

ஞானம்- டிசம்பர்-2015 இதழில் பிரசுரமானது

# ஆத்துமீன் ஆசை

கடந்த ஒருவாரகாலமாகச் சரியாகச் சாப்பிடாமல், மசக்கையாயிருந்த மனைவி மரியம்பீவி இன்று திடீரென ஆத்துமீன் சாப்பிட ஆசைப்பட்டாள். வாய் விட்டுக் கேட்டும்" விட்டாள். ஆனால் றாபிக் மாஸ்டர் கடைசிச் சீட்டுக் காசையும் கொடுத்து விட்டு, மீதியாயிருந்த சில்லறைப் பணத்துடன் நிம்மதியாகவிருந்தார். அப்போதுதான் மரியமுக்கு இந்த ஆத்துமீன் ஆசை வந்துவிட்டது. கைப்பையை இவரிடம் நீட்டிவிட்டு, கெஞ்சுதலாக ஒரு பார்வை பார்த்தாள். அடுத்தகணம் இவரிடம் கைவசமிருந்த நூறு ரூபாய், எங்கோ புத்தக இடுக்கில் ஐம்பது ரூபாய். .. வேறென்ன செய்ய..? அவரது விதி அவரை உந்தித் தள்ளியது. கோடீஸ்வரர் சந்தைக்கு வந்து விட்டார். சேர்ட் பைக்குள் வெறும் நூற்றி ஐம்பது ரூபாய் வெட்கத்துடன் ஒழிந்திருந்தது.

"கோடீஸ்வரர் சந்தை" என்றும், "டொலர் மார்க்கட்" என்றும், விகடமாகக் குறிப்பிடப்படும் எங்கள் பள்ளியடி மாலைச்சந்தை முக்கியத்துவமிக்க பிரதான வீதியில் அமைந்திருந்ததால், அதன் "சந்தைப் பெறுமதிகள்" அதிகம். பிரதான வீதிப் போக்குவரத்துப் பிரயாணிகளையே பெரும் பாலும், வாடிக்கையாளராகக் கொண்டதால் அவசர கொள் முதல் அதிகம். பேரம் குறைவு. சொன்ன விலைதான் பெரும்பாலும். சிறிது தாமதித்தால் அடுத்த பிரயாணியிடம் கறியை இழந்துவிடுவீர்கள்.

கொழும்பு மனிங் மார்க்கட்டில் அறக்குளா மீன் கிலோ ஐநூறு ரூபாய் என்றால், இங்கு எழுநூற்றி ஐம்பது ரூபாய் விற்கும். முட்டை ஒன்று ஆறு ரூபாய் என்றால், இங்கு, பத்து ரூபாய். இப்படிச் சகல மீன்கள், மரக்கறி, வகைகள் யாவுமே கண்டிப்பாக உச்ச விலையில் விற்பதும், வாங்குவதுமே இங்கு வாடிக்கை. சாதாரண கீரிமீனின் விலையே கிலோ முன்னாறுக் குப் போகும் என்றால், அபுர்வமாகவே அகப்படும் ஆற்றுப் படுக்கையில் பிடிக்கும் மீன்களின் பெறுமதி சொல்லுந்தர மன்று..

றாபீக் மாஸ்டரைப் போல ஒரு சாமான்ய குடும்பத் தலைவருக்கு இங்கு என்ன வேலையிருக்க முடியும்...? றாபிக் மாஸ்டர் சாதாரணமாக இங்கு வருவதில்லை. இன்று, மனைவியின் அன்புநிர்ப்பந்தம் காரணமாக வந்திருந்தார்.

அச்சத்துடன் சந்தையை தூரத்தில் சைக்கிளில் நின்றவாறே உற்றுப் பார்த்தார். ஆத்து மீன் கொட்டப் பட்டி ருக்கும் அங்காடிப் பக்கமாக சற்றே கடைக் கண்ணெறிந்து நோட்டமிட்டுக் கொண்டார். முன்யோசனையின்றி நேரடி யாகச் சென்று ஆத்துமீன் விலை கேட்டால், மேனி நடுங்கும். மீனவத் தமிழில் பிலால் நாறும்.

றாபீக் மாஸ்டர் ஆத்துமீன் கும்பத்தை நோக்கி வெகு முன்ஜாக்கிதையாக முன்னேறினார். ஆற்று மீன்களான சுங்கான், பனையான், குறட்டை, விரால், கெளுத்தி வகையறாக்

கள் வகை பிரிக்கப்பட்டு பரப்பியிருந்தன. துடித்துத் துள்ளிக் கலந்தன. பனையான்களை ஒரு குச்சி யினால், கவனமாகப் பிரித்துக் கொண்டே மீனவன் கூவினான்.

"ஙா.. துடிக்கத் துடிக்க.. துடிக்கத் துடிக்க.."

துள்ளிய சுங்கானின், தலையில் பாவ புண்ணியம் பார்க்காமல், "நச்"சென்று அடித்து நசுக்கிய மீனவன், "எடுங்க... எடுங்க.. ஆத்து மீன் எடுங்க... போனா வராது... கறி போனா வராது.. கிலோ எடுங்க கொறைச்சித் தாரன்.. கெலோ சுங்கான் நாநூறு.. பனையான் இருநூத்தம்பது.. கெளுத்தி சோடி முன்னூத்தம்பது.. செனைக் கெளுத்தி.. கறிக்கு சும்மா அந்த மாதிரி இரிக்கிம்.. ஓவ்...!

என்று எதிர்வு கூவினான். தவிரவும், ஆக்கி முடித்த பின், கெளுத்தி மீனின் தலையை எப்படி உறுஞ்சி உள்ளுறைவு களைத் துப்புரவாக்க வேண்டும் என்று ஒரு செய்முறைப் பயிற்சியையும் முற்றிலும் இலவசமாகச் செய்து காட்டினான். றாபீக் மாஸ்டரின் வாய்க்குள் எச்சில் ஊறியது. கூடி நின்றோர் பேசாமல் விலை வைக்கப் பயந்து மீன் வகையறாக்களையே சும்மா பார்த்துக் கொண்டிருக்க, அலுத்துப் போன மீனவன்,

"சும்மா சும்மா விடுப்புப் பாக்காம கேளுங்களன்டா ஆக்களே..ய்... வாய்க்க என்ன முட்டடப்பனா..?"

என்று அவர்களை வலிந்து பேரத்துக்கு அழைத்தான். அவன் கையில் வைத்திருந்த செங்கல்லுக்கும், அவனது செஞ்சொல்லுக்கும் பயந்து அனைவரும் பதிலின்றிப் புன்னகைத்தனர். றாபீக் மாஸ்டர் நன்றாக தலையை சனக் கூட்டத்துள் மறைத்துக் கொண்டார். அதுதான் ஆபத் தாயிற்று.. இவரது தலைமறைவைச் சட்டென அவதானித்த மீனவன். நேரடியாக, றாபிக் மாஸ்டரை நோக்கி,

"ஞா.. கணக்குச் சேர்.. முன்னுக்கு வாங்க.. வெலாங்கு மீனப் போல தலைய ஒழிக்காதீங்க.. நெல்ல கறி எடுங்க.. சுங்கான் அரக்கெலோ போடுவமா..? கெளுத்தி..? கடுகு போட்டு சொதி வெச்சா சாள வாய் ஊறும்.. ஏளு ஊட்டுக்கு

மணக்கும்.. காக்கெலோ தரயா..?"

"இல்..ல.. வந்..தூா.."

"அப்ப.. பனையான்..? சதப் பளையான்.. அம்பட்டும் சதான்.. எறக்காமத்துச் சாமான்.. அரக்கெல போடயா..? பாருங்க சதைய.."

என்று "சட்டக்"கென ஒரு பனையான் மீனை இலாவக மாகப் பிடித்து, முகத்தினருகே அதன் வீச்சம் அடிக்கும் அளவுக்கு கொணர்ந்து காட்டி, நிருபணம் செய்தான். இதை எப்படிச் சமாளிப்பது..?

கூடிநின்ற சனங்கள் ஆஹா ஒரு ஏமாளி அகப்பட்டார் என்ற திருப்தியுடன், "பனையானைக் கேளுங்க மாஸ்டர்... கெளுத்திக்கு கடசி வெலயக் கேளுங்க மாஸ்டர்... கலவன் கும்பம் கடசியா ஒரு வெலயக் கேளுங்க சேர்..." என்று தத்தமது கேள்விகளையும் றாபீக்மாஸ்டரிடம் ஒப்புக் கொடுத்தனர். தாம் பாதுகாப்பாக விலகினர். அகப்பட்டுக் கொண்ட அதிர்ச்சி, முகத்தில் அப்பட்டமாகத் தெரிய, முன்னுக்கு வந்த றாபீக் மாஸ்டர் உள்ளார்ந்த பயத்துடன்,

"சரிசரி.. நியாயமா வெல சொன்னா... சனம் வாங்கும்.. நீங்க மீனுக்குத் தங்கத்துக்கு வெல சொல்றாப்பல சொன்னா சனம் வெலகி ஓடத்தான் செய்யும்.." என்று ஒரு தன்னிலை விளக்கமளித்துவிட்டு "சனங்கள் தமக்குக் கட்டுப்படியாகிற விலைக்குத்தானே கேட்கும்கள்... சரி.. இதுக்கு என்ன விலை...?" என்று குத்துமதிப்பாக ஆரம்பித்தார். இப்படி எத்தனையோ பேரைப் பார்த்துவிட்ட மீனவன், விலை ஏதும் சொல்லாமல், சும்மா சிரித்தபடி, தன் உதவிப் பையனிடம்,

"டேய், மம்மத்தம்பி... சேருக்குச் சுங்கான் போடுறா.. டே... ஒரு அர" என்று கத்தினான். அவன் வீசிய வலையில் அவசரமாகச் சிக்கிக் கொண்டார் றாபீக் மாஸ்டர்.

"சேச்சே.. சுங்கான் வேணா... பொறு... பொறு..." வலையினின்றும் தப்பிக்கத் துடித்தார்.

"அப்ப இந்த ரெண்டு கெளுத்தியையும் கட்டிக்

குர்ரோவ்... சேருக்கு..." வலை மேலும் இறுகியது.

மாட்டிக் கொண்டு துள்ளிய மாஸ்டர் எதையோ சுட்டிக் காட்டித் தப்பிக்க முயன்று.

"ல்லல்லல்லல... முதல்ல இதுர கடசி வெலயச் சொல்லு." ஆனால் அவர் தெரியாத்தனமான சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தது ஒரு பெரிய விரால் மீனை. றாபீக்மாஸ்டரின் அசாத்திய துணிவை வியந்து போன மீனவனும், கூடி நின்றோரும். "மாஸ்டருக்கு இண்டைக்குச் சம்பள நாளாக்கும்.." என்றும், "புது மாப்பிள்ள பொண்ணுக்கு மாஸ்டர் சாப்பாடு, கீப்பாடு குடுக்கப் போறாரு போல.. அதான் பெரிய விராலக் கேக்காரு.." என்றும், கற்பனை செய்துகொண்ட பொதுசனம் மீனவன் கூறப்போகும் விலையைக் கேட்டுத் தாம் மயக்கமுற தயார்படுத்திக் கொள்ள...

"ச்சா.. விராலா...? விராலா சேர் வேணும்...? இதுக்கெல்லாம் வெலகில கேக்கிறயா... சேர்... உங்களப் போலத் "திண்டுகழிச்ச" ஆக்கள் வில கேக்கிறயா...? ஊட்ட தங்கச்சி புள்ளத்தாச்சி... ல்லோ... டெ படிச்சிக் கட்றா அந்த விரால..."

மீன்சார அதிர்ச்சியில் விதிர்விதிர்த்துப் போனார் மாஸ்டர்... இப்ப என்ன செய்ய..? இப்ப என்ன செய்ய..? எப்படித் தப்பிக்க..? என்ன உத்தி..? என்ன கணக்குப் போட...? என்ன திருப்பம் நிகழ்ந்து நான் இவ்விடத்தினின்றும் தப்பித்தல் கூடும்..?

ஆனால் மீனவன் அகமகிழ்ந்து போய் "சடக்"கென அந்தப் பெரிய விரால் மீனை எடுத்து, அது இருபக்கமும் நெளிந்து துடிக்கத் துடிக்க, இரக்கமற்று அதன் மூக்கினுள் ஈர்க்குச்சி ஒன்றைச் "சரக்"கெனக் குத்தி மறுஓட்டையால் இழுத்து முடிச்சிட்டு பாதுகாப்பாகத் தூக்கிச் செல்லும் வண்ணம் தூக்கிக் காட்டினான். நீட்டினான். பைக்குள்ளிருந்த நூற்றிஜம்பது ருபாய் பணத்துடன் சேர்த்து இதயத்தைப் பொத்திக் கொண்டார் றாபீக் மாஸ்டர். மீனவன் பரபரவென

ஒரு "சொப்பிங்பேக்"கைப் பிரித்து அதனையிட்டு மகிழ்ச்சிப் பெருக்குடன் அவரிடம் நீட்டி,

"ஹஙாாங்.. வெரால் போய்ட்டுது. சுப்பர் கறி.. வெல கேக்காம சும்மா பாத்துப்பாத்து நிண்டாக்களுக்கு கறி கெடைக்க மாட்டா... நெல்ல கறி திங்கிற சேரைப் போல மனிசன் வரணும்... ஓவ். மாஸ்டர்... ந்தாங்க புடிங்க... வெரால்... நீங்க துணிஞ்சி கேட்டதுக்காக எளுநூறுவாக்குக் கேட்டும் நான் குடுக்கல்ல... ஒங்களுக்காக அம்பதக் கொறச்சிட்டு அறு நூத்தம்பது றுவாத் தாங்க மாஸ்டர்.. புடிங்க... புடிங்க.. சொணங்கினா வேறாக்கள் கேட்டுடப் போறாங்க.. ம்,.. புடிங்க.."

என அவசரப்படுத்தினான். வெலவெலத்துப் போன றாபீக்மாஸ்டர் தான் சிந்திப்பதற்காகவும், அவனைச் சற்றுத் தாமதிக்க வைப்பதற்காகவும். தன் பையினுள் கைவிட்டு, அங்கிங்கெனாதபடி எங்கும் சும்மா துளாவிக் கொண்டிருந் தார். ஆளடையாள அட்டையை வெளியிலெடுத்து மறுபடி உள்வைத்து முதலில் நூறு ரூபாயை எடுத்துக் காட்சிப்படுத்தி விட்டு மறுபடி பையினுள் துளாவினார். சட்டியில் இருந்தாலல்லவா அகப்பையில் வர.. காசை மறந்துபோய் வந்து விட்டேனப்பா என்ற தனது கடைசி ஆயுதத்தை கையாள்வதற்குத் துணிந்தார். அதைச் சொல்வதற்கான வழி யில் நேரத்தைக் கடத்தினார். ஆனால், அவரின் தாமதம் மீனவனின் பொறுமையையும், கோபத்தையும் சோதித்துக் கொண்டிருந்தது. கூடி நின்ற சனங்கள் றாபீக்மாஸ்டரைப் பரிதாபமாகப் பார்க்க அவருக்குள் கௌரவப் பிரச்சினை பற்றி எரிந்தது. இப்ப என்ன செய்ய.. என்ன செய்ய..?

"என்ன மாய்ட்டர்..? பக்கட்டப் பக்கட்ட போட்டுப் பெனையிற..? காசி..ல்லியா..? காசில்லாம மீம் வாங்க வந்தயா..? ஹிக்கிக்கீஹ்ஹ.. அதுவும் வெரால் மீன..?"

மீனவன் நிர்த்தாட்சண்யமாக ஆரம்பித்தான். றாபீக் மாஸ்டர் மகா ஆத்திரத்தடன், வாய் குளறிப்போயிருக்க

தெய்வமே நேரில் வந்தாற்போல் ஒரு திருப்பம் நிகழ்ந்தது. அவ் விடத்தில், தள்ளு வண்டியில் அமர்ந்து பிச்சையெடுத்துக் கொண்டிருந்த ஒரு முதியவர் தன் ஒற்றைக்கையால் சக்கரத்தை உருட்டிக் கொண்டே கூட்டத்துள் புகுந்து வந்தார். றாபீக் மாஸ்டரைத் தன் தள்ளு முன் சக்கரத்தால், சற்றே முட்டித் தள்ளி விட்டு அந்தப் பிச்சைக்காரர் மாஸ்டரின் பச்சடித்துப் போயிருந்த முகத்தையும், மீனவனின் கர்ணகடூரமான கெளுத்திக் கண்களையும் மாறிமாறிப் பார்த்து.. சற்றே புன்னகைத்தார். பின் மீனவனிடம்,

"என்ன மம்மது..? அந்த விராலக் குடுத்துட்டியா..? ல்லாட்டி எனக்கித் தாவன்.. எவ்வளவு..?" என்றார். றாபீக் மாஸ்டரின் காதுக்குள் தேன்மதுரத் தமிழோசை கேட்டது. அக்கணமே மீனவன் கட்சி மாறி..

"விரால் திங்கிற மனிசனப் பாத்தாத் தெரியிம்.. எளு நூறுவாக் காசிக்கி பக்கட்டப் போட்டுப் பெனையிற ஆக்கள் விலகுங்க.. வெலகு.. வெலகு.. இந்தாங்க முதலாளி.." என்று பிச்சைக்காரரின் பதவி அந்தஸ்தை ஒரேயடியாகக் கூட்டி விட்ட மீனவன், விலையையும் மேலும் ஐம்பது ரூபாயாகக் கூட்டி,

"இந்தக் காலத்துல எளுநூத்தம்பது ரூவால்லாம் ஒரு காசா...?" என்றவாறே, சற்றும் தாமதிக்காது, இன்னுமொரு "சொப்பிங்பேக்"கினுள் விராலைச் சுற்றி பிச்சைக்காரரின் தள்ளுவண்டி முன்னிடத்தில் கொணர்ந்து பவ்வியமாக தாழ் பணிந்து வைத்தான்.

"வெரால் மீன் சினைய தனிய பொரிக்கனும்... நடு வகுத்து சதைய எண்ணையில ரோஸ்பண்ணி வெங்காயம் பச்சசொச்சிக்கா போட்டு சாடயா பெரட்டி எடுக்கனும்.. மத்தத்துண்டுகள கடுகு போட்டு ஒரு ஆணம் வெச்சா நாப்பது ஊட்டுக்கு மணக்கும்... தலைய தனியா உறிஞ்சனும்... அதோடயே ரெண்டு பிங்கான் சோறு திங்கலாம்... .. சுப்பரா இரிக்கும்... என்ற பிச்சைக்காரர் தன் அழுக்குச் சீலைப்

பைக்குள்ளிருந்து, பத்து, இருபது, ஐம்பது தாள்களாக ஒரு நோட்டுக் கற்றையை உருவி, "ந்தா எள்நூத்தம்பது... புடி" என்று விசிறினார். இருகைநீட்டிப் பெற்றுக் கொண்ட மீனவன் எச்சில் ஊறிய வாயைக் கூட்டி விழுங்கியபடியே பிச்சைக் காரரின் முச்சக்கரத்தை அவருக்குதவியாகக் கொஞ்ச மாகத் தள்ளியும் விட்டான்.

பிச்சைக்காரரின் இராச்சாப்பாடு வர்ணணையில் வாய் ஊறியிருந்த சனம் பொறாமைக் கண்களுடன் ஒருவரை யொருவர் நோக்க- இந்த உச்ச திருப்பக் காட்சியைப் பார்த்து அசந்து போயிருந்த றாபிக் மாஸ்டர் மீன்காரன் திரும்பவும் தன் மீதே திரும்புவான் என்ற திடீர் ஞானோதயத்தில், அவ்விடத்தி லிருந்து. அசாதாரன வேகத்துடன், நழுவித் தலைமறையும் போது, மீனவன் தன் செஞ்சொற்களால் சொன்னது கேட்காம லில்லை. தவிரவும், அவனது மீனவச் சொற்களுக்குள் வாழ்க்கையின் தத்துவமும் அடங்கியிருந்ததை உணரவும் முடிந்தது.

"ந்தா.. விரால் மீனுக்கு வெல கேட்டும் வாங்காம, அந்தா மரக்கறிப்பக்கம் ஓடுர கணக்கு மாஸ்டருக்கு மட்டுமில்லடா ஆக்களே.. வவ்த்துல புள்ளக்காரிக்கும்.. இந்த விராலப் புடிச்சவனுக்கும், இத வாங்கி விக்கிற எனக்கும்தான் விரால் மீன் சாப்பிடக் கட்டுப்படியாகாது. இத வித்து என்ட கடன அடச்சிட்டு, இரவைக்கிச் சுண்டலோட சோறு திண்டுட்டுப் படுப்பன்... பிச்சை எடுக்கிற இந்த ஆள் ராச்சாப்பாட்டுக்குக் கூட விரால் மீன் பொரியல்... என்டால், இதென்ன புதினமான கணக்கு.. ஆரு போட்ட கணக்கு...? விளங்குதா கணக்குப் பாடம் எடுக்கிற மாஸ்டரே...ய்...?

நன்றி- வண்ண வானவில்- ஏப்ரல்-2012 இல் பிரசுரமானது.

"…. இந்த தீரதம் என்ற தொகுதி ஆர்.எம். நௌஸாத் ஒரு நல்ல சிறுகதை ஆசிரியன் என்பதற்கு மிகப் பெரும் சான்றாகும்.. ஒட்டுமொத்தமாகக் கிழக்கு முஸ்லிம் சமூகத்தின் அனுபவங்கள் இந்தக் கதைகளில் பதிவாகியிருப்பது குறிப்பிடத்தக்கது……"

பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ்
தமிழ்துறை தலைவர். தெ.கி.ப.க.

00

"… நௌஸாத்தின் சிறுகதைகளின் உயிரோட்டமான அம்சம் அவரது உரைநடை. அனுபவத்தைத் தொற்றவைப்பதற்கு ஏற்ற வகையில் தேர்ந்தெடுத்த உணர்ச்சிக் கூறுகள் நிறைந்த - அதேவேளை சமூக யதார்த்தத்திலிருந்து விட்டகலாத நடைச்சிறப்பு அவருடையது. நௌஸாத் கதைசொல்லும் முறையில் ஒரு புதுமை இருக்கிறது. புதுப்புனல் ஊற்றின் குளிர்மைப் பிரவாகம் கொள்கிறது. அவருடைய சிறுகதைகளைப் படித்து முடித்ததும் அவைதரும் உணர்வுகள் படிப்பவர் மனதில் தொற்றி நிற்கின்றன…"

டொக்டர். தி.ஞானசேகரன்
பிரதம ஆசிரியர். ஞானம்.